# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

19



கலை இலக்கிய மாத சஞ்சிகை



சித்திரை – 2010

60/=

# நதியினுள்ளே...

## கவிதைகள்

இ.சு.முரளிதரன் - 10
புலேந்தி திலீப்காந்த் - 13
நல்லை அமிழ்தன் - 13
வெற்றிவேல் துஷ்யந்தன் - 15
கண.மகேஸ்வரன் - 23
பெரிய ஐங்கரன் - 29
வை.சாரங்கன் - 32
வே.ஐ. வரதராஜன் - 34
ஏ.இக்பால் - 41

## சிறுகதைகள்

றுக்குமணி - 11
ச.முருகானந்தன் - 19
தெ.ஞானகுமார் - 30
திக்குவல்லை கமால் - 31
சூசை எட்வேட் - 35

## கட்டுரைகள்

அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் - 03
மு.அநாதரட்சகன் - 14
தி.ஞானசேகரன் - 24
எம்.சீ.நஜிமுதீன் - 33
யுகமாயினி -42
யோகேஸ்வரி சிவப்பிரபாசம் - 46

## நேர்காணல்

பேராசிரியர் ம.இரகுநாதன் - 16

## நூல் விமர்சனம்

தேவ முகுந்தன் - 44

## பேசும் இதயங்கள்

அட்டைப்படம் - உள் ஓவியங்கள்
(நன்றி இணையம்)

# ஜீவநதி

2010 சித்திரை இதழ் - 19

**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**துணை ஆசிரியர்**
வெற்றிவேல் துஷ்யந்தன்

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய்
இலங்கை.



**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா



**தொலைபேசி** : 0775991949
0778134236

**E-mail** : jeevanathy@yahoo.com

**Fax** : 0212263206

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
HNB - Nelliady Branch
A/CNo.118-00-02-0945701-1



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

*- ஆசிரியர்*



ஜீவநதி
(கலை இலக்கிய மாத சஞ்சிகை)


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## சித்திரைப் புத்தாண்டே வருக!

ஒவ்வொரு வருடமும் சித்திரையில் பிறக்கும் புத்தாண்டை வாழ்த்தி வரவேற்பது எங்கள் மரபு. ஆனால், இம்முறை பிறக்கவிருக்கும் சித்திரைப் புத்தாண்டு எதனைக் கொண்டு வரும் என்ற எதிர்பார்ப்பு இன்று எம் எல்லோரிடமும் உள்ளது.

சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னதாக இந்த நாட்டின் பொதுத் தேர்தல் முடிவுகள் வெளிவந்துவிடும். என்றுமில்லாதவாறு அதிக எண்ணிக்கையானோர் இம்முறை தேர்தலில் களம் இறங்கியுள்ளனர். இது ஜனநாயகத்தைப் பிரதிபலிக்கின்றதா அல்லது ஒற்றுமையின் சிதைவைக் காட்டுகின்றதா என்பதற்கு காலம் தான் பதில் கூறவேண்டும்.


சித்திரைப் புத்தாண்டு குறித்த ஜீவநதியின் எதிர்பார்ப்பை இங்கு பொறிக்கும் வேளை

'பேசாப் பொருளைப் பேச நான் துணிந்தேன்
கேட்கா வரத்தை கேட்க நான் துணிந்தேன்'

என்ற பாரதியின் வரிகளே நினைவுக்கு வருகின்றன. 'பூமண்டலத்தில் அன்பும் பொறையும் விளங்குக. துன்பமும் மிடிமையு நோவுஞ் சாவு நீங்கிச் சார்ந்த பல்லுயிரெல்லாம் இன்புற்று வாழ்க' என்ற பாரதியின் இறைஞ்சல் ஒரு சமூக இலக்கியப் படைப்பாளியின் ஆதமீ தரிசனம் ஆகும்.

ஜீவநதியும் எம் எல்லோரினதும் துன்பமும் மிடிமையும் நீங்கிய இன்பமான வாழ்வையே அவாவுகிறது. ஜீவநதியின் வாசகர்களுக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

*- ஆசிரியர்*



# பஞ்சமரியல் ஒரு புதிய அணுகுமுறை

அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின்

## சொற்களின் அறிமுகம்

'தலித்தியல்' எனும் சொல் இந்திய சாதி யதார்த்தங்களைக் கருத்திலெடுத்து உருவாக்கப்பட்டு இருந்தது. இலங்கையைப் பொறுத்தவரையில் தலித்துகளென்று எந்தச் சமூகக் குழுமமும் அழைக்கப்படுவதில்லை. இதனைக் கருத்தில் கொண்டும், இலங்கை நிலையைக் கருத்திலெடுத்தும் 'பஞ்சமரியல்' என்ற சொல்லை அறிமுகம் செய்கின்றேன். சாதிக்குள் சாதிபார்த்தல், இடைநிலைச் சாதியர் போன்ற யதார்த்தங்களை உள்ளடக்காதிருத்தல் என்ற வகையில் குறை உள்ள சொல்லாக இச்சொல் உள்ளதையும் ஏற்றுக் கொள்கின்றேன். அதனை நிவர்த்தி செய்யும் நோக்குடனும் சமஉரிமை அம்சத்தை வலியுறுத்தும் நோக்குடனும் சமஉரிமைதரா சாதியினர் (= எல்லாச் சாதிகளுக்குள்ளும் உயர் சாதியினர் எனக் கருதப்படுவோர்), சமஉரிமை நாடும் சாதியினர் (=எல்லாச் சாதிகளுக்குள்ளும் உள்ள குறைஞ்ச சாதியினர் எனப்படுவோர்) என்ற பதங்களை பயன்படுத்துகின்றேன். இவை நீண்ட சொற்களாக அமைகின்றமை ஒரு குறைபாடாகும். அத்தோடு உயர்சாதி எனப்படுவோருள் சமஉரிமைநாடும் சாதியினருக்கு சமஉரிமை அளிக்க விரும்புவோரை இச்சொல் உள்ளடக்காமை இன்னொரு குறையாகும். உயர்சாதி எனப்படுவோரை தமிழ்நாட்டில் தற்போது 'ஆதிக்கச் சாதியினர்' என்று எழுத்தாளர் குறிப்பிடுகின்றமை கவனிக்கத்தக்கது.

## பஞ்சமரியல் வேண்டும் புதிய அணுகுமுறை

பஞ்சமரியல் பற்றிய ஆக்கங்கள் சமஉரிமை அளிக்க முன்வரவேண்டிய சாதியினரை கொடூரக்காரர், இரக்கமற்ற இதயம் கொண்டோர், அநீதி நிறைந்தவர்கள், தம் சாதிக்காக எத்தகைய கொடுமையையும் செய்யக்கூடியவர்கள்... போன்றவாறு விபரிக்கின்றதைக் காணக்கூடியதாக உள்ளது. அத்தகைய எழுத்தாளர்கள் கூறுவதில் உண்மையேதுமில்லை என்று கூறமுடியாது. இத்தகைய அணுகுமுறை மாத்திரமே கடந்த காலத்தில் பல மாற்றங்களை உருவாகியுள்ளது என்பது மறுக்க முடியாத வரலாற்று உண்மை. ஆனால் இத்தகைய கண்ணோட்டம் அன்றைய வரலாற்றுச் சூழலில் தேவைப்பட்ட ஒன்று. இன்றைய சூழலில் சாதிய சமத்துவத்தை உருவாக்க உதவுமா என்பது கேள்விக்குறி.

இன்னொரு சாராரை எதிரியாக விபரித்து உரிமைப் பிரச்சினையைத் தீர்க்கவோ அல்லது சமத்துவத்தை உருவாக்கவோ முயற்சிக்கும் எந்த ஒரு இயக்கமும் (அரசியல், சமூக, பெண்ணிய, அன்றேல் வேறு எதுவோ) எதிர்விளைவுகளை உருவாக்கும் தன்மை கொண்டது. இதனை இனப்பிரச்சினையில் தெளிவாகக் காண்கின்றோம். இத்தகைய அணுகுமுறை சமஉரிமை மறுக்கும் மறுசாராரில் எதிர் புணர்வை எழுப்பி அடைய விரும்பும் சமத்துவத்துக்கு எதிராகச் செயற்படத் தூண்டும் தன்மை கொண்டது. மேலும் அவர்கள் மத்தியில் வாழ்ந்தாலும் சமஉரிமை மறுக்கப்பட்டவர்களுக்குச் சமத்துவம் வழங்கவேண்டுமென விரும்புபவர்களையும், அதனை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுவோரையும் புண்படுத்தி அந்நியப்படுத்தும் வாய்ப்பை உருவாக்கி விடுகின்றது. அதே நேரம் உரிமை மறுக்கப்பட்டவர்களின் மனதிலும் சமத்துவ உருவாக்கத்தைக் கெடுக்க வல்ல வன்மம், பகையுணர்வு, போன்ற எதிர்மய உணர்வுகளை உருவாக்கி வளர்த்துவிடுகின்றது. அந்த வகையில் இது இருசாராருக்கும் ஊறுவிளைவிப்பதோடு அடைய விரும்பும் சமத்துவ நிலையை உருவாக்குவதற்குத் தடையாகவும் அமைந்துவிடும்.

**சாதிய சமத்துவநிலை பற்றிய கண்ணோட்டங்கள்**

சாதிய சமஉரிமை நிலைபற்றிப் பின்வரும் கண்ணோட்டங்கள் காணப்படுகின்றன:

1. சாதிப்பிரச்சினை முற்றாகத் தீர்ந்துவிட்டது. அதுபற்றி இனிக்கதைக்கத் தேவையில்லை.
2. சாதிப்பிரச்சினையில் எந்த மாற்றமும் நிகழவில்லை.கடந்த காலத்தில் நிகழ்ந்தது தற்போது புதிய வடிவங்களில் தொடருகின்றது.
3. சாதிப்பிரச்சினையின் வீறு முன்பைவிடத் தற்போது குறைந்துவிட்டது ஆனால் முற்றாகக் அழிந்து விடவில்லை.

முதல் இரண்டும் யதார்த்தத்தைக் கருத்திலெடுக்காதவை. மூன்றாவது மாத்திரமே தற்போதைய யதார்த்த நிலையாகத் தோன்றுகின்றது. இதனை ஏற்றுக்கொள்வதே ஆக்கபூர்வமான சமத்துவ முயற்சிக்கு வழிகோலும்.

**சாதிய சமத்துவ உருவாக்க முயற்சி பற்றி மனப்பாங்குள்**

சாதியப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சி பற்றிய மனப்பாங்குகளை நோக்கின் நான்கு விதமானவை மேலோங்கி நிற்கின்றன:

1. இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட வருடங்களாக ஆழமாய் வேரூன்றிய சாதியத்தை அழிப்பதென்பது முடியாத காரியம்.
2. இதைப் பற்றிக் கதைக்கக்கூடாது. அது படிப்படியாகத் தானாக மறைந்துவிடும்.
3. இயலுமானளவு முயற்சித்தால் கொஞ்சமாவது மாற்றம் ஏற்படும்.
4. தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளின் நிச்சயம் ஒருநாள் சாதிய சமத்துவம் மலரும்.

இத்தகைய மனப்பாங்குகள் தமக்கே உரித்தான உள-உறவு விளைவுகள் பலவற்றைக் கொண்டிருக்கின்றன. அத்தோடு மாற்றத்தை நோக்கிச் செயற்படுவதில் பாரிய செல்வாக்கைக் கொண்டிருக்கும். நான்காவது நிலையை ஏற்றுக்கொண்டு செயற்படுவதிலும், பிறரை ஏற்றுக்கொள்ளச் செய்வதிலும்தான் சமத்துவ சமுதாயம் உருவாக்குவதன் வெற்றி தங்கியுள்ளது. அத்தகைய முயற்சிகளின் நல்விளைவுகள் எத்தனை ஆயிரம் வருடங்களின் பின் ஏற்படும் என்பது முக்கியமல்ல. ஆனால் அத்தகைய மாற்றத்துக்கான விதைகளை விதைத்துச் செல்ல முயற்சிகள் மேற்கொள்வதே ஆக்கபூர்வமானது.

**விளைவுறுதி கொண்ட புதிய அணுகு முறை**

சாதிய சமத்துவத்தை உருவாக்குவதில் பல்வேறு துறையினரும் பின்பற்ற வேண்டிய அணுகுமுறைச் செயல் ஒழுங்கைப் பின்வருமாறு குறிப்பிடலாம் என்று கருதுகின்றேன்:

(1) தற்போதைய யதார்த்தத்தைப் படம்பிடித்துக் காண்பிப்பது. அதாவது சாதிய சமஉரிமை மறுப்பு எவ்வாறு இருசாராரையும், ஏன் முழு சமூகத்தையுமே பாதிக்கின்றது என்பதை விபரமாகப் படம்பிடித்துக் காண்பித்தல். (கடந்த காலத்தில் சாதியம் சாதிய சமஉரிமை மறுப்போரில் ஏற்படுத்தும் உள, உறவு, சமூக விளைவுகள் பற்றிக் கருத்தில் எடுக்கப்படவில்லை. சமஉரிமை மறுக்கப்பட்டோரில் ஏற்படுத்திய விளைவுகளையே இலக்கிய வாதிகள் விபரித்தனர்).

(2) சமத்துவநிலை உருவாகும்போது உளநலம், நல்லுறவு, சமுதாயத் தரநிலை, கல்வி தொழில் என்பனவற்றின் தரம் போன்றவற்றில் நிலவக்கூடிய யதார்த்தங்களை விபரித்துக் காண்பிப்பதன் மூலம் பலர் அதனை அடைவதற்கான ஆவலை உருவாக்குதல். அத்தோடு அந்நிலை உருவாக்கப்படக்கூடியது ஒன்றே எனும் மனப்பாங்கை உருவாக்குதல்.

(3) அத்தகைய சமத்துவ நிலையை உருவாக்குவதற்கு ஆதரவான மனப்பான்மை கொண்ட அனைவரினதும் (இருசாராரிலுமுள்ள) ஒத்தழைப்பையும் ஆதரவையும் பெறுவது.

(4) சமத்துவ உருவாக்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிப்போரைக் கையாளும் ஆக்கபூர்வமான வன்முறையற்ற முறைகளைத் தாயாரிப்பது.

(5) சமத்துவ நிலையை அடைய யதார்த்த பூர்வமான தீர்வு முயற்சிகளை உருவாக்குவதும் நடைமுறைப்படுத்துவதும்.

(6) விரும்பிய சமத்துவநிலையை அடைவது.

இதனைச் சமூகத்திலுள்ள பல்வேறு துறையினர் மேற்கொள்ளத் தூண்டுவதில் ஈடுபடுதல் மிகமுக்கியமானது.(இதே அணுகுமுறையை எந்த வொரு சமூகமாற்ற முயற்சிக்கும் பயன்படுத்தலா மெனக் கருதுகின்றேன்)

## பல்வேறு துறையினர் வழங்கவேண்டிய பங்களிப்புகள்

பல்வேறு துறையினரின் கூட்டுமுயற்சியின்றி சாதிய சமத்துவம் மலர்வது சாத்தியமற்றது. எனவே கூட்டுமுயற்சிகளை மேற்கொள்ளும் வழிமுறைகளை ஆராய்வது நல்லது. வெவ்வேறுதுறையினர் எவ்வாறு பங்களிப்புச் செய்யமுடியும் என்ற பரிந்துரைகளை முன்வைக்கின்றேன்:

### 1. இலக்கிய ஆக்குநர்களின் பங்களிப்பு

இலக்கிய ஆக்குநர்கள் சமஉரிமையளித்து மகிழவேண்டிய சாதியினரைக் கொச்சைப்படுத்தலைத் தொடர்ந்தும் மேற்கொள்வது நல்ல அணுகுமுறையல்லயெனக் கருதுகின்றேன். இது சமஉரிமை வழங்க வேண்டிய சாதியினரைச் சேர்ந்த முதிர்ச்சியான சிலரில் மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தலாமெனினும் ஏனைய பலரில் ஏற்கனவே அவர்கள் கொண்டுள்ள எதிர்மயமான மனப்பாங்கையும் நடத்தைக்கோலங்களையும் வலுப்படுத்துவதாக அமையுமேயன்றி நல்ல மாற்றங்களுக்கு வித்திடாது. எனவே இத்தகைய அணுகுமுறையைக் குறைத்துக்கொள்வது நல்லதெனக் கருதுகின்றேன்.

காலங்கடந்த உதாரணங்களைக் கைவிட்டுத் மாற்றமுற்ற யதார்த்தங்களை கவனத்திற்குக் கொண்டுவரும் ஆக்கங்கள் நிச்சயம் நல்ல பலன் கொடுக்கும். ஆனால் தற்காலம்வரை தொடரும் யதார்த்தங்களையும் கருத்திலெடுத்துப் பகைமையற்ற முறையில் பிரதிபலிக்க வேண்டிய கடமை இலக்கிய ஆக்குநர்களுக்கு உண்டு. ஏனெனில் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருசாராரையும் சார்ந்தவர்கள் 'சாதிப்பிரச்சினை தீர்ந்துபோய்விட்டது, இப்ப அப்பிடி ஒருதரும் பார்க்கிறேல்லை" என்று களநிலை புரியாது கூறிக்கொள்கின்றவர்களுக்கு தொடரும் யதார்த்தங்களைக் காணவைக்கவேண்டிய அவசியம் உண்டு. (அரச, கல்வி, சமய, சமூக, அரசியல்... நிறுவனங்களில் வேலை வழங்கல், பதவி உயர்வு, பயிற்சி வாய்ப்புகள், இடமாற்றங்கள்,... போன்ற விடயங்களில் எவ்வாறு சமஉரிமை பெற விரும்பும் சாதியினருக்கு அநீதி இழைத்தும் ஓரம் கட்டியும், தட்டிக்கழித்தும் மேற்கொள்ளும் உள்ளத்தைப் புண்படுத்தும் யதார்த்தங்களை வெளிப்படுத்தும் ஆக்கங்கள் வெளிக் கொணரப்படவேண்டும். தம் சொந்தச் சாதியினரை பதவிகளில் தக்க வைக்க பதவி உயர்வளிக்க, பயிற்சி வாய்ப்பு வழங்க மேற்கொள்ளப் பயன்படுத்தும் யுக்திகள் மக்கள் மனதை அடையச் செய்ய வேண்டும். அதோடு நின்றுவிடாது அவற்றை இல்லாதொழிக்கும் நன்னெறி கொண்ட அணுகுமுறைகளை வெளிப்படுத்தும் ஆக்கங்களும் முன்வைக்கப்படவேண்டும்.

அடையவிரும்பும் நிலைகள்பற்றி அடிமனதில் பதிக்கப்படும் படங்களின் வழியில் மனம் இயங்கும் தன்மை கொண்டது என்பது உளவியல் வெளிப்படுத்தும் உண்மை. இதனைக் கருத்திலெடுத்துச் செயற்படுவது நல்லது. இலக்கிய ஆக்குநர்கள் தமது புத்தாக்கச் சிந்தனையாற்றல், கற்பனைவளம் என்பவற்றைப் பயன்படுத்திச் சாதிய சமத்துவ சமுதாயம் எவ்வாறு நிலவும் என்கின்ற அடையவிரும்பும் இலட்சிய நிலையை விபரமாகப் படமாகக் காண்பிப்பதில் ஈடுபடுதல் ஆரம்பிக்கப்படவேண்டிய ஒன்று. அச்சமுதாயம் எவ்வாறு மகிழ்ச்சியும் நலனும் மேம்பாடும் கொண்டதாக விளங்கும் என்பதை வாசகர் மனதில் படமாகப் பதிக்க முயலவேண்டும். மேலும் அத்தகைய சமுதாயத்தின் பல்வேறு துறைகள் எவ்வாறு உயர்ந்த தரம் கொண்டதாக அமையுமெனக் கூறி அதனை ஒரு விரும்பப்படும் நிலையாகக் காண்பித்து உணர வைப்பதிலும் வெற்றி காண முயலவேண்டும். அடுத்த கட்டத்தில், அந்நிலையை அடைவதற்கான நடை முறைச் சாத்தியமுள்ள வழிமுறைகளைப் பரிந்து ரைக்கும் ஆக்கங்களை முன்வைக்க முயற்சி மேற் கொள்ள வேண்டும். மேலும் சமத்துவத்தை ~~சமத்துவம்~~ வழங்க முயற்சித்து அதை வாழ்வில் நடைமுறை யாக்கும் பலரைக் கருத்திலெடுத்து அவர்களின் நல்ல அணுகுமுறைகளை ஆக்கங்களாக்கி முன்வைக்க வேண்டும். அவ்வாறே அவர்கள் மத்தியில் நல்மனங் கொண்டோரின் ஆதரவைப் பெறும் வழிமுறைகள், எதிர்ப்போரைக் கையாளும் முறைகள், சமத்துவம் பெறவிரும்பும் சாதியினர் சமத்துவம் உருவாக்கப் பயன்படுத்தக்கூடிய நன்னெறி கொண்ட யுக்திகள் என்பனவற்றைப் பிரதிபலிக்கும் ஆக்கங்களை தருவதிலே முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

சாதிய சமத்துவத்துக்கு எதிரான செயற்பாடுகளை வெளிப்படுத்தும் ஆக்கங்களை வெளிக்கொணர்வதில் கே. டானியல், டொமினிக் ஜீவா, செ. கணேசலிங்கன், இன்னும் பல இலக்கியவாதிகள் முக்கியமானவர்கள். (நான் இவர்களது ஆக்கங்கள் அனைத்தையும் முழுமையாகப் படித்து முடித்தவனல்ல என்பதைத் தாழ்மையோடு ஏற்றுக்கொள்கின்றேன்). இவர்களது ஆக்கங்கள் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக இடம்பெற்ற சாதிசார் அநீதிகளை, சமஉரிமை மறுப்புகளை, கொடூரங்களை ஆவணப்படுத்தியுள்ள தோடு அவற்றில் மாற்றங்களையும் கொண்டுவர முயற்சித்துள்ளன, அதில் பெரும் வெற்றியும் பெற்றுள்ளனர். ஆனால் இவர்களது அணுகுமுறை யானது சமஉரிமை வழங்க வேண்டியவர்கள் அதாவது பஞ்சமர்களையும் ஏனைய இடைநிலைச் சாதியினரை யும் சமஉரிமையுடன் வாழ அனுமதிக்காதவர்களை எதிரிகளாகக் காண்பிக்கின்றதான தோற்றப்பாட்டைக் கொடுக்கின்றன.

கே.டானியல் தன் ஆக்கமொன்றில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரைச் சித்தரிக்க எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது. அதாவது சமத்துவம் வழங்க வேண்டிய சாதியையே சார்ந்த கத்தோலிக்க மதகுரு ஒருவர் அதுவும் சாதியம் மிக இறுக்கமான நிலையில் விளங்கியபோதே சமத்துவம் பெறமுயன்ற சாதியினரின் சமூகமேம்பாட்டுக்கு அளித்த சேவையைக் குறிப்பிட்டுள்ளார். அதாவது சமத்துவம் வழங்க வேண்டிய சாதியைச் சேர்ந்தோரிலும் உயர்ந்த மனம்கொண்டவர்கள் வாழ்கின்றதை பிரதிநிதித்துவப் படுத்திக் காட்டியுள்ளார் என்றே கூறவேண்டும். கத்தோலிக்கக் குருவான அருள்திரு அன்ரன் மத்தயாசின் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் பணிபற்றிய ஆய்வில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் இத்தகையை பணியை வெறும் மதம்பரப்பும் முயற்சிகாகமட்டும் செய்யவில்லை சாதிய சமத்துக்கான முயற்சியாகவும் மேற்கொண்டார் என்பதைத் தன் ஆய்வுக்கட்டுரையில் தெளிவாக விளக்கியுள்ளார் (காண்: The Catholic Church in Jaffna (1875-1912) with special reference to the mission of Fr.S. Gnana Pragasar). தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு பென்ஜமின் ஜெயராஜா (காண்: பஞ்சமரும் சமூகத் தொடர்புகளும். மார்ச் 2004), ஆக்கங்கள் சமஉரிமையளிக்க வேண்டிய சாதியைச் சார்ந்த வெவ்வேறு உயர் பண்பாளர் எவ்வாறு பஞ்சமர்கள் சமத்துவம் பெற முயற்சிகளை மேற் கொண்டனரென ஆவணப் படுத்தியமை விதிவிலக்கான நல்ல அம்சமாகக் கொள்ளப்பட வேண்டும். இத்தகைய அணுகுமுறையை வலுப்படுத்துவது நல்லதென்று கருதுகின்றேன். அண்மையில் சந்திரகாந்தா முருகானந்தன் (காண்: ஜீவநதி மாசி. 2010. 8-10) எழுதிய 'தீ' எனும் சிறுகதையில் ரவீந்திரன் எனும் பாத்திரப்படைப்பின் இத்தகைய அணுகுமுறையை முயற்சித்துள்ளார் என்பது தெளிவு. இத்தகைய ஆக்கங்கள் பல வெளிவர வேண்டும். இதனை தமக்குச் சாதகமாகச் சில சமஉரிமை வழங்கவேண்டிய சாதியினர் துர்ப்பிரயோகம் செய்யக்கூடும் எனினும் நல்ல பங்களிப்புச் செய்தவர்களை உயர்ந்த மனிதர்களாகக் காண்பிப்பது இவர்களின் இப்பங்களிப்பிற்கு நன்றி தெரிவித்து மதிப்பளிப்பதாக அமைவதோடு, அத்தகையோரின் அணுகுமுறைகளையும் நடத்தைகளையும் அறியும் ஏனையோரும் தமது தவறான மனப்பாங்கில் மாற்றத்தை ஏற்படுத்தி ஆக்க முயற்சியில் ஈடுபட உந்து சக்தியாக அமையும். இதில் சாதிய சமத்துவம் விரும்பும் இலக்கிய ஆக்குநர்கள் கவனம் செலுத்துவது நல்லது.

கவிஞர்கள் சமஉரிமை மறுத்து நடாத்தப்படும் போது சமஉரிமை மறுக்கப்பட்ட சாதியினரில் ஏற்படும் மனப்புண்களை விபரிக்கும் ஆக்கங்கள் படைப்பது நல்லது. இது அவர்களின் வேதனைகளை சமஉரிமை மறுக்கும் சாதியினர் சரியாகப் புரிந்துகொள்ளப் பங்களிப்புச் செய்யும். அவ்வாறே சமத்துவ சமதாயத்தை விரும்பச் செய்யும் ஆக்கங்களையும் முன்வைக்க முயற்சிக்க வேண்டும். சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் வழிகளைக் காணவைக்கும் கவிதைகள் வெளிவரவேண்டும். கட்டுரையாளர்களும் அத்தகைய முயற்சியில் இறங்க வேண்டும். சாதி மாறிக் காதலிப்போர் அதை எவ்வாறு வெற்றிகரமாகக் கையாளுவது, சாதி தெரிந்த பின் கைவிடப்பட்டவர்கள் தம் அனுபவத்தை நல்ல முறையில் கையாளும் முறைகள், சாதி மாறி திருமணம் புரிந்தோர் தாம் எதிர் கொள்ளும் பல பிரச்சினைகளை எவ்வாறு நல்ல முறையில் கையாள்வது போன்ற அம்சங்களை உள்ளடக்கிய கதைகள், நாவல்கள், கவிதைகள், கட்டுரைகளை ஆக்கும் முயற்சியில் இறங்க வேண்டும். இவையே உண்மையான சமத்துவம் நிலவப் பங்களிப்புச் செய்யும். இவற்றில் பலன் நூற்றாண்டுகள் கடந்தாயினும் நிச்சயம் பலன் கொடுக்கும்.

## 2. சமய வாதிகளின் பங்களிப்பு

எனது தனிப்பட்ட கருத்துப்படி இந்து, கிறிஸ்தவ, சமயத்துறவிகளும் தலைவர்களும் எப்போது சாதிய சமஉரிமை மறுக்கும் மனப்பாங்கு, செயற்பாடுகளை சுயஆய்வு செய்து அவற்றிலிருந்து விடுதலை அடைகின்றார்களோ அன்றுதான் சாதிய சமத்துக்கான அடித்தளம் இடப்பட்டதாகக் கருத முடியும். அதுவே தமிழ் சமுதாயத்தின் உண்மையான விடுதலையின் காலம். இவர்கள் தமது சாதிய சமத்துவ மனப்பாங்குகள், நடத்தைகள் பலரது வாழ்வில் செல்வாக்குச் செலுத்துவதை உணந்து செயற்பட வேண்டும். இவர்கள் தொடர்ந்து இவற்றைப் பேணுவதாலேயே சாதிய சமத்துவ சமுதாயம் மலருதல் நத்தை வேகத்தில் நகர்கின்றது. தவறான நியாயப்படுத்தல்கள், சுயத்தை ஏமாற்றல் போன்ற மறைமன நிகழ்வுகளை அடையாளம் கண்டு நீக்கி சமத்துவ சமுதாயம் மலர எவர் உதவுகின்றார்களோ அவர்களே உண்மையான துறவிகள் என எதிர்கால வரலாற்றில் போற்றப்படுவர்.

கிறிஸ்தவம் மனிதர்கள் இறைவனின் அன்புப் பிள்ளைகள், சகோதர அன்பு, நீதி, சமத்துவம், மனித உரிமை என்பனவற்றைப் பற்றிப் பேசுவதை வாழ்வின் யதார்த்தமாகக் காட்டும்போதே சமத்துவ சமுதாயம் மலரும் ஆன்மீகம் பெருகும்.

இந்துமதத்தைப் பொறுத்தவரையில், வர்ணாச்சிர தர்மத்தைக் கேள்விக்குள்ளாக்க பலர் முன்வரும்போதே உண்மையான இறைவன்

விரும்பும் இந்து ஆன்மீகம் உருவாகும். மனிதர் அனைவரையும் தன் பிள்ளைகளாகக் கருதும் இறைவன் பாரபட்சம் காட்டி நடத்துமாறு ஒரு தத்து வத்தை அமைத்துக் கொடுத்திருக்க முடியுமா? என்று சிந்திக்க ஆரம்பிப்பது நல்லது. வர்ணாச்சிர தர்மத்தைக் கேள்விக்குள்ளாக்காது போதிப்பது அல்லது கற்பிப்பது அல்லது ஆதரிப்பது அநீதி, சமஉரிமை மறுப்பு என்பனவற்றை வளர்க்க நேரடியாக அல்லது மறை முகமாகத் தூபமிடுவதாக அமையுமே தவிர இறைவன் விரும்பும் சமத்துவநிலையை உருவாக்க எவ்வகை யிலும் பங்களிப்புச் செய்யப் போவதில்லை. ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்ற கொள்கை கொண்ட சமயத்தில், ஒரு சாராரை ஆலயத்திற்குள் பிரவேசிக்க மறுப்பது கடவுள் விரும்பும் செயலா? மனிதர் தம் சுயநலங்களோடு உருவாக்கியதா? என்று சிந்திக்க ஆரம்பிப்பதே சாதிய சமத்துவத்துக்கான நல்ல தொடக்கமாக அமையும்.

உயர்சாதியாகக் கணிக்கப்படுவோர் அறமின்றி வாழும்போது தாழ்ந்தசாதியாகக் கணித்து நடத்தப்படவேண்டும், தாழ்சாதியைச் சார்ந்தவர் நற்பண்போடு வாழும்போது அவர்கள் உண்மையில் உயர்சாதியாகக் கணித்து நடத்தப்படவேண்டுமெனக் கூறும் சமய நூல்களின் கருத்துகள் வெளிச்சத்துக்குக் கொணரப்பட்டு அழுத்தம் பெறச் சமய வாதிகள் பங்களிப்புச் செய்ய வேண்டும். சமயத் தலைவர்கள் சமயப் பாடப் புத்தகங்களில், துறவிகள், குருக்களுக்கான பாட நெறிகளிலும் சாதிய சமஉரிமை மறுப்பின் விளைவுகள், சாதிய சமத்துவம் போன்றவற்றைத் தனிப்பாட நெறியாகக் கற்பிக்க ஆவன செய்யவேண்டும். மக்களைப் பாதிக்கும் விடயத்தைத் தொடாத எந்தச் சமயப் புத்தகமும் ஏட்டுச் சுரைக்காய்தான்.

### 3. உளவியலாளர்களின் தார்மீகக் கடமை

சாதிய சமஉரிமை மறுப்பு எவ்வாறு தனிமனித, சாதியக் குழுமங்களின் உளநலனைப் பாதிக்கின்றது என்பதை விளக்கும் தனியான பாடத் திட்டம்கொண்ட உளவியல் கல்வி தமிழ் சமுதாயத்திற்கு அவசியமான ஒன்று. தனிமனிதனின் சுயமதிப்பீட்டில், ஆளிடை உறவில், சமூக நிகழ்வு உறவுகளில், மொழிப் பிரயோகத்தில், கல்வியில், தொழிலில் எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்பதைத் துல்லியமாக ஆழமாக விளக்கும் பணி உளவியலாளர்களுக்கே உண்டு. இறுக்கமாகி உறைந்துபோய் தற்கால யதார்த்தத்தோடு தொடர்பு இழந்துபோன சாதிய நம்பிக்கைகளைக் கேள்விக்குள்ளாக்கி களநிலைக்குப் பொருத்தமான, சாதிய சமத்துவத்தையும், சமூக நலனையும் மையப்படுத்தும் மனப்பாங்குகள், நம்பிக்கைகளை உருவாக்கும் ஆற்றல் உளவிய லாருக்கு உண்டு. சிந்தனைநிலையில் ஏற்படும் மாற்றமே உண்மையில் சாதிய சமத்துவ நடத்தைகள் மனப்பாங்குகளை உருவாக்கும். சாதிய சமஉரிமை மறுக்கப்படுவோர் எல்லோரும் உண்மையில் அழுக்கானவர்களா? பண்பற்றவர்களா? படிப்பறிவற்றவர்களா? கீழ்த்தரமான தொழில் பார்ப்பவர்களா? சம உரிமை வழங்கி மகிழவேண்டிய சாதியினரில் எல்லோரும் சுத்தமானவர்களா? பண்பானவர்களா? படித்தவர்களா? தொழிலில் உயர்நிலையில் இருப்பவர்களா? போன்ற கேள்விகள்மூலம் சிந்தனையைக் கிளறிவிட்டு மனப்பாங்கிலே மாற்றங்களை உருவாக்க வேண்டும்.

முற்சார்பு எண்ணங்களைக் கற்பிக்கும்போது அதைக் 'கதையோடு கதையாகச் சொல்வதை' விடுத்துத் தனிக்கதையாகக் கற்பிக்கு முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அதாவது சாதிய முற்சார்பு எண்ணங்கள் எவ்வாறு இருசாராரதும் சுயமதிப்பீடு, ஆளிடை உறவாடல், சமூகநடத்தை என்பனவற்றில் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதை விபரமாக விளக்க ஆற்றல்கொண்ட உளவியலாளர்கள் பலர் உருவாகிட வேண்டும். காதலித்து அல்லது திருமணம் முடித்த பின்னர் சாதி தெரிந்தவுடன் கைவிடப்படும்போது சமஉரிமை இழந்தவர்கள் உணர்ச்சி, சுயமதிப்பீடு, தன்னம்பிக்கை, திருமணவாழ்வு.... என்பனவற்றில் எவ்வாறு பாதிப்புக்கு உள்ளாகின்றனர், சமஉரிமை மறுக்கப்பட்ட சாதியில் எவ்வாறு வன்போக்குக்கான வித்துகள் முளைக்கின்றன என்பது பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட உளவியலாளர்கள் முயற்சிக்க வேண்டும். சாதிய சமஉரிமை மறுப்பு எவ்வாறு இருசாராரிலும், சுயஎண்ணக்கரு, புரிந்துணர்வு, உளநலம், நீதியுணர்வு, மொழிப் பிரயோகம், சமூக உறவாடல்.... என்பனவற்றில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பது பற்றிய ஆய்வுகளுக்கு ஊக்கம் அளிக்கவேண்டும். உளவியல் புதிய பாடத்திட்டங்கள் இவ்விடயத்தை மாத்திரம் மையமாக வைத்து பாடநெறி இடம்பெறவைத்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். இவ்விடயத்தை மாத்திரம் மையப்படுத்தி உளவியல் நூல்கள் வெளிவரவேண்டும்.

### 4. உளஆற்றுப்படுத்துநர்களின் கடப்பாடு

உளஆற்றுப்படுத்துநர்கள் (உளவளத் துணையாளர்கள்) சாதிசார் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டு வருவோரை உளஆற்றுப்படுத்தவெனத் தமிழ்ப்பண்பாட்டுக்கு ஒத்த புதிய உளஆற்றுப்படுத்தல் கொள்கை, நுட்பங்கள் என்பவற்றை உருவாக்கும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பாடசாலையில் மாணவர்-மாணவர் உறவு, ஆசிரியர் மாணவர் உறவு, காதல், சாதி மாறிய திருமணம், பதவி வழங்கல், பதவி உயர்வு, பயிற்சி வாய்ப்பு என்பனவற்றில் பாதிக்கப்பட்டோருக்கு உளஆற்றுப்படுத்த புதிய நுட்பங்களை

உருவாக்கும் முயற்சிகளில் இறங்க வேண்டும். அத்தோடு இவைசார்ந்த ஆய்வுகளை மேற்கொள்ளும் முயற்சிகளிலும் ஈடுபடவேண்டும். உளஆற்றுப்படுத்தல் என்பது குறிப்பிட்ட நபர் அல்லது குழுவுக்கு மாத்திரம் சேவையாற்றுவதோடு முடிந்துவிடும் பணியல்ல உளநலம் கொண்ட சமுதாயத்தை உருவாக்குவதன் மூலமே உளநலம் கொண்ட தனிமனிதர்களை உருவாக்க முடியும் என்பதை நம்பிச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் இறங்கவேண்டும். அத்தோடு தம்மிலுள்ள சாதிய சமஉரிமைபற்றிய தவறான மனப்பாங்குகள் நடத்தைகளை அடையாளம்கண்டு கேள்விக்குள்ளாக்கி அவற்றை மாற்றும் முயற்சியையும் மேற்கொள்வதே பொருத்தமான ஆரம்பநிலைப் பங்களிப்பாக அமையும்.

### 5. சமூகவியலாளரின் பங்களிப்பு

களநிலையைக் கருத்திலெடுத்துக் கற்பிக்கப்படும் சமூகவியலே வாழ்வியல் பயன்பாடுடையதாக விளங்கும். சாதிய சமத்துவம் நிறைந்த சமூகம் எவ்வாறு அமையும் என்பதையும் அவற்றை அடைவதற்கான வழிகளையும் கற்பிக்கும் சமூகவியல் பாடமும் சமூகவியலாளரும் தான் தமிழ் சமுதாயத்திற்குத் தேவை. சமூகவியலாளர் சமத்துவ சமுதாயத்தின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய கல்வியை வழாங்குவதோடு அதற்கு வழிவகுக்கும் ஆய்வுகளை மேற்கொள்ள தாம் ஈடுபடுவதோடு தம்மிடம் கற்போரையும் தூண்டிவிட வேண்டும். வடக்குப் பிரதேசங்களிலுள்ள கடுமையான சாதிய சமஉரிமை மறுப்பு, சிங்கள, முஸ்லிம், மட்டக்களப்புத் தமிழர்கள் மத்தியில் நிலவாமலிருப்பதற்கான சமூகக்காரணிகளை அடையாளம் கண்டு வெளிப்படுத்தும் ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறே அமெரிக்காவில் நிறவெறியைத் தகர்த்து ஒபாமா ஜனாதிபதியாகும் நிலைய உருவாக்கிய சமூகக் காரணிகள், இனங்களுக்கிடையே நல்லுறவை உருவாக்க அந்நாடு மேற்கொண்ட செயற்திட்டங்கள் போன்றவற்றை ஆராயும் முயற்சிகளில் இறங்க வேண்டும். அத்தகைய ஆய்வுகளின் முடிவுகளை பரப்புதல் சமூகவியலாளரின் சமூகக் கடனாகும்.

சாதிய அடிப்படையில் வேலை வாய்ப்பு, உயர்கல்வி, பயிற்சி என்பன வழங்குதல் எவ்வாறு சமுதாயத்தை ஒட்டுமொத்தமாகப் பாதித்துக்கொண்டிருக்கின்றது, எவ்வாறு சமூக இசைவாக்கமடையா அங்கத்தவர்களை உருவாக்குகின்றது என்பதை வெளிப்படுத்தி மாற்றத்தை உருவாக்கவல்ல புதிய பாடநெறிகளை உட்படுத்தும் சமூகவியல் கல்வியே அவசியம். சாதிய அடிப்படையில் கிராமங்கள், பயனாளிகள் தெரிவுசெய்வதன் நீண்டகால எதிர்விளைவுகளை விளக்குவதாக சமூகவியல் பாடத்திட்டம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். அரச, தொண்டர் நிறுவனங்களில் பணியாற்றும்போது கொண்டிருக்கவேண்டிய சாதிய சமத்துவ மனப்பாங்குகளையும் அதனால் சமுதாயத்துக்கும் தனிமனிதர்களுக்கும் விளையக்கூடிய குறுங்கால நெடுங்கால விளைவுகள் பற்றிய விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் கல்வியை வழங்க வேண்டும். பணியாற்றும் களங்களில் சமத்துவத்தைப் பேணும் மனப்பாங்கு அற்றவர்களை விலக்கி சமத்துவம் உருவாக்குவதற்குப் பொருத்தமான மனப்பாங்கு கொண்டோரை நியமிப்பதில் கவனம் செலுத்த வைக்கும் சமூகவியல் கற்பித்தல் அவசியம்.

### 6. கல்விமான்களின் தார்மீகக் கடமை

பாடத்திட்டங்களில் சாதிய சமத்துவம் முன்னுரிமை பெற ஆவன செய்யவேண்டும். அத்தோடு சமத்துவ சமுதாயம் உருவாகுவதற்கு பங்களிப்புச் செய்யக்கூடிய முறைமைகளை அறிமுகம் செய்ய வேண்டும். கல்விமான்கள் தகவல் பரிமாறுனர்களாக அன்றி சாதிய சமத்துவ சமுதாய மாற்றத்துக்கான புதிய சிந்தனைகளை விதைக்கின்றவர்களாக மாற வேண்டும். அதாவது கல்விமான்கள் சாதிய சமத்துவத்தை அழிப்பவர்களாக அன்றி பண்பாளர்களாக உருவாகும் நிலைவேண்டும். கல்வித்திட்டக் கொள்கை வகுப்பாளர்கள், பாடநெறிகள் தயாரிப்போர் சாதிய சமத்துவத்தை உருவாக்கும் கல்வியை அறிமுகப்படுத்த முயற்சி மேற்கொள்ள வேண்டும். எந்தெந்தப் புத்தகங்கள் அல்லது பாடங்கள் இரண்டில் எந்தச் சாதியினரையாவது அல்லது இரு சாராரையும் அவமானபடுத்துவதாகவோ, தாக்குவதாகவோ அமைந்திருப்பின் அவற்றை நீக்க ஆவன செய்ய வேண்டும். ஆனால் தமது குற்றத்தைச் சுட்டிக்காட்டு கின்றதே என்பதற்காக நீக்க முயற்சிப்போரைத் தடுக்கும் ஆற்றலும் கொண்டிருக்க வேண்டும். கல்வி நிறுவனங்களின் நியமனங்களில் தரம் பேணலை முன்னிலப்படுத்திச் சாதிபார்த்து நியமனங்கள் வழங்கும் நிலை மாற ஆக்க முயற்சிகள் மேற்கொள்ளக் கல்வி மான்கள் தம் சிந்தனையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். சாதிபார்த்து நியமனம், பதவி உயர்வு.... வழங்கல் எவ்வாறு தமிழ் சமுதாயத்தின் கல்வித் தரத்துக்குக் கேடு விளைக்கின்றது என்பதை உணர ஆரம்பிப்பது நல்லது, இதய சுத்திகரிப்பில் ஈடுபடுவது நல்லது.

### 7. முகாமைத்துவக் கல்வித்துறையினரின் கடப்பாடு

முகாமைத்துவக்கல்வி தன் பாடநெறியில் சாதியம் எவ்வாறு சிறந்த முகாமைத்துவத்திற்கு

தடையாக விளங்குகின்றது. சிறந்த மனிதவள முகாமைத்துவத்துவத்திற்குச் தடையாக விளங்கு கின்றது என்பதை விளக்கி அவற்றிலிருந்து விடுபட்டுச் செயற்படும் முகாமையாளர்களை உருவாக்கும் பயிற்சியைப் பாடநெறியின் அங்கமாகக் கொண்டு விளங்கவேண்டும். முகாமைத்துவத்திலே தம் சொந்தச் சாதியினரைப் பதவியில் தக்க வைக்க, உயர்பதவி வழங்க, பயிற்சி வழங்கப் பயன்படுத்தப்படும் தனிமனித, குழு யுக்திகளை அடையாளம் காணவைக்கவும் அவற்றை முறியடிக்கவும் வழிகாட்டும் முகாமைத்துவக் கல்வியே தமிழ் சமுதாயத்திற்கு வேண்டும்.

### 8. மெய்யியலாளர்களின் பங்களிப்பு

சாதிய சமத்துவத்தை ஆதரிக்கும் சமய வாதிகள், சமூகத் தலைவர்கள், அரசில்வாதிகள், மெய்யியலாளர்களின் சிந்தனைகளை வெளிக் கொணர்ந்து சாதியசமஉரிமை மறுத்தலை ஆதரிக்கும் சிந்தனைப்போக்குகளிலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டிப் புதிய மனப்பாங்குள்ள கற்போரை உருவாக்க மெய்யியலாளர்கள் ஆவன செய்ய வேண்டும். சமத்துவம் கொண்ட சமுதாயத்தை உருவாக்கும் புதிய மெய்யியல் கோட்பாடுகளை உருவாக்கிக் கற்பிக்க வேண்டும். சோக்கிரட்டீசின் தற்போதைய நடை முறையை, சிந்தனைப் போக்குகளைக் கேள்விக் குள்ளாக்கும் முறையைப் பயன்படுத்துவதுபற்றி யோசிக்கலாம்.

### 9. அரங்கியலாளர்கள்,படத்தயாரிப்பாளர்களின் தார்மீகக் கடமை

அரங்கியலாளர்கள் ஒரு கட்டத்தில் சாதிய சமஉரிமை எவ்வாறு தனிமனிதனையும் சமூகத் தையும் ஒட்டுமொத்தமாக அழித்துவருகின்றது என்ற யதார்த்தத்தையும், சமஉரிமை அளித்து மகிழவேண்டிய சாதியைச் சார்ந்தவர்களுள், ஏனைய சாதியினரை சமமாக நடத்தி வெற்றிகண்டோர், சமஉரிமை மறுக்கப்பட்டோரின் கல்விக்கும் சமூக முன்னேற்றத் துக்கும் பங்களிப்புச் செய்தோர் போன்ற உயர்ந்த மனிதர்களைக் கதாநாயகர்களாகக் கொண்ட நாடகங்கள், படங்களை அரங்கேற்றும் முயற்சியில் ஈடுபடவேண்டும். மேலும் தமக்குத் தீங்கிழைக்கும் சாதியினருக்கே இரக்கமும் அன்பும் விசுவாசமும் காட்டி வாழும் சமஉரிமை மறுக்கப்பட்ட சாதியினரிலுள்ள உயர்ந்த மனிதர்களைக் கதாநாயகர்களாகக் கொண்ட தயாரிப்புகள் அவசியம். துப்பரவான, பண்புள்ள, பக்தியுள்ள, கல்வி, தொழிலில் உயர்நிலையிலுள்ள சமஉரிமை மறுக்கப்பட்ட சாதியிலுள்ள உயர்ந்த மனிதர்களை கதாநாயகர்களாகக் காட்டவேண்டும். சமஉரிமை மறுக்கப்பட்ட சாதியினர், சமஉரிமை மறுக்கும் சாதியினர் பற்றிய நீண்டகால நம்பிக்கைகள் எவ்வாறு யதார்த்தமற்றவை என்பதை விளக்கக்கூடிய நாடகங்களை அரங்கேற்ற வேண்டும், வீதி நாடகங்கள் உலா வரவேண்டும், சிற்பங்கள செதுக்கப்படவேண்டும், ஓவியங்கள் வரையப்படவேண்டும். தரமான தமிழ் சமுதாயத்தை விரும்பும் எந்த அரங்கியலாளர்களும் படத்தயாரிப்பாளர்களும் இதனைச் செய்யத் தவறமாட்டார்கள். (இலக்கியவாதிகளுக்கு வழங்கப்பட்ட பரிந்துரைகள் இங்கும் பொருத்தமானது)


### 10. தொண்டர் நிறுவனங்களின் கடப்பாடு

சர்வதேச தொண்டர் நிறுவனங்கள் இனரீதியான அடக்குமுறைகள், பெண்களுக்கு எதிரான அடைக்கு முறைகள், சமயரீதியான அடக்கு முறைகள், சிறுவர் துர்ப்பிரயோகம் .... போன்றவற்றை நீக்க எடுக்கும் நல்ல முயற்சிகளைச் சாதிய சமத்துவம் உருவாக்குவதில் மேற்கொள்ளவில்லை என்பது வெளிப்படையானது. இந்நிறுவனங்கள் இத்தகை சமத்துவமின்மையை நீக்க முயற்சிக்களை ஆரம்பிப்பது பற்றிச் சிந்திக்க வேண்டும். தமது நிதியில் அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுக்கும்போது சமஉரிமை மறுக்கப்பட்ட சமூகங்கள் பயனாளிகள் தெரிவில் இடம்பெறாதிருப்பதை கவனத்தில் கொள்வது நல்லது. அவ்வாறே வெவ்வேறு சமூகங்களை ஒன்றிணைத்து உறவாடச் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களை அறிமுகம் செய்யவேண்டும். பணியாட்களை உள்வாங்கும்போது சாதிய சமத்துவ மனப்பான்மை கொண்டோரை மாத்திரம் தெரிவு செய்வதில் கவனம் செலுத்தவேண்டும் என்பதைக் களஅனுபவம் வெளிப்படுத்துகின்றது. சாதிய சமத்துவம் பேணாத மனப்பாங்கு, செயற்பாடு என்பன கொண்ட உள-சமூக சேவை யாளர்கள் தம்மை மாற்றியமைக்க முயற்சிக்க வேண்டும் அல்லது ஊதியம் தரும் வேறு தொழிலை நாடுவது சமூத்துக்குச் செய்யும் நல்ல செயலாக அமையும். சமூகங்களை ஒன்றி ணைத்துச் சமத்துவம் ஏற்படுத்துவதே உண்மையான சமூகசேவைப் பணியென்பதை உணர்ந்து செயற்படும் பலர் உருவாக வேண்டும்.

### முடிவுரை:

சாதிய சமத்துவ சமுதாயம் உருவாக்குதல் என்பது தனிமனித முயற்சியாக வெற்றியளிக்கும் என்பதைவிடக் கூட்டுமுயற்சியாகவே வெற்றியளிக்கும் என்பதை உணர்ந்து பல்வேறு துறையினரை ஒருங்கிணைந்து மேற்கொள்ளும் செயற்திட்டங்களே பரந்த, விரைவான மாற்றங்களை உருவாக்கும். சமத்துவம் நிறைந்த சமூகம் மகிழ்ச்சி நிறை சமூகமாக விளங்கும். □□□

# குறும்பா



பூமிநாதர் அற்புதங்கள் கோடி
போய்நேரில் பார்ப்பதற்கு நாடி
மாமி புறப்பட்டவேளை
"சன்நியூஸில்" காண்பித்தார்
சாமியாரின் சல்லாப சீ.டி

மாண்புமிகு மந்திரியும் வந்தார்
மாங்கன்று நாட்டவேண்டிக் கந்தோர்
தோண்டுமிடம் தேடிநிற்கக்
காவலாளி "இவ்விடமே
ஆண்டுதோறும்" என்று பதில் தந்தார்

ஈழமொன்றே மூச்சென்று நின்றார்
இன்றெதற்கு வீண்பேச்சு என்றார்
வாழவழி கண்டறிந்தார்
பச்சோந்திச் சின்னத்தில்
ஆளவந்தார் தேர்தலிலே வென்றார்

வந்திருந்தான் செய்தி சொல்ல அத்தான்
அக்கா 'ஆண்' பெற்றது அறிவித்தான்
அந்திவரை அங்கிருந்தான்
சென்றபின்பு தேடவைத்தான்
சுந்தரியின் மேற்சட்டைப் பொத்தான்

ஆர்வமொடு "அட்வெடைஸில்" சச்சின்
அள்ளுவதோ பெப்ஸி கோக் "கலெக்ஷன்"
ஏர்பிடித்த ஆசியாவில்
உலகமய மாக்கலினால்
மோர் இளநீர் உள்நுழையாக் கிச்சின்

முத்துலிங்கம் ஊரைஅரசாண்டார்
பத்தினிபோய்ச் சேர்ந்தும் ஆயுள் நீண்டார்
புத்திரரும் வைத்தியராய்
வெளிநாட்டில், தீர்ந்ததிங்கு
பத்துரூபா மாத்திரைதான் மாண்டார்.

இ.சு.முரளிதரன்

# மிடிமை அழிந்திடேல்

ருக்மணி

பல்கலைக்கழகத்திலிருந்து வீட்டுக்கு வரும்போது எப்போதும் சந்தோசத்துடன் துள்ளிக்குதித்து வரும் பிரதீபா, இன்று தளர்ந்த நடையுடன் சோர்ந்து, முகமெல்லாம் வாடிப்போய் வந்திருப்பதை கண்ட தாய் அன்னலட்சுமி, பதற்றமடைந்தவளாய் மகளருகே சென்று அமர்ந்து கொண்டாள்.

"பிரதீபா ஏனம்மா ஒரு மாதிரியாய் இருக்கிறாய். முகமெல்லாம் வாடிப்போய்க் கிடக்கு. யாழ்ப்பாணத்தில் நீ, ரூமில நீண்டநாள ஒழுங்காய்ச் சாப்பிடேல போலகிடக்கு. நீ போய் உடுப்பை மாத்திக் குளிச்சிட்டு வா நான் உனக்கு புட்டு அவிச்சுத்தாறன்", என்று அவளுடைய தலையைத் தடவிக்கொடுத்தபடி கூறினாள்.

தாய் கூறுபவற்றை காதில் விழாதளவுக்கு பிரதீபா ஏதோ யோசனையிலிருந்தாள்.

வேலணையில் ஒரு சிறு குடிலில் குடியிருக்கும் பிரதீபாவின் தந்தை முடிவெட்டுந் தொழில் செய்தே, தன் நான்கு பிள்ளைகளின் வயிற்றை நிரப்பி வருகிறார். தினமும் வேலணையிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு செல்வது சிரமம் என்பதால், யாழ்ப்பாணத்தில் 'ரூம்' எடுத்து ஒரு மாதமாக அங்கு வசித்து வருகிறாள். திங்கள்கிழமைகளில் வீட்டிலிருந்து சென்று வெள்ளிக்கிழமை பின்னேரங்களில் இங்கு வந்து விடுவாள். பிரதீபா யாழ்ப்பாணத்தில் நல்ல சாப்பாடு சாப்பிட்டிருக்க மாட்டாள் என்ற நினைப்புடன், சனி, ஞாயிறுகளில் தன் மகளுக்கு சமைத்து ஊட்டி விடுவாள் அன்னலட்சுமி.

அன்னலட்சுமி, பிரதீபா குளித்துவிட்டு வந்திருப்பாள் என நினைத்து அவளுக்கு தேநீர் கலக்கிக் கொண்டு வந்திருந்தாள். பிரதீபா ஒரு நாளும் இப்படி இருப்பதில்லை. தன் சகோதரர்களுடன் சேர்ந்து தானும் சின்னப் பிள்ளை போல அவர்களுடன் ஓடியாடி விளையாடுவாள். இன்று பிரதீபாவின் தம்பி, தங்கைமார் அவளை எத்தனையோதரம் அழைத்தும் அவள் பேசாமலிருந்தாள்.

"இவள் ஏன் இன்று இப்படியிருக்கிறாள்" என்ற யோசனையுடன் அன்னலட்சுமி, அவளருகே சென்று உட்கார்ந்தாள்.

"பிள்ளை. கம்பஸில ஏதும் பிரச்சினையே என்னெண்டாலும் என்னட்ட சொல்லு நான் பார்த்துக் கொள்கிறன்."

பிரதீபா பல்கலைக்கழகம் சென்ற ஆரம்பத்தில், அங்கு 'சீனியர்மார்' செய்த பகிடிவதையினை தாங்க முடியாமல் எத்தனையோ தரம் அவள், தாயிடம் சொல்லி அழுதிருக்கிறாள். அப்போதெல்லாம், அன்னலட்சுமி தன் குடும்ப சூழ்நிலையை எடுத்துச் சொல்லி, இப்படியான சில துன்பங்களை சகித்துக் கொள்ளத்தான் வேண்டும் என பிரதீபாவை ஆறுதல்படுத்தி மீண்டும் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைப்பாள். இன்றும் அப்படி எதும் பிரச்சினையால் தான் பிரதீபா கவலையடைந்திருக்கிறாள் என்று அன்னலட்சுமி எண்ணினாள்.

"அம்மா, நான் கம்பசுக்கு போகவேணும் எண்டு ஆசைப்பட்டன். அதற்காக எவ்வளவோ கஸ்ரத்தையும் பட்டுட்டன். ஏ.எல் படிக்கும் போது எல்லோரும் ரீயூசனுக்கு போய்த்தான் படிக்கிறவை. ஆனால் நான் வீட்டில வசதி இல்லாததால் ரீயூசனுக்கு போகாமல் பள்ளிக்கூடப்படிப்பை மட்டும் நம்பித்தான் படிச்சு கம்பசுக்குப்போனனான். நீயும் அப்பாவும் என்னைப் படிப்பிச்சு கம்பசுக்கு அனுப்ப எவ்வளவோ கஸ்ரப்பட்டுட்டீங்கள். ஆனால் இந்தக் கஸ்ரமெல்லாம் கொஞ்சக்காலத்துக்கு தான் என்று நினைச்சனம்மா. ஆனால் இந்த வறுமை எங்களை விடாது. எங்க போனாலும் துரத்திக் கொண்டு தான் வரும் போலக்கிடக்கு" என்றாள் விரக்தியடைந்தவளாய்.

"பிள்ளை இப்ப ஏன் அதைப்பற்றியெல்லாம் கதைக்கிறாய். நாங்கள் அப்ப பட்ட கஸ்ரங்களுக்கு விடிவாய்த்தான் நீ கம்பசுக்குப் போனாய். இன்னும் நாலு வருசத்தால நீ உழைச்சு எங்களைக் காப்பாத்துவாய் தானே. அதற்குப்பிறகு எங்களுக்கு என்ன கஸ்ரம் வரப்போகுது. இன்னும் இரண்டு, மூன்று மாதாத்தால உனக்கு மகாபொல புலமைப்பரிசில் காசு கிடைக்கும் தானே. அது உன்ர படிப்புச் செலவுக்கு போதும் நீயும் நல்லா படிக்கிறபிள்ளை. பிறகு என்னம்மா எங்களுக்கு கஸ்ரம்"

"நீ சொல்றது சரிதானம்மா. போன கிழமை தான் என்ர ஸூம் காசு எழுநூற்றைம்பது ரூபா கட்டுறதுக்கு உன்னட்ட கிடந்த ஒரே ஒரு மின்னியான தோட்டை வித்துக் காசு தந்தவர், அப்பா. உன்ரை தோட்டை வித்தது எனக்கு கவலையம்மா. அந்தக்கவலை மாறுவதற்கு முன் இப்படியொரு நிலை எனக்கு வந்திட்டுது."

பிரதீபா கூறுவதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த அன்னலட்சுமிக்கு அவள் என்னத்தைப் பற்றி சொல்லுறாள் என விளங்கவேயில்லை எதுவுமே விளங்காத வளாய் பிரதீபாவின் முகத்தை அன்னலட்சுமி பார்த்தாள்.

"அம்மா நான் உந்தக் கம்பசுக்கு போகாமல் விட்டிருக்கலாம் போல இருக்கம்மா. ஏதாவது ஒரு வேலைக்கு போயிருக்கலாம். கம்பசுல அவங்கள், சீனியர் எண்டாப் போல ராக்கிங் எண்ட பெயரில செய்யுற சேஷ்டையல தாங்க ஏலாமக்கிடக்கு தங்களுக்கு பொம்பிளைச் சகோதரங்கள் இல்லாத மாதிரி எங்களிட்ட கேக்கிற கேள்வியல வாயல சொல்ல ஏலாது. உங்க இப்படியெல்லாம் செய்துட்டு பிறகு, பாடசாலைவழிய படிப்பிக்க போகேக்க, பிள்ளைகளுக்கு எப்படி நல்ல பழக்கவழக்கங் களை சொல்லிக் கொடுக்கப்போகுதுகளோ தெரியேல்ல." என்று ராங்கிங் செய்யும் சீனியர்மார்களை திட்டதாத குறையாக சொல்லி முடித்தாள்.

"கம்பஸ் எண்டால் அங்க 'ராக்கிங்' இருக்கும். பிறகும் உன்னோட யாரும் பகிடி செய்திட்டினமே அதே நீ ஒரு மாதிரி இருக்கிறாய்"

"அதில்லையம்மா அப்பிடிச் செய்திருந் தால் கூடப் பரவாயில்லை அடுத்த நிமிஷமே அந்த மிருகங்கள், பகிடி என்ற பேரில் செய்யும் சேட்டைகளை மறந்திடுவன். ஆனால், அங்க 'சாறி' வாரம் என ஏதோ இருக்காம். அப்படி யென்றால் ஒரு கிழமை முழுக்க 'சாறி' உடுக்க வேணுமாம். அப்பிடி அடுத்த கிழமை வரட்டாம். நான் எங்கேயம்மா சாறிக்குப் போவன்.

"பிரதீபா என்னட்ட இருக்கிற இரண்டு சாறியை மாறி மாறி கட்டிக் கொண்டு போவன் பிள்ளை. இப்ப உடனேயே எங்களான சாறிவாங்க முடியுமே! நீ பெரியபிள்ளை ஆன போது கூட சாறி வாங்க வழியில்லை. என்ரை பழைய சாறியைக் கட்டித்தானே நானும் கொப்பாவும் உன்னை பெரிய பொம்பிளையாய் பார்த்து சந்தோசப்பட்டம்" என்றவாறு முகத்தில் வழியும் கண்ணீரை துடைத்துக் கொள்கிறாள்.

"என்னோட படிக்கிற மற்றப் பிள்ளையள் எல்லாரும் இண்டைக்கு வீடுகளுக்குப்போய் தாய்மாரைக் கூட்டிக் கொண்டு போய் ஐஞ்சு நாளைக்கு ஒருசாறி என ஐஞ்சு சாறி வாங்கப் போயினமாம். பணக்கார வீட்டுப்பிள்ளையளுக்கு 'சாறி' வாரம் ஒரு திருவிழா மாதிரி. ஆனால் என்ன மாதிரி வறுமையில் வளர்ற பிள்ளையள் என்ன செய்வினம். நான் அப்படியெல்லாம் ஒரு நாளும் ஆசைப்படுறதில்லையம்மா. உன்னட்ட இருக்கிற இரண்டு சாறியையும் மாறி மாறிக் கட்டிக்கொண்டு போவம் என்று தான் நான் நினைச்சன். ஆனால் அப்பிடிப் போனாலும் அங்க பகிடி பண்ணுவினமம்மா'



"கவலைப்படாத பிள்ளை, என்ன செய்யுறது எங்கட தலைவிதி அப்படியாப்போச்சு அடுத்த கிழமை மட்டும் நீ போகாமல் நிண்டிட்டு பிறகு கம்பசுக்கு போ பிள்ளை."

"அப்படி நிற்கலாம் என்றால் நான் நிண்டுடுவன் ஆனால் அப்பிடிச்செய்தால், பிறகு இரண்டுகிழமை சாறியோட வரவேணுமெண்டு சீனியர்மார் சொன்னவை. கட்டாயம் போகத்தான் வேணுமம்மா. உன்னட்ட இருக்குற இரண்டு சாறியில, ஒரு சாறி சாயம் மங்கின மாதிரி யிருக்கும்மா அந்தச் சாறியின்ர தொங்கல் சைக்கிள் சில்லுக்குள் மாட்டி கிழிஞ்சதெல்லே, அந்தக்கிழியலும் பெரிதாகத் தெரியும். அதை எப்படிக் கட்டிக் கொண்டு போறது. உன்னுடைய மற்றச்சாறியைக் கட்டிக்கொண்டு போகலாம். ஆனால் அதுக்கு நல்ல ஒரு மேற்சட்டை தைக்கவேணும் அதுக்கு ஒரு நானூறு ரூபா வேணுமே"

பிரதீபாவின் கேள்விக்கு தான் சொல்வதற்கு தன்னிடம் ஒரு பதிலுமில்லையே என்ற வேதனையுடன் அன்னலட்சுமி தரையைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள். இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு வேண்டுமே என்ற நோக்கில் பிரதீபாவே மீண்டும் தொடர்ந்தாள்.

"ஊரில் இருக்கிற சொந்தக்காரர் எல்லாரிட்டையும் வாங்கிய கடனுகளை இன்னும் கொடுக்கேல்லை. இனிமேல் அவயளிடம் போய் நிற்க்கேலாது" என்று கூறியவள். திடீரென, "அம்மா நான் கம்பசுக்கு போகாமல் எங்கேயாவது ஒரு வேலைக்கு போகலாம் என்று நினைக்கிறன்"

என்ன பிரதீபா கதைக்கிறாய். இது ஒரு சின்ன விசயம். இதுக்குப்போய் படிப்பை விடப்போறனெண்டு சொல்றாய். இதுக்கே இவ்வளவு நாளும் கஸ்ரப்பட்டணி... ராசாத்தி ரீச்சர் இருக்கிறாவெல்லே அவ நிறைய சாறி வைச்சிருப்பா. உனக்காக இரண்டு சாறி கேக்கட்டே"

"இவ்வளவு நாளும் மற்றவையட்ட உடுக்கத் துணி தான் கேட்காமலிருந்தம். ஆனால் அந்தக் கடவுள் அதையும் கேட்க வைச்சிட்டானே. இனி என்னம்மா செய்யுறது. வேறு வழியில்லை." என்றவாறு மறுபக்கமாக தலையைத் திருப்பி வைத்துக் கொண்டு கண்களில் வடியும் நீரைத் துடைக்கிறாள்.

அன்னலட்சுமி, ராசாத்தி ரீச்சரின் வீட்டை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாள்.□□□

## காற்றின் மரணம்


அந்த வயலில்
அலைகள் நுழைந்து
உப்புக் கட்டிகளை
உவகையுடன் அள்ளும்.

இந்த வயலில்
இலைகள் நுழைந்து
வாய்க்கால் வரம்புகளை
வேட்கையுடன் கிள்ளும்

சொந்த வயலில்
குழிகள் விளைந்து
முளைத்த கதிர்களை
கோபமுடன் நுள்ளும்

எந்த நிலத்திலும்
எல்லாம் உயிர்க்காது
வந்த வலைகளிலும்
விளைந்த மணிகளிலும்
காற்றும் மரணிக்கும்
காலமும் மரணிக்கும்

புலோலி திலீப்காந்தி



## இவர்கள் சுவர்கள்

இவர்கள் சுவர்களில்
எறும்புகள் மட்டும்
ஊர்கின்றன.


சுனாமியில் அழிந்த
கிராமங்கள் போல்
இவர்கள் சுவர்கள்
எதையோ தேடுகின்றன

இடியில் உடைந்த
தலைகளில் -
நுழைந்த மின்னல்களாய்
வேர்களும் - சுவர்களில்
காய்கின்றன

அழிவுக்கு முன்னர்
வானவில்லில் -
தோரணம் கட்டிய
சுவர்கள்
ஒழிக்க முடியாமல்
இவர்களாகின்றன.

நல்லை அமிர்தன்

# இலக்கியத்தில் சமூகப் பார்வை அவசியப்பாடு பற்றிய குறிப்பு



மு.அநாதரட்சகன்

இலக்கியம் என்பது தன்னளவில் சமூகத்தின் ஒரு வெளிப்பாடாகும். அது சமூகத்தினை குறிப்பிட்ட ஒரு தளத்திலிருந்து சித்திரிப்பதோடு, அச்சமூகத்தில் தொடர்ந்து செயற்படுகின்ற சக்தியாகவும் விளங்கு கின்றது. இதனையே இலக்கியம் என்பது சமூகத்தின் உற்பத்தியென்றும், அது வரலாற்று வளர்ச்சிப்போக்கில் சமூக அமைப்புக்கும், சிந்தனைக்கும் இடையே இயக்கவியல் உறவினைக் கொண்டிருக்கின்றது என மாக்சியலாளர் கூறுவர்.

மனிதன் ஒரு சமுதாயவிலங்கு. சமூகத்தின் அங்கமாய் நிலைத்து, அதனுடன் இணங்கியும், பிணங்கியும், முரண்பட்டும் மோதியும் தனது சூழலில் வாழ்ந்து வருபவன். தனது வாழ்வியல் இருப்பின் பிரதி பலிப்பாக மேலெழும் உணர்வு நிலையின் வெளிப் பாடாக கலை இலக்கியங்களைப் படைக்கின்றான். இவ்வாறு உருவாக்கம் பெறுகின்ற கலை இலக்கியங் களில் 'சமூகப்பார்வை என்பது ஒரு பிரச்சனையை அதன் பல்வேறு பரிமாணங்களில் அணுகி தெளிவுபெற உதவுகிறது. அதாவது, சமூகத்தை அதன் மெய்ம்மை யான பரிமாணங்களில் தரிசித்து அதனைப் படைத்துக் காட்டுதலைக் குறிக்கிறது.

மனித அநுபவத்தினை அறம், ஒழுக்கம், அழகு, சட்டம், உணர்வு எனக் கூறுபடுத்தாது சமூகத்தை அதன் முழுமையான விகசிப்பில் தரிசிக்க வேண்டும் என்பதே இதன் சாராம்சமாகும்.

மாக்சியவியலாளர்கள் ஏனையோரை விட இலக்கியத்துக்கும், சமூகத்துக்குமிடையிலான உறவை மிக ஆழமாகவும், விரிவாகவும் வலியுறுத்தி வந்து உள்ளனர். மாக்சியம், நமது புறவயமான வாழ்வி யலை அடித்தளமாகவும் அதன் மேலெழுகின்ற அரசியல் சட்டம், ஒழுக்கவிதிகள், கலை இலக்கியங்கள் என்பவற்றை சமுதாய உணர்வுகளாக மேற்கட்டுமான மாகக்கொள்கின்றது. மனிதனின் சமூக இருப்பே அவனது சமூக உணர்வு நிலைகளில் ஒன்றாக அமை கிறது என்பதை பட்டவர்த்தனமாக விளக்கிநிற்கிறது.

இதனை, "மனிதர்களின் உணர்வு அவர் களின் இருப்பை நிர்ணயிக்கவில்லை. மாறாக அவர் களுடைய சமுதாய இருப்பே அவர்களின் உணர்வு களை நிர்ணயிக்கிறது'' என்ற கார்ல் மாக்சின் பிரபலமான கூற்று விளக்குகின்றது.

எனவேதான், மனிதனை அவனது சமூக உறவுச் சூழலமைவில் பொருத்திப் பார்ப்பது போலவே இலக்கியத்தையும் அதன் விளை நிலமாகிய சமூகத்தோடு பொருத்திப்பார்க்கவேண்டும் என்பதனை இலக்கியத்தில் சமூகப்பார்வை என்பது அர்த்தம் கொள்ள வைக்கின்றது.

மறுவகையில் சமூகப்பார்வையானது கலை இலக்கியங்களில் யதார்த்தவாதம் என்ற பண்பினை வலியுறுத்துகின்றது. யதார்த்தம் என்ற வடசொல், ஆங்கிலத்தில் Reality என்பதற்கு நேரிடையான கருத்தினைத் தமிழில் கொண்டுள்ளது.

இந்த 'யதார்த்தவாதம்' என்ற இலக்கியக் கோட்பாடானது சமூகத்தினை அதன் இயல்பு நிலையில் பிரதிபலித்தல் என்பதாகும். ஆக்க இலக்கிய முறையிய லான 'யதார்த்தவாதம்' சமூகத்தின் சத்திய தரிசனமாக சமூகமெய்ம்மைகளை பிரதிபலிக்க வேண்டும்.

நடைமுறைவாழ்வின் மெய்ம்மையான சாத்தியப் பாடுகளுக்கும் பகுத்தறிவுச்சிந்தனைகளுக்கும் தொடர்பற்ற கற்பனைவாத (Romantic) த்தளத்தில் கலை இலக்கியங்களைப் படைத்தும், அவற்றின் ரசனை நுகர்விலும் அமிழ்ந்திருந்தவர்களை சமூக மெய்ம்மைகளை நோக்கித் திசை கோள்படுத்த உதவியமையே இக்கோட்பாட்டின் பெறுமதி மிக்க சாதனையாகும்.

எனவேதான், சமூகச் சூழலமைவு, பண் பாட்டுக் கோலங்கள், சமூக பொருளியல் உறவுகள், அதன் அசைவியக்கம் சார்ந்த உணர்வோட்டங்கள் என்பவற்றை இயல்புநிலை கடவாது பிரதிபலிக்கும் இலக்கியமே யதார்த்தப்படைப்பு என்ற தகுதி நிலையில் நோக்கப்படுகின்றது.

அந்த வகையில், சமூகப்பார்வை என்பது கலை இலக்கியங்களில் சமூக யதார்த்தத்தினை வலியுறுத்தி வருகின்ற கருத்துநிலை எனலாம். படைப் பாளி ஒருவன் தனது படைப்பிற்கான கருப்பொருளை தெரிவு செய்யவும், தனது அழகியல் அனுபவ விகசிப் பினை பிரஞ்ஞைபூர்வமாக வெளிப்படுத்தவும், உருவ உள்ளடக்க உத்திகளைத் தெரிவு செய்வதற்கும் யதார்த்தவாத முறைமைக்குள் சுதந்திரமுள்ளவனாக செயற்பட முடிகின்றது.

சமூக யதார்த்தளத்தினை விட்டு ஒரு படைப்பாளி அந்நியப்பட்டிருக்க முடியாது. அவன் சமூகத்தில் எப்பொழுதும் தனித்து இயங்குவதில்லை. அவனுக்குள் தன்னளவில் பல அம்சங்களில் சமூகம் இயங்குகின்றது. சமூகத்தில் உள்ளமைந்த முரண்களின் இயக்கம்தான் ஒருவனைப் படைப்பாளியாக்குகின்றது. வரலாற்றிலிருந்து படைப்பாளி ஒருவன் படைப்பாற்றல் குறித்த தூண்முதல்களைப் பெறுவதைப் போலவே, நிகழ்காலச் சமூகத்திலிருந்தும் அதனைப் பெறுகின்றான். இதனால், அவனது படைப்புக்களில் சமூகப்பார்வையென்பது தவிர்க்கமுடியாத நியதியாகி விடுகிறது. தவிர, நிகழ்கால வாழ்வில் முதன்மைபெறும் சமூக அரசியல் தத்துவார்த்தப் பிரச்சினைகளின் பால் படைப்பாளியின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அந்தவகையில் கலை இலக்கியங்கள் சமுதாய முன்னேற்றத்துக்கான உள்ளடக்கங்களைக் கொண்டிருப்பது அவசியம். அவை கால அளவிலும், இட அளவிலும், உலக அளவிலும் தனக்கான விரிவான சமூகப்பார்வையைப் பெறுவதற்கான முற்போக்கான பங்களிப்பினை வழங்குவது படைப்பாளிகளின் சமூகக் கடமையாகும்.

# சிறகு நனைந்த பறவையாய்

ஒடிந்த மனதின்
சின்னஞ்சிறு துகள்கள்
கண்ணீராய் வழிய
நொறுங்கிப்போன
நெஞ்சோடு
புலர்ந்து விடுகின்றது
எனக்கான
நித்திய விடியல்கள்.
என்னுடைய வார்த்தைகள்
அர்த்தங்களின் வரையறைக்கு
உட்படாதவையாய் இருந்து விடலாம்
ஆனாலும்
என் உணர்வுகள் அப்படியல்ல
என் வாழ்வு மீதான
சில கனவுகள், கற்பனைகள்
தற்காலிகமாக
கலைந்த போதும்
எப்போதும் போல
என்னை ஆற்றுப்படுத்துபவை
எழுதுகோலும்
வெள்ளை காகிதமும் தான்.
என்னையும்
என் கவிக்குழந்தையையும்
கிண்டல் செய்திடும்
வீணர்களே
வாழ்க்கை பற்றிய



புரியாத வேதாந்தங்கள்
எனக்கு வேண்டாம்
உங்கள் கற்பனையில்
உருவத்தை சிற்பமாய்
என்னை எண்ணிவிடாதீர்கள்
கடலில் ஆழத்தையும்
இமயத்தின் உயரத்தையும்
கண்டறிந்த மனித சமூகத்திற்கு
மனித மனங்களை ஏன்
கண்டறிய முடியாமல்
போனது.
குதறப்படும் இரவுகளோடு
கூடிக்குலாவிடும்
சிறகு நனைந்த பறவையின்
வாழ்வாய் செல்கின்றது
என்னுடைய வாழ்வு
தீருங்கள் தீருங்கள்
உங்கள்
கொடிய வார்த்தைகளை
கொட்டித் தீருங்கள்
எழுவேன் எழுவேன்
புதிதாய் முளை விடும்
என் சிந்தனைத் துடிப்போடு
பயணிப்பேன்
எனக்கான வாழ்வியல்
நீரோட்டத்தில்.

வெற்றிவேல் துஷ்யந்தன்

## நேர்காணல்

பேராசிரியர் ம.இரகுநாதன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர். அப்பல்கலைக் கழகத்திலேயே M.A, Ph.D பட்டங்கள் பெற்றவர். வன்னி நாட்டு கோவலனார் கதை பற்றியும், ஈழத்துத் தமிழ் நாவல் பற்றியும் ஆய்வு செய்துள்ளார். நவீன இலக்கியத்தில் ஈடுபாடுடைய இவர் ஆய்வுக் கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார். இவரைப் பேட்டி காண்பதில் ஜீவநதி பெருமை கொள்கிறது.



சந்திப்பு : க.பரணீதரன்

**1) தமிழ்த்துறைப் பேராசிரியராக அண்மையில் தகைமைசார் உயர்நிலை அடைந்திருக்கின்றீர்கள். உங்களுடைய துறை சார் பங்களிப்புகள் பற்றியும், தங்களைப் பற்றியும் கூறுங்கள்?**

நான் வன்னி மண்ணின் பழம்பெரும் கிராமமான முள்ளியவளையிற் பிறந்தவன். யாழ்ப்பாணம் எனக்குப் புகுந்தவீடு. வன்னிப்பிரதேசத்திலேயே கல்வியாலும் கலையாலும் வளம்பெற்ற கிராமம் முள்ளியவளைக்கிராமம் . வன்னிமண்ணுக்கு வளமூட்டியது முள்ளியவளையிலுள்ள வித்தியானந்தக் கல்லூரி. இலங்கையில் வேறு எங்குமே காண முடியாத அளவுக்கு கலை நுட்பத்துடன் அமைக்கப்பட்ட இக்கல்லூரி ஆரம்பத்தில் ஆங்கிலப் பாடசாலையாக இருந்து 1960 இன் பின்னரே தாய்மொழி மூலப் பாடசாலையாக மாற்றப்பட்டது. இப்பாடசாலையிலேயே க.பொ.ஃத.உயர்தர வகுப்புவரை கல்விகற்றேன். 1980 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டேன். பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டில் தமிழ், பொருளியல், புவியியல் ஆகிய பாடங்களைப்படித்தேன். பேராசிரியர் கைலாசபதி சிலப்பதிகாரம், இலங்கையர் கோனின் சிறுகதைகள் ஆகியவற்றைக் கற்பித்தார். போரசிரியர். சிவத்தம்பி தமிழில் இலக்கிய வரலாறு எழுதப்பட வேண்டிய முறைபற்றி நுட்பமாகக் கற்பித்தார். இரண்டு பேராசிரியர்களும் விதைத்த வித்து மனதில் ஆழ வேரூன்றியதால் நான் இரண்டாம் ஆண்டில் தமிழையே சிறப்புப் பாடமாகக் கற்க முற்பட்டேன். எமது இரண்டாம் ஆண்டில் பேராசிரியர் கைலாசபதியின் பிரிவு ஏற்பட்டது. இந்த இடைவெளியை நிரப்புவதற்காகத் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் வித்தியானந்தன் எமக்கு தொல்காப்பியம் சொல்லதிகாரம் கற்பிக்கவந்தார். பேராசிரியர் வேலுப்பிள்ளை தமிழ்த்துறையின் புதிய தலைவராக வந்த பின்னர் எமக்கு தமிழ் இலக்கண மரபு தொடர்பான விரிவுரைகளை நடாத்தினார். பேராசிரியர் சண்முகதாஸ் மூலபாடத்திறனாய்வினைக் கற்பித்தார். பேராசிரியர் நுஃமான் இலக்கிய விமர்சனம் கற்பித்தார். பேராசிரியர் சிவத்தம்பியிடம் நாவல் இலக்கியத்தையும், நாடகத்தினையும் கற்றோம். இதுவே என்னை நாவல் இலக்கியத்தில் ஆர்வம் கொள்ளவைத்தது. பட்டப்படிப்பை முடித்த பின்னர் சிறிது காலம் மாங்குளம் மகாவித்தியாலயத்திலும், முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றினேன். இதே காலத்தில் பேராசிரியர் வேலுப்பிள்ளையின் நெறியாள்கையில் வன்னிப்பிரதேசத்தில் ஏட்டுச் சுவடிகளாக இருந்த 'சிலம்பு கூறல் காவியம்' தொடர்பான ஆய்விலும் ஈடுபட்டுவந்தேன். 1989இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உதவி விரிவுரையாளராக நியமிக்கப்பட்டேன். நியமனம் கிடைத்த அடுத்த ஆண்டிலேயே முதுகலைமாணிப் பட்டத்தையும் பெற்றுக் கொண்டேன். இதன்பின்னர் 'ஈழத்துத்தமிழ் நாவல்களில் சமுதாயச்சிக்கல்கள்' என்னும் பொருள்பற்றி ஆய்வு செய்து 2000 இல் கலாநிதிப்பட்டத்தைப் பெற்றுக் கொண்டேன். இந்த ஆய்வுக்கு பேராசிரியர் சுப்பிரமணியன் எனக்கு நெறியாளராக இருந்தார். இளமையிலிருந்தே நாவல்களை வாசிக்கும் புழக்கமுள்ள எனக்கு பேராசிரியர் சிவத்தம்பியின் விரிவுரைகள் நாவலை எவ்வாறு படிக்க வேண்டும் என்பதை எடுத்துக்காட்டி என்னைப் புதிய தொருபாதைக்கு இட்டுச் சென்றது. கலாநிதிப்பட்ட ஆய்வு நூலாக வெளிவந்துள்ளது. நாவல் தொடர்பான பல கட்டுரைகள் பிரசுரிக்கப்பட்டுள்ளன. சில தொகுப்பாகவும் வெளிவந்துள்ளன. குறிப்பிட்டுக் கூறவேண்டுமானால், 'ஈழத்துத்தமிழ் நாவல்களில் இன உறவு' (2007), 'ஈழத்துத்தமிழ் நாவல் - சில பார்வைகள்' (2009) ஆகிய இரு நூல்களும் எனது ஈழத்துத்தமிழ் நாவல் தொடர்பான ஆய்வுத்தேடலின் விளைவால் உருவானவை. இவைதவிர 'ஈழத்துத்தமிழ்க் கவிதைகளில் சாதியம், பெண்ணியம், தேசியம்' (2007) 'தமிழ்ப் பா வடிவங்களை விளங்கிக்கொள்ளல்' (2009) 'பண்டைத் தமிழர் பண்பாட்டுத் தடங்கள்' (2009) ஆகிய நூல்களையும் எனது துறைசார் பங்களிப்பாக வழங்கியுள்ளேன். மேலும் வன்னிப்பிரதேசத்தில் வாய்மொழிக் கலையாக இருந்த

கோவலன் நாட்டுக் கூத்தினையும் அச்சில் பதிப்பித்து வெளியிட்டுள்ளேன். 2007இல் செய்து முடித்த இப்பணியின் முக்கியத்துவத்தை இப்போது உணர்ந்து மன நிறைவடைகின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையில் ஆற்றல் மிக்க பேராசிரியர்கள் பலர் இருந்து பணியாற்றியுள்ளார்கள். நான் அத்தனை பேராசிரியர்களிடமும் படித்தவன் என்ற மன நிறைவோடுதான் எனது பணியைத் தொடர்கின்றேன். எனது பதவிநிலை குறித்து நான் என்றைக்குமே சிந்திப்பதில்லை. உயரும் போது பணிவு கொள்ள வேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடுண்டு. எனது பதில் சற்று நீண்டதாகவே அமைந்துவிட்டது தயவுசெய்து மன்னிக்கவும்.

**2. இன்றைய ஈழத்துத் தமிழ் இலக்கியப் படைப்புகள் பற்றிப் பொதுவாக என்ன கூறுவீர்கள்?**

இன்றைய ஈழத்துத் தமிழ் இலக்கியப் படைப்புக்கள் தொடர்பாகக் கூறுவதாயின் 1980 களிலிருந்து தான் கூறவேண்டும். ஈழத்தில் ஒரு விடுதலைப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அந்தப்போராட்டம் எவ்வாறு ஆரம்பித்து, எவ்வாறு போய்க் கொண்டிருந்தது என்பதைவிட இந்தப் போராட்டத்தால் ஏற்பட்ட அவலங்கள் அதிகம். இராணுவக் கெடுபிடிகள் மாத்திரமன்றி இயக்க முரண்பாடுகள் கூட மனித அவலங்களையே ஏற்படுத்தியது. இந்த மனித அவலங்களை எடுத்துக் கூறக் கூட முடியாத நிலை இருந்தது. அத்தகைய நிலையிலும் சிலர் கூறமுற்பட்டார்கள். சிலர் இந்த மண்ணைவிட்டுப் புலம்பெயர்ந்து நின்று பேசினார்கள். இதனால் எமது இலக்கியம் குறிப்பிடக் கூடிய மாற்றத்தை 1980களில் பெற்றுவிட்டது. கவிதைகளில் ஆரம்பித்த இந்த மாற்றம் பின்னர் சிறுகதைகளிலும் நாவல்களிலும் கூட ஏற்பட்டது. புனைகதைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் பெரும்பாலும் உள்ளடக்க ரீதியாகவே ஏற்பட்டது. இந்த மாற்றங்களால் ஈழத்துத் தமிழ் இலக்கியம் வளம் பெற்றது என்பதை மட்டும்தான் கூறலாம். இவற்றில் ஆற்றல் மிக்க பல படைப்புக்கள் உள்ளன. அவற்றை ஒன்றாக நோக்கிப் பெயர் சுட்டிக் கூற இன்னும் பொறுத்திருக்க வேண்டும் என்றே நினைக்கின்றேன்.

**3. பல்கலைக்கழக மட்டத்தில் இலக்கிய ஆர்வமும், ஈடுபாடும் குறைந்து செல்வதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இன்றைய மூத்த இலக்கிய கர்த்தாக்கள் பலர் பல்கலைக் கழகங்களினூடாகவே உருவானவர்கள். இன்று அந்நிலை காணப்படாமைக்கான காரணங்கள் யாவை?**

பல்கலைக்கழக மட்டத்தில் இலக்கிய ஆர்வம் குறைந்து விட்டதாகக் கூறமுடியாது. நீங்கள் நினைக்கின்ற மூத்த எழுத்தாளர்களில் பலர் பல்கலைக் கழகச் சுழலிலிருந்து வந்தவர்கள்தான். ஆனால், இவர்கள் எல்லோரும் தமிழ்த்துறையைச் சார்ந்தவர்கள் என்று சொல்ல முடியாது. தமிழ் கற்கின்ற மாணவர்கள் கூட இன்று அதிகம் இன்னொரு வகையில் தமிழ் மாணவர்கள் எனப்பார்த்தல் அவர்களின் தொகை இன்னும் அதிகம். இவர்களைப் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் படித்த மிகவும் குறைந்தளவு மாணவர்களுடன் ஒப்பிடும்போது உங்களுக்கு இந்த வித்தியாசம் தெளிவாகத் தெரியலாம் தான். இப்போது நாம் தேடிக் காண வேண்டும். முன்பு இது சற்று இலகுவானது எனவே நாங்கள் ஆர்வம் குறைந்துவிட்டதாகக் கூற முடியாது. மற்றொன்று எமது போர்க்காலச் சூழல் எல்லோரது ஆர்வத்தையுமே மழுங்கடித்துவிட்டது என்பதையும் கூறித்தான் ஆகவேண்டும். இவற்றைக் கடந்தும் இலக்கிய ஆர்வத்தை வெளிப்படுத்த முற்படுபவர்கள் இல்லாமல் இல்லை. உங்களுடைய முயற்சி கூட இலக்கிய ஆர்வத்தின் வெளிப்பாடுதானே. சிறிது காலத்தின்முன் தமிழ்த்துறை மாணவன் ஒருவனின் முயற்சியால் 'புலரி' என்ற சஞ்சிகை ஒன்று வெளிவந்தது. அதுகூட ஒரு சில இதழ்களோடு நின்றுவிட்டது. இதற்கான காரணங்கூட எமது காலச்சூழல்தான்.

**4. நவீன இலக்கியம் என்று எதைக் கருதுகிறீர்கள்? நவீன இலக்கியத்திற்கு, மரபு இலக்கியத்திற்கு இடையிலான முக்கிய வேறுபாடுகள் என எவற்றை குறிப்பிடுவீர்கள்?**

நவீனம் என்றாலே புதுமை என்றுதான் உணரப்படுகின்றது. நவீன இலக்கியம் புதுமையானது. புதுமையைப் பிரக்ஞைபூர்வமாக ஏற்றுக் கொண்டது. பாரதி கூறியதுபோலவே சொல்புதிது, வளம் புதிது சுவைபுதிது, என்று எல்லாவற்றிலும் புதுமையைக் கொண்டுவந்ததுதான் நவீனஇலக்கியம். இது கால தேசவர்த்த மானங்களுக்குக் கட்டுப்பட்டது. மரபு இலக்கியங்கள் கால ஒழுங்கையும் ஓட்டத்தையும் கருத்திற் கொள்ளாதவை. இவற்றில் எல்லாக் காலத்திற்கும் ஏற்ற விழுமியங்களே எடுத்துக் கூறப்பட்டன. தர்மம் வெல்லும் என்பது காவியத்தால் மட்டமே கூறப்படலாம். நவீன இலக்கியத்தில் இது வெறும் கற்பனையாகத் தான் இருந்துவிடும். நிஜ வாழ்வில் தர்மம் தோல்வியடைவதும் உண்டு. இதனையே நவீன இலக்கியம் எடுத்துக் காட்டுகிறது. எனவே மரபுசார்ந்த கருத்து நிலைகளை உடைத்து ஆய்வு செய்வனவாகவே நவீன இலக்கியங்கள் அமைகின்றன.

**5. இன்று இலக்கியத்தில் பின் நவீனத்துவம், கட்டுடைப்புவாதம், இருமைவாதம் போன்ற பல புதிய தத்துவங்கள் முன் வைக்கப்படுவது பற்றி...?**

இலக்கிய உலகில் காலத்திற்குக் காலம் பல்வேறு விதமான கோட்பாடுகள் வருவதும் போவதும் வழக்கம். மேற்கில் உருவாகின்ற பல கோட்பாடுகள் அங்கு மரணித்தபின்னர்தான் தமிழ் இலக்கிய உலகிற்கு அறிமுகமாகின்றன. எம்மவர்களில் பலர் அக்கோட்பாடுகளைத் தவறாக விளங்கிக் கொண்டு தமிழ் இலக்கிய உலகைக் குழப்ப முற்படுகின்றார்கள். கோட்பாடுகளைத் துணையாகக் கொண்டு இலக்கியத்தைப் பார்க்கலாமே தவிர, கோட்பாட்டிற்காக இலக்கியம் படைக்க முடியாது. இலக்கியம் எமது பண்பாட்டில் இருந்து பிறக்க வேண்டும். எமது மக்களின் வாழ்வைப் பிரதிபலிக்க வேண்டும். மேற்கில் உருவான கோட்பாட்டிற்காக நாம் எமது பண்பாட்டை மறந்து இலக்கியம் படைக்க முடியாது.

**6. மரபுக் கவிதை அளவுக்கு நவீன கவிதைகள் வளர்ச்சி கண்டுள்ளதாக உணர்கின்றீர்களா?**

தமிழில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக வளர்ச்சியடைந்த செய்யுள் மரபு உள்ளது சங்கப்பாடல்களும் திருக்குறளும் தமிழ் இலக்கியத்தின் தொடக்க நிலைப் புள்ளிகள் அல்ல. இதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழ் இலக்கியம் வளர்ச்சியடைந்த நிலையில் இருந்திருக்க வேண்டும். இவ்வாறு நீண்ட வரலாற்றுப் பின் புலத்தில் வந்த தமிழ்ச் செய்யுள்களோடு அதாவது மரபு சார்ந்த கவிதைகளோடு மிகவும் அண்மைக்காலத்தில் வந்த நவீன கவிதைகள் ஒப்பிட்டு பேசுவது எந்த வகையிலும் பொருத்தமாக இருக்காது. பாரதி கூட கம்பனையும் வள்ளுவனையும் போல பூமியில் யாரையும் காணமுடியாது என்று தானே கூறியுள்ளார். அதற்காக நான் நவீன கவிதைகளை தரமற்றவை என்று கூறவில்லை. இரண்டையும் ஒப்பிட்டு பார்க்கக் கூடாது என்று தான் கூறுகின்றேன். நவீன கவிதைகளை நவீன கவிதைகளாகவே பார்க்க வேண்டும். அவற்றிலும் அற்புத மான அனுபவங்கள் பதிவாகியிருக்கின்றன. தனியே இனங் கண்டு அவற்றை வளர்த்தெடுக்க வேண்டியது அவசியமாகும்.

**7. ஆண் எழுத்து - பெண் எழுத்து ஆண்மொழி - பெண்மொழி என்று இலக்கியத்தில் பிரிவினைகளை உண்டு பண்ணி தனித்து பார்ப்பது சரி என கருதுகின்றீர்களா?**

காலம் மாறும் போது காலச் சூழலுக்கேற்ப கருத்து நிலைகளும் மாறுவது வழக்கம் எமது பண்பாட்டில் பெண் வீட்டுக்குரியவளாகவே இருந்து வந்தவள். அவ்வாறான கருத்து நிலை இன்று மாறிவிட்டது. பெண் வீதிக்குவந்து போராடுகின்றாள், விமானத்தில் ஏறி ஓடுகின்றாள். அவள் பெண் என்பது வெறும் உடற்கூற்று அடையாளம் மட்டுமே. அவள் ஆணைவிட எந்த வகையிலும் வேறுபட்டவளாக இல்லை. இதனால் பெண் பற்றிய மரபார்ந்த கருத்து நிலைகள் மாற்றப்பட வேண்டியது அவசியம். காலங்காலமாக ஆண்களே பெண்களை பற்றிக் கூறிவந்ததால் இது ஆணாதிக்கம் சார்ந்த ஆண்மொழியாகக் கருதப்பட்டது. பெண் எழுத்துக்களில் கூட ஆண்களின் கருத்தே பிரதிபலிக்கப்பட்டதையும் காணக்கூடியதாக இருந்தது. இத்தகைய நிலை இன்று மாறிவிட்டது பெண்களின் விழிப்புணர்வு ஆணதிக்கத்தை உடைப்பதாகவேயுள்ளது. இதனால் ஆண்களின் ஆதிக்க உணர்வு சார்ந்த மொழியை இலக்கியத்தில் விதைக்காமல் பெண்ணைப் பெண்ணாக நோக்குவது சிறந்தது. அப்போது தான் இலக்கியம் வளர்ச்சியடையும். மானுடம் வளரும்.

**8. படைப்பாக்க ஆளுமையை பல்கலைக்கழக மாணவர்கள் இடையே வளர்த்தெடுக்க என்ன செய்யவேண்டும்?**

பல்கலைக்கழக மாணவர்களுக்கு நல்ல படைப்புக்களை இனங்காட்டி வாசிக்கச் செய்ய வேண்டும் நல்ல படைப்புக்களைப் பல தடவைகள் வாசிக்க வேண்டும். அவை தொடர்பாகக் கலந்துரையாட வேண்டும் இதன் மூலமே அவர்களது படைப்பாற்றலை வளர்க்க முடியும் எனக் கருதுகின்றேன்.

**9. ஈழத்துத் தமிழ் நாவல்களில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியன என எவற்றைக் கருதுகிறீர்கள்? ஈழத்துத் தமிழ் நாவலின் போக்கில் மாற்றம் ஏதும் அண்மையில் காணப்படுகின்றதா?**

ஈழத்திலே குறிப்பிட்டுக் கூறக்கூடிய நாவல்கள் என்று நினைக்கும்போது ஒவ்வொரு காலகட்டத்திலும் வெளிவந்த சில படைப்புக்களே நினைவுக்கு வருகின்றன. செ.கணேசலிங்கனின் சடங்கு, செவ்வானம், இளங்கீரனின் 'நீதியே நீ கேள்', டானியலின் 'கானல்', அருள் சுப்பிரமணியத்தின் 'அவர்களுக்கு வயது வந்து விட்டது', தெணியானின் 'மரக்கொக்கு', செங்கை ஆழியானின் 'காட்டாறு', 'மரணங்கள் மலிந்த பூமி என்று சிலவற்றைக் குறிப்பிடலாம். இவைகூட நான் படித்தவற்றை மனதிற்கொண்டே குறிப்பிடுகின்றேன். இது எந்த வகையிலும் முழுமையான ஒரு பட்டியல் அல்ல என்பது முக்கியம்.

# பேய்க்குக்கு



# பயமில்லை

ச.முருகானந்தன்

"அதோ பேய்... பேய்' என்ற கோசலையின் கூச்சல் கேட்டு கண்விழித்த எனக்கு பயத்தில் உடலெங்கும் பதறியது. மலங்க மலங்க விழித்தேன். நான் எங்கே இருக்கிறேன் என்ற தெளிவு வர சிறிது நேரம் பிடித்தது.

"அனு... அனு... எனக்குப் பயமாக இருக்கிறது..." என்று என்னைக் கட்டிப் பிடித்துக் கொண்டாள் கோசலை. முதலில் அவள் குளறியபோது ஏற்பட்ட பயம் சற்று விலகியது போல இருக்கவே. "விடு கோசலை... 'லைற்'றைப் போடு வோம்" என்றதும் அவள் தடுத்தாள். "வேண்டாம் அனு... சுவிச் ஜன்னல் பக்கமாக இருக்கிறது. ஜன்னலுக்கு அப்பால் தான் பேய் நிற்கிறது... நீ போனால் உன்னைப் பிடித்து விடும்..." என எச்சரிக்கையுடனும் பயத்துடனும் கூறினாள் கோசலை.

நான் சற்று நிதானித்து ஜன்னல் பக்கம் பார்த்தேன். ஜன்னல் கண்ணாடியூடாக எதுவும் தெரியவில்லையே என எண்ணியபடி "எங்கே?" என கோசலையிடம் கேட்டேன். அவள் மீண்டும் அதே திசையில் கைகளைக் காட்டினாள். "எவ்வளவு பயங்கரமாக நிற்கிறது! நல்லவேளை... ஜன்னல் கம்பிகளைத்தாண்டி வரமாட்டுது... இரும்பு என்றால் பேய்களுக்குப் பயம்..." என்றவள் தொடர்ந்து மீண்டும் "ஐயோ... ஐயோ..." என்று குளறினாள்.

எனக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. அவளது உடல் வியத்துக் கொண்டிருந்தது. நாங்கள் இருவரும் பெண்கள். அதிலும் வெளிநாட்டிலுள்ள இந்த பல்கலைக்கழகத்திற்கு மருத்துவப் படிப்புக்காக வந்து இரண்டு நாட்கள் தான். இந்த அறையில் முன்பு தங்கியிருந்து படித்த மாணவி ஒருத்தி, காதல் தோல்வியால் தற்கொலை செய்தது காலையில் ஒரு மாணவி கூறியது என் நினைவுக்கு வரவே எனக்கும் பயமாக இருந்தது. சின்ன வயதிலிருந்தே அப்பா என்னையும் அக்காவையும் தைரியசாலிகளாக வளர்த் திருந்தார். ஏனைய பெண் பிள்ளைகளைப் போல் இல்லாமல் நாமிருவரும் தைரியசாலிகளாக வளர்ந்திருந்தோம். பேய், பிசாசு, முனி, ஆவி என்பதெல்லாம் வெறும் பிரமைதான் என அப்பா பலமுறை சொல்லித் தந்திருக்கிறார். கூடவே ஏப்ரகாம் கோவூரின் 'மனக்கோலம்' நூலினையும் படிக்கத் தந்திருக்கிறார். எனக்கு இதிலெல்லாம் நம்பிக்கை இல்லைத் தான் எனினும் புதிய நாடு, புதிய சூழல் அம்மா, அப்பா, அக்காவை விட்டுப் பிரிந்து தனிமை.

கோசலையும் நானும் இலங்கையிலேயே நண்பிகள் தான். கோசலைக்கு பேய், பிசாசுகளில் நம்பிக்கை உண்டு என்பதும் எனக்கு ஏற்கெனவே தெரியும். அவள் முன்பு சொன்ன கதைகளுக்கெல்லாம் விளக்கம் கூறியிருக் கிறேன். எனினும் இப்போது பேய்! நேரில் வந்ததாக கூறும் போது உள்ளூரப் பயமாகத் தானிருந்தது. எனினும் கோசலை யை தைரியப் படுத்தியபடி "நீ ஏதாவது கனவு கண்டிருக்க வேண்டும்" என்று கூறினேன். அவள் நம்புவதாயில்லை. இன்னும் நடுங்கிக் கொண்டிருந்தாள். "இல்லை பேய் தான்"

நான் எழுந்து லைற்றைப் போடலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த போதே அவள் மீண்டும் "ஐயோ... அது என்னைக் கூப்பிடுகிறது. அதனுடைய பற்களைப் பார்க்கப் பயமாக இருக்கிறது..." என்று குழறினாள்.

"யாராவது கள்ளனாக இருக்கலாம். ஏன் பேய் என்று பயப்படுகிறாய்" மீண்டும் அவளைத் தைரியப்படுத்தினேன் "கள்ளனாக இருக்குமோ?" என்ற பயம் என் மனதையும் கவ்வியது.

இதற்கிடையில் வாசற்கதவடியில் யாரோ அழைத்தார்கள். காலடி ஓசையிலிருந்து சக மாணவர்களாக இருக்கும் என்பதை ஊகித்துக் கொண்டு கதவைத் திறந்தேன். அவர்கள் தான் அப்பாடா என்றிருந்தது மனதுக்கு!

"என்ன குளறிக்கேட்டது? அது தான் இங்கு வந்தோம்..." என்று அவர்கள் கேட்டு முடியு முன்னரே "அதோ... அதோ ஜன்னலுக்கு அப்பால் பேய்!" அவள் சுட்டிக் காட்டினாள். அறையின் உள்ளே வந்த மாணவன் ஒருவன் லைற்றைப் போட்டான். ஜன்னலடியில் எதுவும் இல்லை. ஜன்னலைத் திறந்து பார்த்தான். இதற்கிடையில் "பேய் ஓடுகிறது... அதோ அந்த மரங்களினூடே ஓடுகிறது" என்றாள் கோசலை. அவள் சொல்லும் போதே தொலைவில் மரக்கிளை முறியும் சத்தம்! "குரங்குகள் பாய்ந்திருக்கும்" என தைரியமான அந்த மாணவன் கூறியபடி எனது பக்கம் திரும்பி "அனு நீரும் பயந்திட்டீரா?" என்று கேட்டான். இல்லை என்பது போல தலையசைத்தபடி, இவனுக்கு இதற்கிடையில் எனது பெயர் ஞாபகமிருக்கிறதே என எண்ணிய போது காலையில் கடுமையாக பகிடிவதை செய்வித்த மாணவன் என்பது நினைவுக்கு வந்தது. அவன் மீது இருந்த சீற்றமும் வெறுப்பும் இப்போது குறைவது போலிருந்தது.

"பயப்படாதையுங்கோ... பேய் பிசாசு என்கிறதெல்லாம் வெறும் பிரமை தான்.. என்றாலும் இன்றிரவு நீர் இந்த அறையில் படுக்க வேண்டாம். புவனாவினுடைய அறையில் படுக்கலாம்..." தொடர்ந்து அவன் தான் கூறினான். அவனது பெயரை அறியவேண்டும் என்ற அவா மனதில் எழுந்தது.

மறுநாள் காலையில் அந்த மாணவனும் இன்னொரு சக மாணவனும் எங்களிடம் வந்தனர். இரவு முழுமையாக தூங்காததனால் அவர்கள் வந்த போதுதான் கண்விழித்தோம். "இவன் சுரேன், நான் பிரபந்தன்... இலங்கையிலிருந்து வந்து படிக்கிறோம். இரண்டாம் வருடம் நீங்கள் எதற்கும் பயப்படாதீர்கள்... பேய் என்று எதுவுமில்லை" என்றவாறு, எங்களுடைய பயம் தெளிவதற்காக, உங்கள் அறையை மாற்ற முயற்சிக்கிறோம்" என்றான்.

"இல்லை... பேய் என்கிறது உண்மை.. நான் பலதடவை பேய்களைப் பார்த்திருக்கிறேன்... பேய்களோடு பேசியிருக்கிறேன் இறந்தவர்களுடை ஆத்மா தான் ஆவியாக பேய் பிசாசாக முனியாக அலைந்து கொண்டிருக்கிறது..." கோசலை மீண்டும் அனைவரையும் குழப்பத்தில் ஆழ்த்தினாள்.

"பேய்களோடு பேசியிருப்பதாகக் கூறுகிறீர்... அப்புறம் ஏன் பேயைக் கண்டு பயந்து அலகிறீர்?"

"பேய்களில் நல்ல பேய்கள் உண்டு... செத்துப்போன உறவினர்களுடைய ஆவிகள் நல்லவை... கோபக்காரர் களுடைய அல்லது எமக்குத் தெரியாதவர்களுடைய ஆவி தான் பயமுறுத்தும், கொடுமை செய்யும்... சிலரைக் கொன்றுமிருக்கிறது... நேற்று வந்த ஆவி பொல்லாத பேய்... நிச்சயமாக என்னையோ, அனுவையே பழிவாங்கத் தான் வந்திருக்கிறது..." மீண்டும் என்னையும் பயமுறுத்துமாப் போல் கூறினாள் கோசலை.

"எனக்குப் பகையில்லை... நான் ஆரையும் ஏமாத்தவுமில்லை... பழிவாங்க மாட்டுதுகள்..." என்றேன்.

"பழி வாங்க மட்டுமென்றில்லை... பேய்கள் தமக்கு பிடிக்காட்டிலும் அடிக்கும்... பேயடிச்சு சிலர் செத்ததெண்டு பாட்டி கூறியிருக்கிறா..."

"இப்ப விளங்குது... உம்முடைய மனதில் பேயைக் கொண்டு வந்தது உம்முடைய பாட்டி தான் என்று விளங்குது" சுரேன் சிரித்த படி கூறினான்.

"உங்களுக்குப் பகிடியாக இருக்கு. பாட்டி இடைக்கிடை வந்து என்னோட கதைச்சிட்டுப் போறவ ஆடி அமாவாசை... சித்திரரை பறுவம் என்றால் கட்டாயம் வருவ... நல்ல பேய்க்கும் கெட்ட பேய்க்கும் பல்லிலை வித்தியாசம் தெரியுமாம்... ராத்திரி வந்தது கெட்ட பேய்... விடுதியிலயிருந்து பார்க்க தொலைவில் சுடலை தெரியும்... அங்கயிருந்துதான் வந்திருக்கும்..." என மீண்டும் அலட்டத் தொடங்கிய கோசலையை "சும்மா விசர்க்கதை கதையாதையும்..." என அடக்கினான் பிரபந்தன்.

வகுப்பிலும் உற்சாகமாக அவளால் படிக்க முடியவில்லை. போதாதற்கு என்னையும் குழப்பிக் கொண்டிருந்தாலும் அன்று மாலையில் அவள் இன்னுமொரு புது வெடிகுண்டைத் தூக்கிப் போட்டாள்.' ஒரு வேளை இரவு வந்த பேய் ரகுவரனுடையதாக இருக்குமோ?

நான் அதிர்ச்சியுடன் அவளை நிமிர்ந்து நோக்கினேன். காரணம் ரகுவரன் அவளது காதலன். இலங்கையை விட்டு புறப்பட முதல் நாளும் அவனைச் சந்திந்து மணி கணக்கில் கோசலை பேசிக்கொண்டிருந்தது

எனக்குத்தெரியும். இப்போது அவனுடைய ஆவியோ என்று கேட்கிறாள்.

"என்னடி புதுக்கதை உனக்கென்ன விசரே?"

"இல்லை அனு... என்னை வெளி நாட்டுக்குப் படிக்கப்" போக வேண்டாமென்று ரகுவரன் அன்று வற்புறுத்திக் கேட்டவர்... நான் போனால், தான் செத்துப் போவன் என்று சொன்னவர்... அது தான் ஒரு வேளை...? ம்... போனும் வரயில்லை... நான் போன் அடிக்க அவற்ர போனும் எடுபடுகுதில்லை கடைசி நாள் எனக்கும் ரகுவரனுக்குமிடையில் சரியான வாக்கு வாதம்... அம்மா அப்பாவை எனக்கு இலண்டனிலை பொறியியலாளர் மாப்பிளை யைப் பார்த்து வைசிருக்கிறதைப் பற்றியும், அவையிண்ர, சொல்லை தட்டேலா தென்றும் சொன்னதால அவருக்கு சரியான கோபம் அது தான் ஆத்திரத்திலை ஏதும் செய்திட்டாரோ தெரியேல்லை."

"சரி... நீ தான் அவரை வேண்டா மென்று விட்டுட்டு வந்தனி.. பிறகேன் இப்போது ரகுவரனுக்காக அனுதாபம் படுகிறாய்?"

"இல்லை அனு... என்னென்றாலும் நான் அவரை உயிருக்கு உயிராகக் காதலிச் சனான். இப்ப, மேளமடிக்கிற பகுதியெண்டு அம்மா அப்பாவை எடுத்துச் சொன்ன பிறகு எனக்குள்ளேயும் ஒரு குழப்பம்... அதாலா வேண்டாமென்று சொல்லிப் போட்டன்... இப்ப நினைச்சா நான் சொன்னது தப்பென்று விளங்குது..."

கோசலையின் கண்கள் கலங்கின.

"காதலிலை காலடி எடுத்து வைக்க அவசரப் படக்கூடாது... ஆனால் காதலித்தால் பிறகு அதிலிருந்து மாறக் கூடாது கோசாலை... நான் அது தான் இன்று வரை காதலிக்க அவசரப்படவில்லை... எத்தனையோ பேர் அணுகினவை. நான் யாருக்கும் பிடி கொடுக்க வில்லை... எல்லாவற்றையும் ஒரு அவதானிப் பிலை வைச்சிருக்கிறன்... ம்... உன்னைப் பொறுத்த வரை ரகுவரன் உன்னை தீவிரமாக வும், உண்மையுடனும் காதலிக்கிற மாதிரி இருக்கு... ஆனால் நீ தான் தழும்புகிறாய்..."

"வீட்டிலை நெருக்கடி. அம்மாவுடன் கதைச்சன் அவ ரகுவரனவையைப் பற்றி விசாரிச்சுப் போட்டு அவை பறை மேளம் அடிக்கிற பகுதி என்று வந்து சொன்னவ. இது தெரிஞ்சால் அப்பா அடிச்சுப் போடுவர்... கடைசிவரையும் சம்மதிக்க மாட்டார்... அம்மாவுக்கும் சாதியை அறிஞ்ச பிறகு துளி கூட விருப்பமில்லை எனக்குக்கூட ஒரு மாதிரித் தான் இருக்கு..."

"கோசலை ரகுவரனோட பழகின போது ஒரு வித்தியாசமும் தெரியேல்லைத் தானே?... இப்ப புதிதாக பிடிக்கவில்லை என்று சொல்கிறாய். இது நியாயமா?"

"நீ சொல்லுறதும் சரிதான்... ரகுவரன் பாட்டனர் பறைமேளம் அடிச்சவர் தான், தகப்பன் படிச்சு நல்ல உத்தியோகம் பார்த்தவர்... பிள்ளைகளையும் படிப்பிச்சவர். ரகுவரனின் அண்ணா ஒரு பொறியியலாளர்... அக்கா பல் வைத்தியர்... ரகுவரன் மருந்தாளர்... நாட்டுப் பிரச்சினையால் படிப்பு குழம்பாட்டில் மருத்துவராக வந்திருப்பர்... இந்த நிலையிலும் மேளமடிச்ச பகுதியென்று மறுத்தது பிழை தானே?" கோசலை சொல்லிக் கொண்டிருக்கும் போதே தொலைபேசி அழைப்பு வந்தது.

ரகுவரன் தான். அவளது முகம் முழுமதியானது நீண்ட நேரம் கதைத்தார்கள். ஊடலுக்குப் பின்னரரான கூடல் போல அவர்கள் சமரசமாகி இருக்க வேண்டும். கோசலை பழைய படி சுறுசுறுப்பாக மாறினாள்.



"அனு... என்னால் படிக்கேலாது. படிக்கிற மனநிலையும் இல்லை... செத்த பிரேதங்களை அழைஞ்சு படிக்கிற மருத்துவப் படிப்பு அரியண்டமாக இருக்கு.. பிரேதங் களைப் பார்க்க எனக்கு பேய் பிசாசுகளின்ர நினைவு தான் வருகுது... படிப்பு வரயில்லை..." அவள் சிரித்துவிட்டுத் தொடர்ந்தாள். "நான் இலங்கைக்கே திரும்பப் போறன்... ரகுவரனைக் காணாமல் கதைக்காமல் என்னாலை இருக்க முடியாது...அம்மாவுக்கு போன் பண்ணிச் சொல்லப் போறன்."

அவசரப்படவேண்டாம் என அவளை மறித்தும் கேட்காமல் அம்மாவுடன் கதைத்தாள். என்ன கதைத்தாளோ தெரியாது மூன்றாவது நாளே அப்பா இங்கு வந்து விட்டார். எப்போதும் சிரித்த முகமாக இருக்கும் அவரது முகம் கடுப்பாக இருந்தது. முறைப்போடு என்னைப் பார்த்தார்.

"அனு... உமக்கு பேய் பிசாசில நம்பிக்கை இருக்கலாம்.. அதுக்காக படிக்க வந்த கோசலையையும் பயப்படுத்தி படிப்பையும் குழப்புறதுக்கு நிற்கிறீரே...?" கோசலையின் அப்பாவின் வார்த்தைகளில் நான் திடுக்குற்றேன். பேய், பிசாசு என்று என்னைப் பயப்படுத்தினதே கோசலை. இப்போது இவர் புதுக்கதை சொல்லி என்னை ஏசுகிறார். எனக்கு கதைக்கவும் முடியாமல் தொண்டை அடைத்தது. கண்கள் பனிக்க கோசலையை நோக்கினேன். அவள் எனது பார்வையை தரிசிக்காமல் அப்பாவின் பக்கம் திரும்பி, "அப்பா இவவால எனக்கு வந்த நாளிலிருந்தே நித்திரையில்லை... ஒரே பயப்படுத்திறா." எதுவித கூச்சமுமின்றி கோசலை பொய் கூறினாள். அப்பாவும் என்ன பிடித்து விழுங்குமாம் போல ஆத்திரத்துடனும் கடுப்புடனும் நோக்கினார்.

"ஆளுக்காள் துணையாக இருப்பியள் என்று சேர்த்து அனுப்பினால் இங்க நீ மகளையும் பயப்படுத்தி வைச்சிருக்கிறாய்.. இப்பவே அவளுக்கு வேற அறை ஒழுங்கு பண்ணப்போறன்..." என என்னைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தினார். எனக்கு அழுகையும் ஆத்திரமுமாக வந்தது... "இல்லை அங்கிள்..." என நான் சொல்ல ஆரம்பிக்கும் போதே, கோசலை குறுக்கிட்டாள்.

"அப்பா... என்னுடைய மனநிலை பாதிச்சுப்போச்சு... இனி இந்த நாட்டில இருந்து என்னால படிக்க முடியாது. என்னை இலங்கைக்கு கூட்டிக் கொண்டே போங்க... நான் உங்களோட திரும்பி வரப்போறன்..."

மகளின் வார்த்தைகளை அப்பட்டமாக ஏற்றுக் கொண்ட அப்பாவும் பற்களை நற நற என்று கடித்துக் கொண்டு என்னை நோக்கினார்.

"அங்கிள் நான்..."

"பொத்தடி வாய்..." நான் பேசமுன்னே குறுக்கிட்டார். எனது வீட்டிலேயே பேச்சுக் கேட்காத நான் உடைந்து போனேன்.

"மகளையும் அழைத்துக் கொண்டு உடனடியாக வெளியே போய்விட்டார். எனக்கு அழுகை அழுகையாக வந்தது. எழுந்து புவனா அக்காவின் அறைக்குச் சென்று நடந்தவற்றைக் கூறி அழுது தீர்த்தேன். புவனா அக்கா எனக்கு ஆறுதல் சொன்னதுடன் பிரபந்தனுக்கு 'போன்' பண்ணிக் கூறினார்.

சில நிமிடங்களில் பிரபந்தன் அங்கே வந்ததும் புவனா அக்கா நடந்தவற்றைக் கூறினார். "இப்படியும் ஒரு பெண்ணா?" என பிரபந்தன் ஆச்சரியப்பட்டதுடன் எனக்கும் ஆறுதல் கூறினான்.

"அனு... நீர் ஒன்றுக்கும் யோசிக்காதையும்... அவள் போகட்டும்... போறது தான் நல்லது. நீர் யோசிக்காமல் படியும்... உமக்குத் துணையாக நாங்கள் எல்லோரும் இருக்கிறம்... அவளின்ர அப்பா வந்தவுடன் நான் கதைக்கிறன்..."

புவனா குறுக்கிட்டாள்.

"வேண்டாம் பிரபந்தன்... நாங்கள் சொல்லியும் அவர் கேட்கப் போவதில்லை... மகளைப் போல் தானே அப்பாவும் இருப்பார்...? இல்லா விட்டால் உளவளத்துணை சிகிச்சைக்கு ஆலோசனை கூறியிருக்கலாம்."

பிரபந்தனும் ஏற்றுக் கொண்டான்.

அன்று இரவு கோசலை திரும்பி வரவில்லை. எனவே நான் புவனா அக்காவின் அறையில் தங்கினேன். இரவு தூக்கம் வரவில்லை. அம்மாவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கூறினேன். அம்மா ஆறுதல் கூறினார். தாமதமாக உறங்கியதால் காலையில் தாமதமாகவே எழுந்தேன். ஞாயிற்றுக் கிழமை ஆதலினால் வகுப்புகளும் இல்லை. எனது அறைக்குத் திரும்பினேன். அறை வெறுமையாக இருந்தது. நான் கோசலையுடன் சேர்ந்து வாங்கிய பொருட்கள் எல்லாவற்றையும் கோசலையின் சூட்கேசையும் காணவில்லை. எனது சூட்கேஸ் மட்டும் இருந்தது. கோசலை எனக்குச் சொல்லாமல் போய்விட்டதை உணர்ந்தேன்.

திரும்பி புவனா அக்காவின் அறைக்கு வந்து நடந்ததைக் கூறினேன். அவ ஆறுதல் கூறினார்.' போய்த் தொலையட்டும்... என்ன நட்டப்பட்டாலும் பரவாயில்லை அவள் போனது உமக்கு நன்மைக்குத் தான். நீர் இனி பயமின்றி படிக்கலாம் பேய், பிசாசு, ஆவி, முனி எல்லாம் வந்து உம்மைக் குழப்பாது..." புவனா அக்கா கூறியதும் அவருடன் சேர்ந்து நானும் சிரித்தேன்.

இதற்கிடையில் பிரபந்தனும் அங்கு வந்தான்.

நான் நடந்ததை எல்லாம் கூறியதும் அவன், "விட்டது பேய்" என்று சிரித்தான் நானும் புவனா அக்காவும் கூட சிரித்தோம்.

"நீர் அறையில் அடைபட்டுக்கிடக்காதையும் எங்கேயாவது வெளியே போய் வரலாம்..." பிரபந்தன் அழைத்தான்.

எனக்கு என்ன செய்வதென்று புரியாமல் நான் தயங்கி நிற்கையில் புவனா அக்கா கூறினா "போய் வாரும் பிரபந்தன் பேயில்லை" என்றார்.

மீண்டும் சிரிப்பு.

பிரபந்தனுடன் மாஸ்கோ வீதிகளில் நடக்கையில் ஆறுதலாக இருந்தது. "ஒன்றுக்கும் பயப்படாதையும்... நான் இருக்கிறன்..." என்று கூறிய பிரபந்தனை நம்பிக்கையுடன் நோக்கினேன்.□□□

# பிரசவம்



புதுமனை புகுதலோ பிரவேசம்
ஒளிமிகு வாழ்வெனின் பிரகாசம்
முதன்மைப் பணிகளோ பிரதானம்
சிசுவின் ஜனனம் மட்டும் பிரசவம்!

பிறக்கும் போதே சிசுவுடன்
சவமும்
சேர்ந்தே பிறக்கிறது...

சகுனங்கள் பார்த்தே திணறும் நாம்
பச்சைக் குழந்தையின் வரவிற்கேன்
அப சகுனமாய்ப் பேரிட்டோம்?

உலகில் பிரவேசிப்போர் யாவரும்
இறப்பது நிஜமென உணர்த்தவே
தமிழகராதியில்
பிரசவமெனும் சொல் உருவாயிற்றோ...?

பிறக்கும் போதே இறப்பும்
நிர்ணயிக்கப் படுதலாற்றானோ
பிறப்பும் இறப்பும் புணர்கின்றபோது
பிறப்பு + இறப்பு =
பிறப்பிறப்பாக
திரிந்தே புணர்கிறதோ...?

மாடோ கன்று ஈனும்
ஆடும் குட்டி ஈனும்,
மனிதன்...?

தெய்வப்புலவன் மட்டுமே
'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும்...'
மானிடப் பிறப்பின் ஜனனத்தை
மதித்தே பகர்கின்றான்!

மற்றப்படி நாமெல்லாம்
பிறப்பென்றும்
பிரசவமென்றுமே
சொல்லி மகிழ்கின்றோம்
கொண்டாடுகின்றோம்!

இறப்பென்றும் சவமென்றும்
சொல்லிக் கவல்கின்றோம்
அழுதே புலம்புகின்றோம்!

**கண.மகேஸ்வரன்**

# எனது இலக்கியத் தடம்



4

தி.ஞானசேகரன்

## இளம் மனதில் பதிந்த இரசனைமிகுந்த கதைகள்

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் வடக்கு வீதியில் 104 ஆம் இலக்கத்தில் அமைந்திருக்கிறது எனது தாயாரின் இல்லம். அங்குதான் 1941 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆம் திகதி பகல் 11.36 மணியளவில் சித்திரைமாத அனுஷ நட்சத்திரத்தில் நான் பிறந்தேன். எனது தாயாரின் தந்தை செல்லையரும் அவரது பெரிய தந்தை சுந்தரஐயரும் வைத்தீஸ்வரன் கோயிலில் பணியாற்றியவர்கள். இந்த இல்லத்தில் நான்கு தலைமுறைகளாக அவர்களது சந்ததியினர் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இங்கிருந்துகொண்டுதான் வித்துவசிரோமணி கணேசையர் இதே வீதியில் இருந்த பிச்சுஐயர் வீட்டுத்திண்ணையில் ஆறுமுக நாவலரின் மருமகன் பொன்னம்பிள்ளையிடம் கல்வி பயின்றார்

பிற்பட்ட காலத்தில் தாயாரின் தந்தையார் இங்கு ஓர் உணவகம் நடத்தி வந்தார். சைவ உணவுக்காரர்கள் பலர் வந்து உணவருந்துவார்கள். அக்காலத்தில் யோகர் சுவாமிகளும் அடிக்கடி இங்கு உணவருந்த வருவார். தாத்தா பயபக்தியோடு அவருக்கு உணவு பரிமாறுவார். தற்செயலாக ஒருநாள் யோகர்சுவாமி தனிமையில் என்னிடம் உரையாட நேர்ந்தது. எனக்கு அவர் தந்த உபதேசம் "எனது தந்தையாரின் தொழிலுக்கு நான் ஒத்தாசையாக இருக்கவேண்டும்" என்பதுதான்.

எனது தாயாரின் மூத்த சகோதரர் பெயர் சிவசுப்பிரமணிய ஐயர். இவர் ஒரு சகலகலா விற்பன்னர். யாழ்ப்பாணம் வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலும் கல்வி பயின்றவர். இவர் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் கல்வி கற்ற காலப்பகுதியில் சுவாமி விபுலானந்தா, சுவாமி அவிசானந்தா, சுவாமி சர்வானந்தா, சுவாமி நிஷ்ரேஷ்வரானந்தா ஆகியோரை ஆசிரியராகப் பெற்றவர். மாணவராக இருந்த காலத்திலேயே இவர் சிறந்த நடிகராகவும் ஓவியராகவும் விளங்கியவர். பின்னர் நடனம், சங்கீதம் முதலியவற்றிலும் ஈடுபட்டு அவற்றிலும் தேர்ச்சி பெற்றார். அக்காலகட்டத்தில் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களது நாடகக்குழுவில் நடிகராகவும் இருந்து நாடகங்களிலும் நடித்து வந்தார். பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்ந்து நடன ஆசிரியரானார். இலங்கையில் முதலில் நாட்டியப்பள்ளி ஒன்றைத் தொடங்கி அதனைத் திறம்பட நடத்தி வந்தார். (23) இவரை நான் 'மணிமாமா' என் அழைப்பேன்.

யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் 1790 இல் வைத்திலிங்கச் செட்டியார் என்பவரால் கட்டப்பட்டது. இக்கோயிலில் ஆரம்ப காலத்திலிருந்தே ஒரு கதாப்பிரசங்க மரபு வளர்ச்சிபெற்று வந்தது. நல்லைநகர் ஆறுமுகநாவலர் தமது முதற்பிரசங்கத்தை இவ்வாலய வசந்த மண்டபத்திலேயே செய்தார். அவருக்குப் பின் அவரது மருகரான வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை புராணப் பிரசங்கம் செய்தார். பின் சங்கரசுப்பையர் சுவாமிகள் என்பார் இங்கு பிரசங்கம் செய்து வந்தார். இவரது பிரசங்கத்தை தனது பாடசாலைக் காலத்திலேயே தினமும் கேட்டு வந்த எனது மாமாவுக்கு அவரைப்போன்று தாமும் பிரசங்கம் செய்ய வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது. தனது 18 ஆவது வயதில் மாமா சி.எஸ்.எஸ். மணிஐயர் என்ற பெயரில், இதே கோயில் மண்டபத்தில் கதாப்பிரசங்கம் செய்யத் தொடங்கினார். 'மணிபாகவதர்' எனப் புகழ்பெற்ற பிரசங்கியானார். தொல்காப்பியத்திலிருந்து பாரதிவரை அவருக்குத் தாடனம் இருந்தது. சங்கநூல்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், பெரியபுராணம், கம்பராமாயணம், மகாபாரதம், தேவார திருவாசகங்கள், திவ்வியப் பிரபந்தங்கள், திருப்புகழ் எல்லாம் அவரது பிரசங்கங்களில் தொனிக்கும். பாரதியாரிடம் அவருக்கு ஈடுபாடு அதிகம். பாரதியாரின் சக்திப்பாடல்கள். கண்ணன் பாடல்கள், பாஞ்சாலி

சபதம் முதலியவற்றிலிருந்து மேற்கோள்கள் அவரது உரைகளிலே விரவிவரும். நல்லூரிலே திருவிழா நடைபெறுங்காலத்தில், ஸ்ரீமுருகன் தண்ணீர் பந்தலில் வருடாவருடம் சம்பூரண ராமாயணம், மகாபாரதம், திருவிளையாடற் புராணம், பெரிய புராணம் என்றெல்லாம் தொடர் பிரசங்கங்கள் நடைபெறும். பதினாயிரம் பேர்வரை மூன்று மணித்தியாலங்களுக்குமேல் மெய்மறந்து கேட்கச்செய்யும் பேராற்றல் அவருக்கு இருந்தது. இவரை நல்லூர் கந்தசாமிகோயில் நிர்வாகம் "தேவஸ்தான பிரசாரகராக" நியமித்து கௌரவித்தது. "1936முதல் 1981 வரை எண்ணிலடங்காத பிரசங்கங்கள் செய்துள்ளார். இது ஒரு சாதனையே. 45 வருடங்களாக பல்லாயிரக்கான பிரசங்கங்கள் செய்த பெருமை இவருக்குண்டு"(24 )

மாமா இசைத்துறையிலும் விற்பன்னராக விளங்கினார். கடம், மோர்ச்சிங், மிருதங்கம் போன்ற வாத்தியங்களை வாசிக்கும் திறமை பெற்றிருந்தார். சங்கீத வித்துவான்கள் எந்தளவிற்கு மக்களைக் கவரும் வகையில் ஜனரஞ்சகமாகக் கச்சேரி செய்கிறார்களோ அதே மாதிரி இவரும் தனது குரல்வளத்தைச் சாதகமாக வைத்துக்கொண்டு இராக ஆலாபனைகளையும் இசை நுணுக்கங்களையும் தமது கதாப்பிரசங்கத்திலே இடையிடையே புகுத்தி அனைவரையும் வியப்பிலாழ்த்தி விடுவார். உதாரணமாகக் கூறுவதானால் சிவபெருமானைப் புகழ்ந்து பாடுவதாக வரும் கட்டத்தில் சசிதரனே, சதாசிவனே, சாம்பசிவனே என்பதைப் பலவித கோணங்களில் விரிவு படுத்தி சங்கதிகளைப் புகுத்தி சங்கீதக் கச்சேரி ஒன்றே செய்து விடுவார். இவர் இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்கெல்லாம் சென்று பிரசங்கம் செய்து புகழீட்டினார்.

எனக்கு இலக்கிய ஆர்வத்தை ஊட்டியதில் மணிமாமாவுக்கும் பெரும் பங்குண்டு. இவரது புராண இதிகாச பிரசங்கங்கள் பலவற்றை நான் கேட்டு இரசித்திருக்கிறேன். பாடசாலை விடுமுறை நாட்களில் அவரது வீட்டிலேயே தங்கியிருந்து அவரது பிரசங்கங்களுக்குச் செல்வேன். எனது இளம் வயதில் என்னைச்சூழ இருந்தவர்கள் எனக்குப் பழந்தமிழ் இலக்கியங்களில் பரிச்சயம் ஏற்படுத்திய போதிலும் அவற்றிலே உள்ள இலக்கியச் சுவைகளை இசையிலே தோய்த்தெடுத்து இரசிக்கத்தந்தவர் எனது மாமா. இலக்கியக் கதாபாத்திரங்களை எனது மனத்திரையிலே ஓடவிட்டவர் அவர். ஒரு விடயத்தை எவ்வாறு சுவையாகச் சொல்லலாம் என்பதனைக் கற்றுத்தந்தவர் அவர்.

1966ஆம் ஆண்டு துறவறம் பூண்ட அவர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரான் சுவாமிகள் என்ற நாமம் பெற்றார். அதே ஆண்டில் நல்லை நகரில் திருஞானசம்பந்தர் ஆதீனம் அமைத்து அதனூடாக சமய அறப்பணிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.(25) இதுவே இலங்கையின் முதலாவது ஆதீனமாகும்.

அந்தச்சிறு பராயத்திலே எனக்கு வியப்பினை ஏற்படுத்திய நிகழ்வுகள் சிலவற்றை இந்த இடத்திலே கூறுதல் பொருத்தமாக இருக்கும் என நினைக்கிறேன். மாமாவின் பிரசங்கங்களில் கேட்ட கதாபாத்திரங்களின் பெயர்களையுடைய சிலர் எங்களூரில் நடமாடித் திரிந்தார்கள். சிவபெருமான், ஐயனார், கோவலர், கந்தரம்மான்! — என்ன உங்களுக்கும் வியப்பாக இருக்கிறதா? எங்களூர்த் தமிழ்ப் பாடசாலையில் நான் கல்விகற்பதற்கு ஏறத்தாழ இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் முருகேசு என்பவர் தலைமை ஆசிரியராக இருந்தார். அவரது காலத்தில் செல்வநாயகம் என்பவர் உதவி ஆசிரியராக விளங்கினார். இவர் ஒரு நாடகப் பிரியர். நாடகங்களைப் பயிற்றுவித்து மேடையேற்றுவதில் வல்லவர். எங்கள் ஊரில் இருந்த கலையுள்ளம் கொண்ட இளைஞர்களை இரவு நேரங்களில் பாடசாலைக்கு வரவழைத்து நாடகங்கள் பழக்கி பாடசாலை மண்டபத்திலேயே மேடையேற்றுவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். காலத்துக்குக் காலம் வெவ்வேறான புராண இதிகாச நாடகங்கள் பாடசாலை மண்டபத்தில் மேடையேறின. ஊர்மக்களும் பெருந்திரளாக வந்து இந்த நாடகங்களைப் பார்வையிட்டு உற்சாகமூட்டினர். இந்த நாடகங்களில் நடித்த நடிகர்களுக்கு பிற்காலத்தில் அவர்கள் நடித்த பாத்திரப் பெயர்களே காரணப் பெயர்களாக அமைந்துவிட்டன.

நான் மேலேகுறிப்பிட்ட ' சிவபெருமானின்' இயற்பெயர் சீனித்தம்பி. சீனித்தம்பி என்றால் ஊரில் யாருக்கும் தெரியாது. சிவபெருமான் என்றால்தான் தெரியும். அதேபோன்று தம்பிராசா 'ஐயனார்' ஆனார். இராமங்கலட்டி சீனியர் என்பவர் 'கோவலர்' ஆனார். மாடத்தாரின் வேலுப்பிள்ளை 'முன்அரிச்சந்திரன்'. கந்தம்மான் வேலுப்பிள்ளை 'பின்அரிச்சந்திரன்'. மாடத்தார் நன்னித்தம்பி 'சந்திரமதி'. தம்பர் 'பபூன்'. இவர்கள் யாவேரும் பெரும் நாடக நடிகர்களாக எங்களூர் வீதிகளில் உலாவி வந்தவர்கள். என்னென்ன நாடகங்கள் எங்களூரில் நடைபெற்றன என்பதற்கு சாட்சியாக விளங்கியவர்கள்.

நான் சிறுவனாக இருந்த காலத்தில் எங்களூரில் நாடகங்கள் நடைபெறுவது அருகிவிட்டது. ஓரிரு நாடகங்களை பாடசாலை மண்டபத்தில் நான் பார்த்து ரசித்தது ஞாபகத்திற்கு வருகிறது. அந்தச் சிறுவயதில் நாங்களும் நாடகமாடியிருக்கிறோம். கோயில் வடக்கு வீதியில் இருந்த தட்டையான நீள்சதுரக்கல்லை மேடையாகப் பாவித்து நாங்கள் நண்பர்கள் சேர்ந்து எங்கள் அறிவுக்கெட்டிய நாடகங்களை அரங்கேற்றி மகிழ்ந்திருக்கிறோம். எங்களின் அடுத்த மட்டச் சிறுவர்கள் பார்வையாளராக இருந்திருக்கிறார்கள். எனது நண்பன் ஸ்ரீ தான் எங்களது நாடகங்களின் சூத்திரதாரி. நண்பன் ஸ்ரீயின் நாடகப் பித்து அளவில் அடங்காதது. பிற்பட்டகாலத்தில் தொழில் நிமித்தம் அவன்

கொழும்புக்கு வந்த பின்னரும் ஒரு நாடகக்குழுவில் சேர்ந்து நடிகனாய் இருந்தான். நாடகக் குழுவின் நடிகை ஒருத்தியைக் காதலித்து கலப்புத் திருமணமும் செய்துகொண்டான்.

நான் நாடகத்துறையில் பெரிதும் ஆர்வம் கொள்ளவில்லை. ஆனாலும் பிற்பட்ட காலத்தில் உரும்பிராய் இந்துக் கல்லூரில் உயர்வகுப்பு மாணவனாக இருந்த காலத்தில் கல்லூரியின் பொன்விழா நடைபெற்றபோது ஒரு 'ஹாஸ்ய' நாடகத்தை எழுதி பிரதான பாத்திரமேற்று நடித்திருக்கிறேன்.

எனது 'புதியசுவடுகள்' நாவலின் இரண்டாம் பதிப்பு 2004ல் வெளிவந்தபோது அதற்கு முன்னுரை எழுதிய கலாநிதி துரை.மனோகரன் இதுபற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறார்: "எழுத்தாளர் தி. ஞானசேகரனும் நானும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள். யாழ்ப்பாணத்தில் உரும்பிராய் இந்துக்கல்லூரியில் அவர் உயர் வகுப்பிற் பயின்று கொண்டிருந்தபோது நான் இடைநிலைக்கல்வி பயிலும் மாணவனாக இருந்தேன். அவர் மாணவராக இருந்தபோது மாணவர் தலைவராகவும் எழுத்து ஈடுபாடு கொண்டவராகவும் விளங்கினார். கல்லூரி மாணவராக அவர் இருந்த காலத்திலேயே நாடகங்கள் எழுதி தாமும் பாத்திரமேற்று நெறிப்படுத்தி மேடையேற்றியுள்ளார். எழுத்தாற்றலோடு நடிப்பாற்றலையும் அவர் கொண்டிருந்தார். அவர் எழுதி நடித்த 'பொலிடோல் பொன்னர்' என்ற நகைச்சுவை நாடகம் இப்போதும் என் ஞாபகத்தில் உள்ளது. அதில் பொன்னர் என்ற பாத்திரம் ஏற்று நடித்து தமது நகைச்சுவை உரையாடல்களாலும் நடிப்பாற்றலாலும் சபையோர் அனைவரையும் ஞானசேகரன் கவர்ந்தார். "ஓசியெண்டால் பொன்னன் பொலிடோலும் குடிப்பான்" என்று அந்த நாடகத்தில் இடம்பெறும் ஒரு வசனம் இன்னும் என் நினைவில் உள்ளது. இயல்பாகவே எழுத்து ஈடுபாடு கொண்டிருந்த மாணவனான எனக்கு அவரது முயற்சிகள் பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தின. சிலர் மாணவப்பருவத்தில் எழுத்து முயற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட்டுவிட்டு, தொழில் கிடைத்ததும் எழுத்துத் துறையிலிருந்து அஞ்ஞாதவாசம் செய்வதுண்டு. ஆனால் ஞானசேகரன் அவர்கள் தமது எழுத்து முயற்சிகளைக் கைவிடவில்லை. அதனால் இன்று இலங்கையின் குறிப்பிடத்தக்க சிறுகதை, நாவல் எழுத்தாளர்களில் ஒருவராகவும் 'ஞானம்' சஞ்சிகையின் ஆசிரியராகவும் விளங்குகிறார்" என எழுதிச் செல்கிறார்.

எங்கள் ஊரில் வாழ்ந்த புராண இதிகாசப் பெயர்கள் கொண்ட நடிகர்களில் எனக்கு சிவபெருமான் முக்கிமானவராகத் தெரிந்தார். அதற்கு ஒரு காரணம் உண்டு.

சிவபெருமானை நான் எங்களூர் சங்கக்கடையிலே சந்திப்பேன். நான் சிறுவனாக இருந்த பொழுது எங்கள் வீட்டுக்கு கூப்பன் அரிசி வாங்க நான்தான் சங்கக்கடைக்குப் போவேன். சிவபெருமான் பொதுநிறமானவர். குடுமி வைத்திருப்பார். நெற்றியிலே பட்டையாகத் திருநீறு. இடுப்பிலே நாலுமுழ வேட்டி. தோளில் ஒரு சால்வை. இவரைப் பார்த்ததும் மாமாவின் பிரசங்கத்திலே நான் கேட்ட சிவபெருமான் செய்த திருவிளையாடல்கள் என் நினைவிலே வரும். அதுமட்டுமல்ல, அறுபதுகளின் பிற்பகுதியில் அவரைச் சந்திக்கும் சந்தர்ப்பங்களில் அ. முத்துலிங்கம் எழுதிய 'பக்குவம்' என்ற கதையிலே வருகின்ற 'ரத்தினண்ணை' என்ற பாத்திரமும் நினைவில் வரும். இந்த ரத்தினண்ணையும் சங்கக்கடையில் மனேச்சர் எழுதிய சிட்டையை வாசித்து சாமான் கொடுப்பவர்தான். அரிசி அளந்து அளந்து தவிடு படிந்த கைகளுடன் காணப்படுபவர்தான்.

கதை இதுதான்:

'ராசாத்தி, சின்னத்தங்கச்சி இருவரும் பருவம் அடையும் வயதிலுள்ள சகோதரிகள். ராசாத்தி மூத்தவள். சின்னத்தங்கச்சி இளையவள்.

பெரியவள் இருக்க சின்னவள் பக்குவப் பட்டுவிடுகிறாள். சாமத்தியச் சடங்கு தடல்புடலாக நடைபெறுகிறது. பெரியவள் ராசாத்தியின் மனதிலே பெரும் ஏக்கம். "நான் தானே... அவளுடைய அக்கா, நான்தானே வயதுக்கு மூத்தவள்... நான் இன்னமும் ஏன் இப்படி இருக்கிறன்...எனக்கு ஒருவேளை..." அவளுக்குத் தன்மேல் வெறுப்பு ஏற்படுகிறது. கண்களில் பெருக்கெடுக்கும் நீரை அவளால் அடக்க முடியவில்லை. இப்போதெல்லாம் இளம் கண்கள் சின்னத் தங்கச்சியைத்தான் பார்க்கின்றன. நாட்கள் நகருகின்றன. இந்த ஏக்கம் அவள் மனதை அடிக்கடி அலைக்களிக்கிறது. ராசாத்தி கூப்பன் கடைக்குப் போகிறாள். அரிசி அளந்து அளந்து தவிடு படிந்த அந்தக் கையினால் அவளுடைய தலையைத் தடவியபடியே அவன் சொன்னான், "ராசாத்தி ...நீ என்ன வடிவாய் இருக்கிறாய்...நீ ஏன் உன்ரை தலையை இழுத்து ரட்டைப்பின்னல் போடக்குடாது.. உனக்கு எவ்வளவு வடிவாய் இருக்கும் தெரியுமா! அவளுக்கு வெட்கம் கவிழ்ந்தது. குனிந்த அவள் கண்களில் மார்புச் சட்டைமீது குத்தியிருக்கும் புது ஊசி இரண்டும்தான் தட்டுப்பட்டன... ரத்தினண்ணைதான் அதனைக் குத்திவிட்டார்.

அதன்பின் ராசாத்திக்கு ரத்தினண்ணையின் நினைவுதான். இரவிலே படுக்கையில் புரளும்போதும் ரத்தினண்ணையின் நினைவுதான்.

என்ன ஆச்சரியம்!

ராசாத்தி சில நாட்களில் பக்குவப் பட்டுவிடுகிறாள்.'(26)

இந்தக்கதைக்கு ஒரு பெரும் முக்கியத்துவம் உண்டு. தினகரன் பத்திரிகையில் பேராசிரியர் க. கைலாசபதி ஆசிரியராக இருந்த காலத்தில் ஒரு சிறுகதைப்போட்டி இடம் பெற்றது. அந்தக் காலகட்டம் முற்போக்கு இலக்கியம்

முனைப்புப் பெற்றிருந்த காலம். பேராசிரியர்கள் கைலாசபதியும் சிவத்தம்பியும் முற்போக்கு இலக்கியவாதிகளை முன்தள்ளிக் கொண்டிருந்த காலம். முற்போக்கு அணியைச் சேர்ந்த ஒருவர்தான் இந்தப் போட்டியில் முதற்பரிசினைத் தட்டிக் கொள்ளப்போகிறார் என்று எல்லோரும் எதிர்பார்த்த வேளையில் முற்போக்குச் சட்டகத்துக்குள் அமையாத மேற்சொன்ன கதை முதற்பரிசைத் தட்டிக் கொண்டது. அதுவும் பேராசிரியர் கைலாசபதியே மேற்குறிப்பிட்ட கதையைத் தெரிவு செய்தார். நான் சென்ற அத்தியாயத்தில் குறிப்பிட்டதுபோல "மென்மையான மனித உணர்வுகளும் இலக்கியத்தில் முக்கியத்திவம் பெறுகின்றன. இலக்கியத்தை சட்டகத்துக்குள் அடக்கிவிட முடியாது' என்பதற்கு இதுவும் சான்றாக அமைகிறது. இன்னுமொரு உதாரணம் கூறுவதானால் புதுமைப்பித்தனின் 'கடவுளும் கந்தசாமிப்பிள்ளையும்' என்ற சிறுகதையும் இத்தகைய மென்மையான மனித உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சிறுகதைதான்.

எனது சிறுபராயத்தில் பல்வேறு சுவைமிகுந்த கதைகளைக் கேட்க எத்தகைய சந்தர்ப்பங்கள் வாய்த்தன, அவை எவ்வாறு எனது இலக்கியத்தடத்தில் பதிவாகின என்பதையும் இங்கு கூறிச் செல்லலாம்.

இப்போதெல்லாம் மாணவர்களுக்கு 'ரியூஷன்' வகுப்புகள் இருப்பதுபோல் அக்காலத்தில் இருக்கவில்லை. ஆசிரியர்கள் பாடசாலை தவிர்ந்த நேரங்களில் இலவசமாகவே மாணவர்களுக்குக் கற்பித்தார்கள். அனேகமாக மாலை ஆறு மணிமுதல் இரவு ஒன்பது மணிவரை இத்தகைய கற்பித்தற் செயற்பாடுகள் இடம்பெறும். அரிக்கன் லாம்பு ஒன்றை நடுவில் வைத்து சுற்றிவர மாணவர்கள் ஐந்தாறுபேர் வட்டமாக அமர்ந்திருப்பார்கள். சிறியவர்கள் பெரியவர்கள் ஆண்பெண் என்ற பேதமெல்லாம் இங்கு இருக்காது. இடம்கிடைக்கும் இடத்தில் இருந்து படிக்கவேண்டியதுதான். இவ்வாறு மூன்று நான்கு பகுதிகளாக அரிக்கன் லாம்புகளைச்சுற்றி மாணவர்கள் அமர்ந்திருப்பர். இந்த அரிக்கன் லாம்புகளை பெரிய வகுப்பு மாணவர்கள்தான் படிக்க வரும்போது கொண்டு வரவேண்டும். இராப்பள்ளிக்கூடம் முடிந்து வீடு திரும்பும்போது பெரிய மாணவர்களே சிறியவர்களை அவர்களது வீட்டிலே கொண்டுசென்று ஒப்படைக்கவேண்டும். விரும்பிய எவரும் இந்த இரவுப்பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்கலாம். ஆசிரியர் ஒரு திண்ணையில் அமர்ந்திருப்பார். மாணவர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு விடையளிப்பார். முக்கியமாக தமிழ், கணிதம் ஆகிய பாடங்கள் இங்கு கற்பிக்கப்படும்.

இத்தகைய இரவுப் பாடசாலைகளை வெவ்வேறு காலப்பகுதியில் எனது மாமா முறையான தங்கசாமி ஐயர் என்பாரும் எனது பெரியய்யா குமாரசாமி ஐயரும் நடத்தி வந்தார்கள். இந்த இரவுப்பாடசாலை முதலில் கோயிலார் மடத்திலும் பின்னர் ஆயாக்கடவை ஐங்கரன் மண்டபத்திலும் பிற்பட்ட காலத்தில் ஆசிரியர்களின் இல்லங்களிலும் நடைபெற்றன.

தங்கசாமி ஐயர் தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியில் கல்வி கற்றவர். பின்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியில் பயிற்சி பெற்றவர். பாலபண்டிதர் சோதனையில் சித்தியடைந்தவர். வசாவிளான் விக்னேஸ்வரா, குப்பிளான் விக்னேஸ்வரா பாடசாலைகளில் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றியவர். எங்கள் ஊரில் சனசமூக நிலையம் தோன்றுவதற்கு முன்னரே 'இந்து இளைஞர் மன்றம்' என்ற அமைப்பினைத் தோற்றுவித்து சமூகப்பணிகள் ஆற்றியவர். சமூகம் தொடர்பான சிந்தனைகளை இளைஞர்களிடையே ஏற்படுத்தியவர். இத்தகைய இந்து இளைஞர் மன்றத்தை வசாவிளானில் தான் கற்பிக்கும் காலத்தில் ஏற்படுத்தி அங்கும் பணிபுரிந்தவர்.

இவர் ஒரு கவிஞர். தனது கற்பனையில் ஒரு கவிதை உற்பவித்துவிட்டால் தனது சுட்டு விரலால் முதலிலே அந்தக் கவிதையை காற்றில் எழுதுவார். பார்க்க வேடிக்கையாக இருக்கும். ஊரில் யாராவது அமரத்துவம் எய்திவிட்டால் இரங்கற்பா எழுத இவரிடம்தான் வருவார்கள். அக்காலப் பத்திரிகைகளில் சில கவிதைகளை எழுதியிருக்கிறார். அக்காலத்தில் பிரபல்யமாக இருந்த ஆனந்த விகடன் குறுக்கெழுத்துப் போட்டிகளில் கலந்துகொள்வது அவரது பிரதான பொழுதுபோக்காக இருந்தது.

இவர் மிகவும் கண்டிப்பானவர். நான் இவரிடம் கல்விகற்ற காலத்தில் தினமும் ஒரு நாலடியார் பாடலை மனனம் செய்துவரும்படி எனது வயதையொத்த மாணவர்களிடம் கூறுவார். மனனம் செய்து ஒப்புவிக்கத் தவறினால் மாண[illegible]ன் மணிக்கட்டில் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு பிரம்பினால் பின்புறத்தில் சுழரச் சுழர அடிப்பார். அவரது அடி[illegible]யந்தே நான் நாலடியார் முழுவதையும் மனனம் செய்தேன்.

இந்த இரவுப்பாடசாலையில் உள்ள சிறப்பு என்னவென்றால் ஒரு மாணவனுக்கு ஆசிரியர் கூறுவதை அங்[illegible]நம் பல்வேறு வகுப்புமட்டத்திலுள்ள மாணவர்களும் செவிமடுப்பார்கள். உயர்வகுப்பு மாணவர்களுக்கு தமிழ[illegible]டத்தில் ஆசிரியர் கூறும் இலக்கியச்சுவை மிகுந்த பகுதிகளெல்லாம் சிறுவர்களுக்கும் பொசிந்துவிடும். ஒரு மாணவன் நளவெண்பாலில் கேள்விகோட்பான். மற்றவன் கம்பராமாயணத்தில் கேட்பான். இன்னொருவன் மகாபாரதத்தில் கேட்பான். வேறொராருவன் சிலப்பதிகாரத்தில் கேட்பான். இப்படியாக அந்த இரவுப்பாடசாலைகளில் ஆறேழு வருடங்கள் நான் கற்றபோது பெற்ற பழந்தமிழ் இலக்கிய அறிவு பரந்துபட்டது. இவற்றை விட மாற்றுச் சுவை கொண்ட கதைகள் பலவற்றை நான் கேட்டறிந்த வேறான சந்தர்ப்பங்களையும் இங்கு குறிப்பிடலாம்..

எனது தந்தை ஓர் அர்ச்சகர் என்பதை முதலாவது அத்தியாயத்தில் கூறியிருந்தேன். அவர் ஈவினை என்ற கிராமத்தில் உள்ள பிள்ளையார் கோயிலில் சிறுவயது முதலே அர்ச்சகராக இருந்தார். பிள்ளையாருக்குப் பிரசாதமாக மோதகம் அவிப்பார்கள். திருவெம்பாவை காலத்தில் தொடர்ச்சியாகப் பத்துநாட்கள் மோதகம் அவிக்க வேண்டியிருக்கும். திருவிழாக் காலங்களிலும் இப்படி ஏற்படுவதுண்டு. மோதகம் அவிப்பதற்கு ஊரவர்கள் அரிசி, தேங்காய், சர்க்கரை, பயறு முதலியவற்றை பனையோலைப் பெட்டிகளில் கொணர்ந்து கொடுப்பார்கள். அவர்கள் கொடுக்கும் பொருட்களுக்கு ஏற்றவாறு எத்தனை மோதகம் கொடுக்கவேண்டும் எனக் கணக்குப் பார்த்து அந்தத் தொகையையும் பொருள்கொடுத்தவரின் பெயரையும் ஆறு அங்குல நீளமான பனையோலை நறுக்குகளில் பென்சிலால் எழுதிப் பெட்டிகளில் போட்டுவைப்பார் ஐயா. இப்படியாக சில நாட்களில் முந்நூறு பேர்வரை உபயத்திற்குக் கொடுத்துவிடுவார்கள். சில நாட்களில் ஐயாயிரம் ஆறாயிரம் மோதகம் அவிக்க வேண்டி ஏற்படும். இவ்வளவு தொகையான மோதகம் அவிப்பது இலேசான காரியமல்ல. அவற்றை அவித்தபின் கணக்குப்பண்ணி உரிய பெட்டிகளில் கணக்காக எண்ணிப்போட்டு உரியவரிடம் விநியோகம் செய்வதும் இலேசான காரியமல்ல.

மறுநாள் திருவெம்பாவைப் பூசைக்கு வேண்டிய மோதகங்களை முதல்நாள் இரவுமுழுவதும் கண்விழித்திருந்து அவித்தால் தான் முடியும். அவித்து முடிந்ததும் தலைச்சுமையாக ஒரு மைலுக்கு அப்பால் உள்ள கோயிலுக்கு கொண்டு செல்லவேண்டும். அதிகாலையில் கிழக்கு வெளிக்கும் நேரத்தில் பனிக்குளிரில் நடுங்கியபடி ஒருவர்பின் ஒருவராக தோட்ட வரம்புகளில் வரிசையாக நடந்து மோதகக் கடகங்களை தலைச்சுமையாகக் கொண்டு செல்வோம். இத்தனை வலிகளும் மறுநாள் மோதகம் சாப்பிடுபவர்களுக்கு தெரிந்திருக்க நியாயமில்லைத்தான்! அந்தக்காலத்தில் கிராமத்துக் கோயில்களில் அர்ச்சகர்களாக இருந்த ஏழைப் பிராமணர்கள் பலர் தமது வாழ்வாதாரத்திற்காக இத்தகைய கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்க வேண்டித்தான் இருந்தது. மோதகம் பிடிப்பதற்கு அக்கிரகாரத்தில் உள்ள உறவினர்கள் எல்லோரும் சேர்ந்து விடுவார்கள். ஐயா, அம்மா, பெரியய்யா, செல்லமாமி, இராசாத்தியக்கா, சின்னம்மா, மணிமாமி, கைதடி ஆச்சி, நான், தங்கச்சி, தம்பிமார்கள் இப்படியாக வட்டம் வட்டமாக அமர்ந்திருந்து மோதகம் பிடிப்போம். சிலர் மா குழைப்பார்கள். சிலர் குழைத்த மாவை சம அளவிலான வில்லைகளாக உருட்டித் தட்டுவர். சிலர் தட்டுப்பிடிப்பார்கள். வேறுசிலர் தட்டில் உள்ளுடன்களைப் பொதிந்து மோதகம் பிடிப்பார்கள். இரண்டு மூன்று அடுப்புகளில் மோதகச்சட்டிகளில் மோதகம் வெந்து கொண்டிருக்கும். ஐயா சிலவேளைகளில் மா குழைப்பார். சிலவேளைகளில் அவிந்த மோதகங்களை ஓலைப்பாயில் கொட்டிப் பரவுவார். அம்மா உள்ளுடன் கலப்பார். அடுப்புகளைக் கவனிப்பார். வெளியே தேங்காய் துருவிக்கொண்டிருக்கும் வள்ளியம்மை, வள்ளர்கிழவி, காலிங்கர், கைராசி, 'விசர்'நடேசன் ஆகியோரை இடைக்கிடை சென்று பார்த்து தேநீர் கொடுத்து, சாப்பாடு கொடுத்து உபசரிப்பார். அனேகமாக பத்து நாட்களிலும் இரவில் எட்டுமணிக்கு மோதகவேலை தொடங்கினால் அதிகாலைவரை தொடர்ந்து இடம்பெறும். சிறுவர்களாகிய எங்களுக்கு நடுச்சாமம் நெருங்கும்போது நித்திரை தூக்கியாட்டும். எங்களது நித்திரையைக் கலைப்பதற்கு சுவையான கதைகளைக் கூறுவார் பெரியய்யா. இந்தக் கதைகள் எனது இலக்கியத்தடத்தில் எவ்வாறு பதிவாகின என்பது சுவாரஸ்யமானது.

இதோ அவர் கூறிய கதைகளில் இரண்டு:

பெரியய்யா ஒருநாள் சுன்னாகம் சென்றுவிட்டு இரவு நேரம் நடுச்சாமத்தில் ஊருக்குத் திரும்பவேண்டியிருந்ததாம். கொத்தியாலடிச் சுடலையைத் தாண்டும்போது தெருவோரத்தில் ஒரு உருவம் எரிந்து கொண்டிருந்த பிணம் ஒன்றை இழுத்துவைத்துத் தின்றுகொண்டிருந்ததாம். பெரியையாவுக்கு அது பேய்தான் என்பது புரிந்துவிட்டது. ஓடித்தப்ப நினைத்து வேகமாக ஓடத் தொடங்கினார். பேயும் பின்னால் துரத்தத் தொடங்கியதாம். வேகமாக ஓடிச் சென்று பக்கத்திலிருந்த ஒரு ஆலமரத்தின் உச்சிக்கே ஏறிவிட்டாராம். பேய்க்கு மரமேறத் தெரியவில்லை. பேய் அவர் இறங்கும்போது பிடித்துத் தின்பதற்காக ஆலமரத்தின் அடியில் குந்திக் கொண்டதாம். நேரம் செல்லச் செல்ல பெரியய்யாவுக்கு பயத்தினால் உடல் நடுங்கத் தொடங்கியது. 'ஒண்டுக்கு'ம் வந்துவிட்டதாம். ஆலமரத்தின் உச்சியிலிருந்தபடியே 'ஒண்டுக்கு' இருந்திருக்கிறார். உடனே அந்தப்பேய் அதனைக் கயிறாகப் பிடித்துக்கொண்டு ஏறி மரத்தின் உச்சி வரை வந்து விட்டதாம். பெரியய்யாவுக்கு உயிர்ப்பயம். என்ன செய்வதென்றே தெரியவில்லை. ஒண்டுக்குப்போவதை 'டக்'கென்று அடக்கிவிட்டாராம். பேய் பிடரி அடிபட நிலத்திலே விழுந்து மண்டை சிதறி இறந்துவிட்டதாம்.

இப்படியான கதைகளை பெரியையா கூறும் போது நான் வாய் பிளந்து கேட்டுக் கொண்டிருந்திருக்கிறேன். அந்த வயதில் இக்கதைகள் எல்லாம் உண்மையானவை என நினைத்துப் பயந்து நடுங்கியிருக்கிறேன். ஆனால் பிற்பட்ட காலத்தில் இவ்வாறான கதைகளும் என் கற்பனா வளத்தை வளர்த்தெடுக்க உதவியிருக்கின்றன. எனது இலக்கியத் தடத்தில் பதிவாகியும் இருக்கின்றன. சென்ற அத்தியாயத்தில் 'வாசனை' என்ற கதையில் வரும் சில பகுதிகளை எடுத்துக்காட்டாகத் தந்திருந்தேன். அதன் தொடர்ச்சியாக வரும் வேறொரு பகுதியை பொருத்தப்பாடு கருதி கீழே தருகிறேன்.

"அந்தக் காலத்தில் தாத்தா சொன்ன கதையொன்று என் ஞாபகத்தில் வந்தது. தாத்தாவின் வாலிபப் பருவம் அது. ஒருநாள் நடுச்சாமம் ஐயனார் கோயில் வழியாக வரவேண்டிய சந்தர்ப்பம் அவருக்கு ஏற்பட்டதாம். ஐயனார் கோயிலின் முன்னால் ஒரே சனக்கூட்டமும் வெளிச்சமுமாக இருந்ததினால் அங்கு என்ன நடக்கிறது என்று பார்க்கும் நோக்கத்துடன் அவர் தரித்துநின்று பார்த்திருக்கிறார். கோயிலின் முன்னால் பலர் கூடியிருந்து பொங்கல் பானைவைத்துப் பொங்கிக் கொண்டிருந்தார்களாம். சிலர் பொங்கி முடித்து ஐயனாருக்குப் படைத்து வழிபாடு செய்துகொண்டிருந்தார்களாம். தாத்தா விடுப்புப் பார்க்கும் நோக்கத்துடன் அங்கு சென்றிருக்கிறார். அவர்கள் தாத்தாவை வரவேற்று பொங்கல் பிரசாதம் கொடுத்துச் சாப்பிடச் சொன்னார்களாம். வெற்றிலை பாக்குக் கொடுத்து தாம்பூலம் தரித்துக்கொள்ளும்படி வேண்டினார்களாம். அவர்களில் சிலரும் வெற்றிலை பாக்குப் போட்டு கொண்டார்களாம். அவர்களிடம் சுண்ணாம்பு இருக்கவில்லை. தாத்தாவிடம் சுண்ணாம்பு கேட்டுவாங்கி வெற்றிலையில் தடவி மடித்துத் தாத்தாவுக்கும் கொடுத்தார்களாம். தாத்தா தற்செயலாகக் கீழே பார்த்திருக்கிறார். அப்பொழுதுதான் அங்கே இருந்தவர்களது கால்கள் நிலத்திலே பதியாது அந்தரத்திலே இருந்ததை கவனித்திருக்கிறார். தாத்தாவுக்கு அப்போதுதான் பேய்களின் மத்தியில் தான் மாட்டிக்கொண்டிருப்பது புரிந்ததாம். மெதுவாக அவர்களுக்குப் போக்குக்காட்டி அந்த இடத்தை விட்டு நழுவி வந்து விட்டாராம். இது தாத்தா பேய்களிடம் வெற்றிலை வாங்கிப்போட்ட கதை"(27)

இதுவும் பெரியய்யா சொன்ன கதைதான்.

மேற்குறிப்பிட்ட பகுதியை வாசித்த வாசகர் சிலர் இந்த 'வாசனை' சிறுகதையின் இலக்கியப் பெறுமானம் யாது? என யோசிக்கலாம். உண்மையில் இங்கு தரப்பட்ட பகுதி கதையில் வரும் ஒரு முக்கிய பாத்திரத்தின் தன்மையை வாசகர் விளங்கிக் கொள்ள எழுதப்பட்டதாகும். கதையை முழுமையாக வாசிக்கும்போதுதான் மனிதகுல மேம்பாட்டுக்கான கருத்துகள் இக்கதையிலே விரவி வருவதைக் காணலாம். மேலே குறிப்பிட்ட 'பக்குவம்' கதையைப் போன்றதொரு மென்மையான மனித உணர்வுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கதைதான் இதுவும். இப்படியாக இளம்மனதில் பதிந்த இரசனை மிகுந்த கதைகளை சந்தர்ப்பம் கிடைக்கும்போது பொருத்தமாக என் இலக்கியத்தடத்திலும் பதிவு செய்திருக்கிறேன்.

(இனி அடுத்த இதழில்)

உசாத்துணை:


(23) மணிமலர்: வெளியிட்டவர் எஸ். எஸ். சர்மா. 3கிம் கியாட் அவென்யு, சிங்கப்பூர் 12 - பக் 41

(24) நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம் -2004 – நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன வெளியீடு. தொகுப்பு இராசையா ஸ்ரீதரன் .பக்:12

(25) மேற்படி நூல் பக்: 11

(26) அ. முத்துலிங்கம் கதைகள். தமிழினி வெளியீடு.2003 பக்:88

(27)தி. ஞானசேகரன் சிறுகதைகள் (பக்:230-233) ஞானம் பதிப்பகம்(2005)


# என் கதை

பெரிய ஐங்கரன்

வயிற்றைப் பிளந்து கொண்டு
வெளியே கிளைபரப்பி
நீட்டி நிமிர்ந்து
வளர்ந்து ஒரு கனிமரம்
ஒவ்வொரு கிளையிலும்
பற்பல கனிகள்
வெவ்வேறுபட்ட வண்ணங்களில்
அவற்றைக் கொத்தித்தின்னக் கூடின
பெயர் அறியா உலகப் பறவைகள்

பழங்களைத் தின்று விட்டு
சிறகுகளில் சுமந்து கொண்டு
என்னை
எங்கோ கொண்டு
சென்றன அவை
அவை நம்பியிருக்கக் கூடும்
கனியாகவோ
சுவையாகவோ
நான் மாறுவேன் என்று.

# "செருப்பு"



தெ.ஞானகுமார்
(அவுஸ்திரேலியா)

சிக்கனமாக வாழ்ந்து காசு சேர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு 'புருணை'யில் கால் பதித்தேன். சிறிலங்காவில் சுத்தியது போல இங்கேயும் சுத்துவதில்லை என்பதில் கரிசனையாக இருந்தேன்.

செருப்பு கூட வாங்காமல் வேலைக்குப் போடும் சப்பாத்தையே பாவித்து வந்தேன். சில நாட்களிலேயே செருப்பின் தேவையை உணர்ந்து கொண்டேன். இருந்தாலும், வாங்கும் செருப்பை மலிவான ஒன்றாக வாங்க எண்ணி பக்கத்தில் இருந்த சுப்பர் மார்க்கட் ஒன்றினுள் சென்றேன். என்னைப் போல் இங்கே பலர் இருக்கிறார்களோ என்னவோ, ஒரு டொலருக்கே செருப்பு பல குவித்து வைத்து வித்தார்கள். எந்தவித தயக்கமுமின்றி ஒன்றை வாங்கிக் கொண்டேன். நல்ல அளவாகவும் இதமாகவும் இருந்தது.

ஆனால் இரண்டு நாட்களில் 'வார்' அறுந்து விட்டது. உடனேயே அதே சூப்பர் மார்க்கட் சென்று ஒரு மல்டி பொண்ட் ரியூட் ஒன்றை 2.90 டொலருக்கு வாங்கி வந்து ஒட்டிக் கொண்டேன். இது ஒரு பெரிய வேலையா என்ன? ஆனால் நான் நினைத்தபடி மல்டி பொண்ட் வேலை செய்யவில்லை மறுநாளே 'வார்' அறுந்து விட்டது.

சிந்திக்க தொடங்கினேன். ஏதாவது புத்திசாலித்தனமாய் செய்யத் தீர்மானித்தேன். அதுவும் எனக்கேயுரிய பாணியில். மீண்டும் சூப்பர் மார்க்கட் நுழைந்தேன். ஸ்குறூ செக்ஷனில் தேடினேன். பக்கெட்டாக மட்டுமே கிடைத்தன. சரி பின்னர் உபயோகப்படும் என்று 1.5 அங்குல ஸ்குறூ பக்கட் ஒன்றை 2.00 டொலருக்கு வாங்கினேன். அட, அதைப் பூட்ட ஸ்குறூ ட்ரைவர் இல்லை! அதுவும் வேண்டும். மீண்டும் தேடினேன். 2டொலரிலிருந்து 20 டொலர்வரை செட்டுகள் இருந்தன. இதுவும் பின்னர் தேவைப்படும் என்று சுமாராக ஒரு செட்டினை 6.90 டொலருக்கு வாங்கினேன். சந்தோஷமாக வீடு வந்து வேலையைத் தொடங்கினேன். செருப்பு, ஸ்குறூக்களுடன் சில நிமிட போராட்டம் ஆயிற்று. என் செருப்பைத் திருத்தி விட்டேன். எனக்குப் பெருமிதமாக இருந்தது. ஆசையாக சில தினம் அணிந்து கொண்டு திரிந்தேன்.

ஆனால், மூன்றாம் நாள் என் செருப்பு வாரின் அடுத்த பக்கம் கழன்று விட்டது. அந்தப்பக்கத்தில் ஸ்குறூ பூட்டமுடியாது மிகவும் மெல்லியது. வேறு வழியில்லாமல் சுப்பர் Glue பாவிக்க முடிவு செய்தேன் சூப்பர் மார்க்கட் திறந்திருந்தது. ஒருமாதிரி ஒரு ரியூப்பை தெரிவு செய்து எடுக்கும் போது, பக்கத்தில் 6 ரியூப் டொலருக்கு போட்டிருந்தார்கள். மம்... இதுவும் பின்னர் தேவைப்படும். அதையே எடுத்தேன். அன்று பின்னேரமும், செருப்புடன் போராட்டம். ஒரு மாதிரி அதையும் ஒரு வழிபண்ணி விட்டேன். இப்போது செருப்பு நீண்ட நாட்கள் உழைக்கும் நல்ல பலமான ஒட்டு. என் வேலையில் எனக்கே ஒரு திருப்தி.

ஆனால், ஆனால், அதைப் போட்டுக் கொண்டு நடக்க ஒரு மாதிரி இருந்தது. அழகாக இல்லை. எல்லோரும் என் செருப்பையே பார்ப்பது போல் தோன்றியது. ம்.ஹீம்.இது சரி வராது.

அப்போதுதான் என் ஆறாவது அறிவு வேலை செய்ய ஆரம்பித்தது. 'மடையா, மடையா, போய் நல்ல சப்பாத்தைப் பார்த்து வாங்கு உனக்கு ஒன்று தேவை அல்லவா? அதுவும் நீண்டநாள் உழைக்கும் அல்லவா?'

எனக்காகவே திறந்திருந்தான் சூப்பர்மார்க்கட். சப்பாத்து செக்ஷன் ரொம்ப பெரிசாக இருந்தது. முன்னால் மலிவாக சப்பாத்துக்களை ஒரு பெட்டியில் குவித்து வைத்திருந்தான். திரும்பிக்கூட பார்க்கவில்லை. பார்த்தால் மனம் மாறிவிடும். உள்ளே போய் ஒரு நல்ல சப்பாத்தாக பார்த்து 22.90 டொலருக்கு வாங்கினேன். நல்ல சப்பாத்து, நன்றாய் உழைத்தது.

இப்படித்தான் நான் சிக்கனமாக இருந்தேன்! இருக்கிறேன்.

# ஈத்தம் பழம்

திக்குவல்லை கமால்

மொத்த விற்பனை நிலையம் 'சரத் ஸ்டோர்ஸ்' முன்பாக நான்குமுறை நகர சபைத் தேர்தலில் நின்று தெரிவு செய்யப்பட்ட மெம்பர் மாஜிதின் ஸ்கூட்டர் நின்றது.'

'மெம்பர் மாத்தயா வாங்க வாங்க…"

எங்கு சென்றாலும் அவருக்கு இப்படி நல்ல வரவேற்பு தான்.

இந்த முறை உள்ளூர் தேர்தலுக்கு நின்று வெற்றி பெற்றதோடு அவரது கட்சி ஆட்சியிலும் அமர்ந்திருப்தால்மதிப்பு மரியாதைக்கு எவ்வித குறைசலும் இல்லை

'ம்…எனத்தியன் இந்த பொகம்' முகம் மலர்ந்தபடி முதலாளி கேட்டார் .

"எனக்கு ஒரு பத்து அந்தர் ஈச்சம் பழம் தேவை"

"இவளவு தானா லொறி கொழும்புக்கு பெய்த்திக்கி கோலொன்டு குடுத்தா சாமான் வரும் முதலாளி சிரித்தார்.

"ஒரியினல் சாமான் எனக்கு வோணும்"

"அப்படி சாமான் பஜார்ல தேடக் கஸ்டம்"

"தேவயான சாமான தேடிகுடுக்க வேணும் அதுதான் யாவரும் இங்கே வாருங்கள் இந்த யடம் தான் கேக்கிய"

தனது கைப் பைக்குள் இருந்து கடதாசியில் சுற்றிய ஈச்சம் பழங்களை எடுத்து நீட்டினார். கருகரு வென்றிருந்தது தனித்தனி உருண்டைப் பழம் நசுக்கினால் தேன் பாயும் பதம். பார்க்கவே நாவூறியது

"வாயூறுதப்பா"

இந்த ஜடம் பத்து அந்தர் நான் தரன்… லோகல் ஜடம் நீங்க எனக்கு தரவேணும் சரியா

"…………"புன்னகையே பதிலாகியது.

"மத்த விசயங்களை பிறகு பார்ப்பம் நான் வெளணக்கி வேன அனுப்பியன். போட்டனுப்புங்கோ."

மெம்பர் வேகவேகமாக வெளியே வந்து ஸ்கூட்டரில் ஏறினார். இருபது நிமிடம் ஓடினால்தான் ஊர் போய்ச் சேரமுடியும்.

2

தெரீமா செய்தி ?

"நீ போய்பட பாத்துக் கொண்டு எங்களுக்குகட்டக் கேட்டுச் சரிவாரா?"

இந்த பணமும் சவுதிலீருந்து ஈத்தம்பழம் அனுப்பிக்காம்"

"செல்லி வேல்ல சவுதிப் பழம் வாயில போட முந்தியே கரையிது. கடேலே விக்கியதேத்தியன்"

பாருக் நானாவின் தேநீர் கடை களை கட்டியது.

நீண்ட காலமாகவே சவுதி அரசாங்கம் இந்த அன்பளிப்பை செய்துவருகிறது பேரிச்சம்பழத்தைக் கொண்டு நோன்பு துறப்பது சுன்னத்து. இந்த நாட்டிலுள்ள சகல முஸ்லிம்களும் முப்பது நோன்பையும் துறக்கப்போதுமான உயர்தர பழங்களை அது அனுப்பி வைக்கிறது.

"ஏத்தியன்டா போன வருசம் இருநூத்தம்பதாலு மில்ல பள்ளியால அனுப்பீந்த"

பசிக்கித் தின்னியதல்லேன். நோம்பு தொறக்கியது. ஒத்தருக்கு ஒண்டிருந்த போதும்"

கருத்து வெளிப்பாடு தொடர்ந்தது.

பள்ளிவாசல்களும் வீடுவாசல்களும் புனித நோன்பை வரவேற்க மும்முரமாகத் தயாராகிய வண்ணமிருந்தன.

3

இஷாத் தொழுகையைத் தொடர்ந்து டிரஸ்டி போட் பேச்சாளர் பென்ஷன் மஸ்டர் எழுந்து நின்றார்.

"பள்ளிவாசலுக்கு அரசாங்கத்தால ஈச்சப் பழம் கெடச்சீக்கி. இன்மை ரெண்டு நாள்ல நோம்பு. நாளாக்கி அஸருக்குப் பொறகு பங்கிடுகிய. இன்ஷா அல்லா ஊட்டியளுக்கு அனுப்பியத்துக்கு ஏற்பாடு பண்ணி கெடுக்காதவங்க வந்து செல்லுங்கா…"

அன்று மெம்பரும் மணக்க மணக்க பள்ளிவாசலுக்கு வந்திருந்தார். நோன்பு கால சிறப்பு ஏற்பாடுகளுக்கான மஷ்ரா இஷாவுடைய சுன்னத்துக்கு பின் நடக்கவிருந்தது.

"மெம்பருதான் இந்த ஏரியாக்கு பொறுப்பு. இல்லாட்டி நோன்புக்கு முந்தி சாமான் வாறா? ஓடியாடி கொழும்புக்குப் பெய்த்துக் கொணந்திட்டாரு ஆறு மஹல்லா. அவரட வேனிலே கொணுபெய்த்துக் குடுத்த"

"மெம்பரின் ஆதரவாளர் ஆங்காங்கே புகழ்பாடிக் கொண்டிருந்தனர்."

'ம்… அந்த மனிசனாலதான் ஊருல பொதுவேலையள் நடக்கிய எனத்த செஞ்சாலும் நன்டில்லம்' மற்றொரு ஸபோட்டர் இன்னும் ஒரு படி மேலாகப் பேசினார்.

"டேய் … அல்லாவுக்கா செய்த வேலக்கி மனிசருக்கிட்ட நன்டி வழிபாக்கப்படாது தெரீமா' இடையில் ஒரு கிறுக்கன்.

அன்றே ஊரெல்லாம் ஈத்தம் பழக்கதை பரவிட்டது.

"இந்தப் பைணம்தான் ஊடுவாசலுக்கே கொணு பெய்த்துக் குடுக்கப்போற போன பைணம் தெரியவா? வந்தெடுக்கச் செல்லி ஸ்பீக்கரில சென்ன. இனி எல்லாரும் போறா?"

"சேந்துக்கோ நிக்கியவனியளுக்கு நல்லவாசி"

சில்லறைக் கடையில் கூடிய பொம்பிளைகளும் விட்டுவிடவில்லை.

4

'பாத்தும் மோவ் ஈச்சப் பழம் கெடச்சா?'

"ஈச்சப்பழமா அது... வெறும் கல்லுத் துண்டேன்'

அச்சாவுக்கு உறுதியாகிவிட்டது. எல்லோருக்கும் ஒரே மருந்துதான்.

"பெரிசாப் பேசிப்போட்டம்... இந்தப் கைபணம் தான் ஒழுங்காக் குடுத்தாம். ஒழுங்காக் குடுத்தது வெளங்கிய"

"பாத்தும் தாத்த செல்லியதென்டா மெய்தான்' ஒழுங்கைக்குள்ளால் வந்த ஸ்த்தார் காக்காவின் காதிலும் விஷயம் விழுந்திருந்தது.

'ஆ நீங்களா? பாடாவி ஈச்சப் பழமேன் இந்தப் பைணம். சரிப்பெரிசா சௌதீலிருந்து அனுப்பியாம்... அங்க வீசியத்த இங்கனுப்பி வேலில்லேன்

"ஓ...ஓ... அதத்தான் பள்ளியடீலேம் கதக்கியாங்க" இது ஸத்தார் காக்கா.

"இப்பினி பேசி வேலில்ல" அய்சதாத்தா அலுத்துக்கொண்டார்.

'பொறத்தீ ஊரியளுக்கு தேன்மாதிரி ஈச்சப் பழம் குடுத்தீக்காம் அது எத்தினயோ பேரு செல்லிய'

'பாருங்கெபாக்க...அப்ப எங்களுக்கு மட்டு மெனத்தியன் இப்பிடி...ம் தாருக்கிட்டச் செல்லவன் இந்நியாயத்த பாத்தும்மாவால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

'எங்கடூருக்கு எல்லாத்திலேம் இப்பிடித்தான் நடக்கிய பாக்கக் கேக்க ஆளில்லேன்' ஸத்தார் காக்காவின் எள்ளல்.

5

"ஆ வாங்க வாங்க"

சரத் ஸ்டோர்ஸில் மெம்பருக்கு பலத்த வரவேற்பு முதலாளி கசியர் ஸீட்டில் இருக்க வில்லை. உள்ளே பிரத்தியேக அறையிலிருந்தார்.

நேரே அங்கு சென்றார் மெம்பர்.

"வாங்க வாங்க"

அவருக்காக குளிர்பானம் தயாராக விருந்தது.

'இவளவு லேட்?' முதலாள் கேட்டார்

'எடேல ஒத்தன் புடிச்சிக் கொண்டான். மந்திரீக்கிட்ட காயிதம் எடுத்துத் தரட்டாம்" மெம்பர் பெருமையாகச் சொன்னார்.

கதைத்தபடியே முதலாளி ஆயிரம் தாள்களை எண்ணினார்.

காசு கைமாற்றியது.

மெம்பர் விரைடபெற்றார்.


சிலவேளை பிறைகண்ட செய்தியோடு நோன்பு ஆரம்பிக்கும் தகவல் வானொலியில் ஒலிபரப்பாகக் கூடுமென்ற அவசரம் அவருக்கு. தலை நோன்பின் தராவீஹ் தொழுகையை தவறவிடக் கூடாதல்லவா?

# வளர்ச்சி

பருவம் மழைக்கூடு
கட்டியிருக்கிறது
சிறுவனும் சிறுமியும்
நிலை கொண்டு நகர
துருவத்தின் கரடிகள் பன்றிகள்
சினைகொள் ஆமாற் போல ஒரு
முக்குப் பேணியடியில்
பருவம் மழைக்கூடு
கட்டியிருக்கிறது.

பேனாமுனையில் உருவான
வேகம் தணியாமல்
நீர் சுரப்பில் வழியும்
காதல் திராவகத்தையும் மீறி
அமில மழைப் பிரதிநிதியாக
மழைக்கூடு மலர்கிறது.

நூற்றாண்டு தேவையில்லை
உன்னை நான் பாட
கலம்பகங்கள் தானாக கருத்தரிக்க
ஒற்றை ஈரடியில்
திட்டி விடலாம் உன்னை
மீண்டும் மீண்டும்



வேண்டுமென்றே
பெய்யாமல் விட்ட மழைக்கும்
கனவுகள் கடந்த புழைக்கும்
மந்தாரப் பூக்களின் அர்ச்சனை
கடவுளர்களை அழைத்துவருமா?
வேண்டாமென்று சொன்னாலும்
கசந்ததல்ல பிரிவு
இருவருக்கும்
காகிதங்கள் எரியட்டும்
சங்கில் பிறந்தோர்க்கு
என்ன தொல்லை?

பேசியவைகள் பேசியவைகளாகவும்
நடைமுறைக் காற்றோடும்
இனிவரும் இரவுகள்
சிறுபறைகளோடு முழங்கட்டும்

எனதே எனதான
குருவிக் கூடுகளைக் கலைக்க
பருவம் மழை மீறி
பனி கொண்டாடினாலும்
அனுமதியேன்.

வை.சாரங்கன்

# நவீன கவிதை வெளியும் ஆக்கிரமிப்பின் கால் தடமும்

## வஸீம் அக்ரமின் கவிதைகள் குறித்து பிந்திய வாசிப்பு

எம்.சீ.நஜிமுதீன்

கவிதை ஒன்றின் அழகியலை அதன் பாடுபொருளின் தன்மையிலும், அது வெளிப்பட்டு நிற்கும் மொழியின் வடிவ ஒழுங்கிலும் வாசகனை மகிழ்வுடன் காணலாம். கவிதைக்கான மொழி, அதன் கட்டமைப்பு, அழகில் தனித்தன்மை பெற்று ஒழுக வேண்டும். அப்போது தான் கவிதையாக அது உருவம் கொள்ளும்.

ஈழத்து கவிதைப் பரப்பு 1980களின் பின் சமூக அரசியல் முழுமை பெற்று நிற்கின்றது. அந்த வடிவம் அல்லது சூழல் 2000ற்குப் பின்னர் நவீனம், பின் நவீனம் போன்ற மொழியின் மாய உருவங்கள் ஊடாக ஆகர்சிப்புத் தன்மையில் மிதக்கின்றது எனில் அதில் பிழை இருக்க முடியாது.

2005ற்குப் பின் எழுதத்தொடங்கிய புதிய தலைமுறைக் கவிஞர்களுள் அநுராதபுரத்தைப் பிறப்பிடமாக கொண்ட வஸீம் அக்ரம் தனித்துவம் உள்ள படைப்பாளியாக நம்பிக்கையுடன் வளர்ந்து வருகின்றார். இவரது இரண்டாவது தொகுதி "ஆக்கிரமிப்பின் கால் தடம்" எந்த வித சலனமுமின்றி வெளிவந்துள்ளது.




போர், இடப்பெயர்வு போன்ற சூழ்நிலை உக்கிரம் கண்டிருந்த காலப் பகுதியில் வந்த இக் கவிதைத் தொகுதி பற்றிய இந்தக்குறிப்புகள் ஒரு பிந்திய வாசிப்பாகவே இருப்பினும் கவிதைகளின் கால வரைவு அல்லது காலப் பிரதிபலிப்பு கவிதைகளின் முக்கியத்துவத்தை உணர்த்தி நிற்கின்றன. அநுராதபுரம் நண்பர்கள் இலக்கிய குழுவின் "படிகள் பதிப்பகமாக" வந்துள்ள இந்தத் தொகுதியில் உள்ள கவிதா விமர்சனத்தை இனி அணுகலாம்.

வஸீம் அக்ரமின் 'ஆக்கிரமிப்பின் கால் தடம்' கவிதை நூலுக்கான அணிந்துரையில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். "எதனையோ தொலைத்துவிட்டு ஏங்கித் தவிக்கும் பிள்ளையைப் போல கவிதைகளைக் காணவேண்டியுள்ளது".

இந்தக்கூற்றிலிருந்து கவிஞனது படைப்புகளின் உண்மை நிலையை புடம்போடலாம். அதாவது வஸீம் அக்ரமின் இந்தத் தொகுதியில் இழந்தவைகளை தேடும் ஒருவனாக பெரும்பாலான கவிதைகள் மூலம் சங்கமிக்கின்றார். குறிப்பாக போர், வன்மம், நில ஆக்கிரமிப்பு, மனிதப் படுகொலை, அகதி வாழ்வு, காதல் என்ற பரிமாணங்களில் நமது கவிதா உணர்வை ஊக்குவிப்பதாக கவிஞரது படைப்புகள் காணப்படுகின்றது.

வஸீம் அக்ரமின் தொகுதியில் இழப்புக்களுக்கான பாடல்களே ஒருங்கியுள்ளன. அதாவது வஸீம் அக்ரமின் கவிதைகளில் உள்ள விடய தானங்களில் முக்கியமான வற்றை பின்வருமாறு நோக்கலாம்.

1) நில ஆக்கிரமிப்பு, துயரம், இழப்பு

இவ்வாறான கவிதைகள் இந்தத் தொகுதியில் முதன்மை பெறுகின்றன. உதாரணமாக பயண நிழற்படம், ஆக்கிரமிப்பின் கால்தடம், மனித அவலக்குறிப்பு, உறவுகள் பிரிந்த காலத்தின் அச்சக் கனவு, ஒரு எதிரியின் காவலரண், சுதேச உரிமையைத் தொலைத்தல், மீசான் கட்டை பயணம், துயர் கலந்த வெளி, மண் தின்னும் மனசு உள்ளிட்ட கவிதைகள் நில ஆக்கிரமிப்பு, துயரம், இழப்பு, உரிமை, இடப்பெயர்வு, அகதி வாழ்வின் கொடூரம் போன்ற மனித அவலங்களைப் பேசுகின்ற கவிதைகளாக இத் தொகுதியில் முதன்மை பெறுகின்றன. கவிஞரின் வரிகள் ஊடாகவே கவிஞரின் கவிதா ஆளுமையை, அழகாக நாம் வாசித்து நுகரலாம்.

குரூர இருள்
அடை மழை,
இடி மின்னல், புயல்
இன்னும் வார்த்தைகளால்
சொல்லமுடியாத
ஓர் அசாதாரண சூழலில்
எனது தங்குமிடத்துக்காக
வீறு நடைபோடுகிறேன்.

வழியில் முட்கம்பிகளால்
பின்னப்பட்ட வேலிகள்
அதனருகில்
பயங்கரத்தின் அடையாளங்கள்...

(ஆக்கிரமிப்பின் கால்தடம்)

இவ்வாறு தொடரும் கவிதையின் ஈற்று வரிகள், மண் எதிரியின் காவல் நிலமாக மாறி புனித பூமியாக தடம் மாறுவதை தன்னிலை அநுபவமாக கவிஞர் பாடுகின்றார். அவ்வாறே

"முறுக்குக்கம்பிகளால்
காவலிடப் பட்ட எல்லைகளைத் தாண்டும்
சுயம் மரணத்தின் சுவர்களால்
நிர்மாணிக்கப் படுகின்றது..."

இந்த வரிகளும் கடந்த கால போரினதும், இடப் பெயர்வினதும் பதிவுகளைத் தருகின்றன. இதனால் இத் தொகுதி காலப்பதிவாக தடம் பெறுகின்றது.

'ஆக்கிரமிப்பின் கால் தடம்' தொகுதியில் உள்ள கவிதைகளில் தன்னுணர்வுத் தன்மையான கவிதைகள் முக்கியமானவை.

2) காதல், விரக்தி, விவரணம், சுயம்

இவ்வாறான நிலை சார்ந்த கவிதைகளுக்கு உதாரணமாக பின்வரும் கவிதையைக் கூறலாம் அதாவது

மௌனம் பூசப்பட்ட
அல்லது நிரப்பப்பட்ட
வெள்ளைத் தாளில்
உனக்கும் எனக்குமான
ஓவியப் பாதை வரையப் படுகிறது.

(எச்சக் கோடு வரைதல்)

இந்த அற்புத வரிகள் ஊடாக கவிஞரது காதல் இணைப்பை மெய்யாக்குகின்றார்.


இந்தப்பிரதியை முழுமையாக வாசிக்கும் போது கவிஞரின் கவிதா ஆளுமையை நாம் மிக அற்புதமாக உணரலாம். அதனை பேராசிரியர் அ.சண்முதாஸ், மன்சூர் ஏ.காதிர் ஆகிய இரண்டு பேரது அணிந்துரைகளும் வெள்ளிடையாக நிறுவுகின்றன.

கவிஞரின் தனித்துவத்தை கவிதையின் மொழியிலான வீச்சம் என்றால், கவிஞரின் குறைபாடும் அதுவாகவே தெரிகின்றது. சில கவிதைகளின் பாடுபொருளை வாசகன் நிர்ணயிப்பது கடினமாக உள்ளது.

அநுராதபுரப் பிராந்தியத்தில் தமிழ்க் கவிதையில் ஆகப் பிந்திய வடிவங்களை வஸீம் அக்ரம் தனது மொழி மூலமும், கவிதா உணர்வாலும் பரிசோதனைக்கு உட்படுத்துகின்றார் எனில் அது மிகையான கூற்றன்று.□□□

# யதார்த்தமும் மாய யதார்த்தமும்

கற்பனையின் உள்ளீடாய்
பாத்திரங்கள் உருவாகும்.
புனைவுகள் எப்போதும்
புதுமையானவை தான்.
ஒன்றிலிருந்து பிறிதொன்றாய்
மாற்றங்கள் கொள்வதுவும்
யதார்த்தத்தின் கூறுகளாய்
பிரத்தியட்சங்கள் தோன்றுதலும்,
மனதின் நீட்சியினால்



மாய யதார்த்தங்களென
கனவில் உருக்கொள்ளும்
காட்சிகளும் விரியும்.
தெரிதலுக்கு அப்பால்
திரைபோட்டு மூடியவை
மனதின் ஆழ்தளத்தில்
அருபமாய்த் தோன்றும்.
புனைவுகளினூடே
தோற்றங்கள் வலுப்பெறும்.

வே.ஐ.வரதராஜன்

# தவக்காலம்

சூசை எட்வேட்



"கொஞ்சம் நில்லுங்க..." !

திண்ணையில் நடை பயின்று கொண்டிருந்த மரியநேசன், நடையை நிறுத்தினார். அப்போதுதான் கோவிலில் இருந்து, உள்ளிட்ட மரியம்மா சிறு சரயைப் பிரித்தாள், "கொஞ்சம் குனியுங்கோ" என்றதும் அவர் சிரம் தாழ்த்தினார். இவள் சரயில் இருந்த சாம்பலை இரண்டு விரலால் கிள்ளி அவர் நடுநெற்றியில் சிலுவைக் குறியிட்டுப் பூசினாள்!

அவர் சற்று வியப்போடு அவளைப் பார்த்தார்.!

"இன்றைக்கு விபூதிப் புதனெல்லே அதுதான் உங்களுக்குக் கொண்டு வந்தனான் எனக்குக் கோயில்லயே சாமியார் பூசிப்போட்டார்"

"என்ன கோயிலாலை வந்ததும் வராததுமாய் சாம்பலப்பூசிப்போட்டு நிக்கிறாய்! மடச்சாம்பிராணிமாதிரி ! திடீரென்று என்ன வந்தது உமக்கு! என்ன நடந்தது கோவில்ல?..."

"நீரும் ஒரு வேதக்காரன் எண்டு இருக்கிறீர், ஒரு கோதாரியும் தெரியாது. நீர் தான் மடச்சாம்பிராணி இண்டைக்கு விபூதிப்புதன். 'மண்ணால் படைக்கபட்ட மனுசா நீ மண்ணுக்கே சொந்தமாவாய் எண்டத ஞாபக படுத்தத்தான் குருவானவர் வீபூதிய நெற்றியில பூசி விடுகிறவர். இண்டையில இருந்து தபசுகாலம் (தவக்காலம்) ஆரம்பிக்குது! ஆண்டவர் மரணிக்கிற பெரிய வெள்ளி வரப்போகுது! இனி நமக்குத்துக்க நாள்! இண்டையில இருந்து நான் நாற்பது நாளும் உபவாசம் இருக்கப்போறன்! ஒரு நேரம்தான் சாப்பிடுவன் நீங்க உங்களுக்கு வேணுமெண்டா கடையில சாப்பிடுங்க"

வருடா வருடம் வரும் இத்தவக் காலத்தை சிரமேற்கொண்டு ஒழுங்காகக் கடைப்பிடிப்பவள் மரியம்மா! மரியநேசன் இந்த மதச்சடங்குகளில் அவ்வளவு ஈடுபாடு காட்டுபவர் அல்ல! கோயில் பெருநாள், நத்தார் வருடப்பூசை, பெரிய வெள்ளி என்று முக்கிய தினங்களில் மட்டும் நானும் வேதக்காரன் என்று காட்டுவதற்கு கோவிலுக்குப் போய் முகத்தைக் காட்டிப் போட்டு வருவார்!

'நேர்மையாக நடப்பவன் கடவுளை அவ்வளவு தேடமாட்டான்!' என்று அடிக்கடி சொல்லிக் கொள்வார். அவர் போன வருடம்தான் இளைப்பாறிய ஆசிரியர். வீட்டில் மட்டுமல்ல கல்லூரியிலும் இதே கருத்தை வலியுறுத்துவார்!

"உனக்கு 'அல்ஸர்' வருத்தம் இருக்கு எவ்வளவு காசு செலவழிச்சி, பத்திய மருந்தெல்லாம் பாவிச்சி இப்பதான் கொஞ்சம் சுகம் வந்திருக்கு. இந்த வருத்தத்துக்கு முக்கியமா காரவகைகள் பாவிக்க கூடாது, பட்டினிகிடக்கக் கூடாது, நேரகாலத்துக்குச் சாப்பிடுறதுதான் பிரதானம்! அப்பிடி இருக்கக்குள்ள, இந்த உபவாசம் எல்லாம் உனக்குச் சரிப்பட்டு வருமா! திரும்ப வருத்தம் வராமல் விடுமா கடவுள் காப்பற்றுவாரா!"

"எல்லாம் ஊரோட ஒத்ததுதான், அயலெல்லாம் உபவாசம் இருக்கக்குள்ள நாமமட்டும் ஆக்கிமுட்டிதிண்டு கொட்டிக்கெண்டிருந்தால் பார்க்கிற சனங்கள் என்ன நினைக்குங்கள் நம்மைப்பற்றி !"

"இதச் சொல்லுறதும் நீதான், பழைய வருத்தம் வந்துற்று எண்டு 'டைஜின்' பாணி வாங்கிக் கொண்டு வா, அந்த மருந்த வேண்டிக் கொண்டு வா, இந்த மருந்த வேண்டிக் கொண்டுவா எண்டு எனக்கு ஆக்கின குடுக்கிறதும் நீதான்! நான் என்ன சொன்னாலும் கேட்க மாட்டாய்! அயலட்ட நடக்கிற மாதிரி நீயும் ஏட்டிக்குப் போட்டியா நடந்து நீயும் ஆக்கினப்பட்டு என்னையும் சீரழிக்கிறாய்!'.

"எட துலைவானே, உன்னால நானெல்லே சீரழியுறன்!உன்ன முடிச்சி இந்த முப்பது வருஷ காலத்தில நான் என்னத்தக் கண்ட நான்! காதுத்தோட்டுக்கும் வழியில்லாமல் இருந்த நான்! என்ர பிள்ளைகள் உழைச்சதுக்குப் பிறகெல்லே கழுத்தில காதில நகையெண்டு கண்டநான், என்ர வேண்டுதல் மன்றாட்டுதலால எல்லே என்ர பிள்ளைக்கு உத்தியோகம் கிடைச்சது! மற்ற மகன் வெளிநாடு போனவுடனே நல்ல வேலையும் கிடைச்சி நல்லா இருக்கிறான்! எல்லாம் என்ர பக்தி உபவாசம் வேண்டுதலால எல்லே கிடைச்சது!"

"இதெல்லாம் நான் படிப்பிக்காட்டி கிடைக்குமா? நீ 'அ' சொல்லி குடுத்திருப்பியா? நான் படிப்பிக்காமல் விட்டிருந்தால் மூத்தவனுக்கு உன்ர வேண்டுதல் மன்றாட்டுதலாலமட்டும் இந்த உத்தியோகம் கிடைச்சிருக்குமா? இளையவனுக்கு நல்லா இங்கிலீசு தெரிஞ்சதால வெள்ளக்காரன்ர இடத்தில பூந்து வெட்டி விளையாடி நல்லாயிருக்கிறான்!"

"சும்மா நீர் தான் பெரிய கெட்டிக்காரன் எண்டு கெட்டித்தனமாக கதைக்காதேயும்! பிள்ளைகள் தின்னுற குடிக்கற வயதில ஆனமான சாப்பாடும் இல்லாமல் வளர்ந்தது கள். நல்லாச் சாப்பிட்டா நித்திர வருமாம், படிக்காதுகளாம் பட்டினிகிடந்தாத்தான் மூளை வேலை செய்யுமாம்! ஒரு நேரம் சாப்பிடுறவன் யோகி இரண்டு நேரம் சாப்பிடுறவன் போகி, மூன்று நேரமும் சாப்பிடுறவன் ரோகி! எண்டு

என்னென்னமோ சொல்லி பிள்ளைகளை பாழ் படுத்திய மனுஷன்! காசுல மட்டும் சிக்கன மாயிருந்தாப் போதாது, எல்லாத்திலையும் சிக்கன மாயிருக்க வேணுமெண்டு சொல்லி, குடிச்சுப் போட்டு மிச்சத்தண்ணியையும் செடிகளுக்கு ஊத்த இல்ல எண்டு பேசுவீங்க, அளவா சமைச்சு அளவோட தின்னவேணும், ஒண்டும் வீணாகக் கொட்டக் கூடாது, ஊரில இருக்கிற நாய் பூனை காகம் கோழிக்கெல்லாம் விருந்து வைச்சு காச அநியாயம் செய்யாத எண்டுவீங்க, பிள்ளைகள் திண்டு மிச்சத்தக் கொட்டினாலும் ஏச்சு! கூடச் சமைச்சாலும் ஏச்சு! இல்ல தெரியாமத்தான் கேக்கிறன் திடீரெண்டு வீட்டுக்கு விருந்தாளி வந்தா என்ன செய்யுறது, மட்டுமட்டாச்சமைச்சா? இப்படி எத்தின சீரழிவு உங்களால!..."

"திடீரெண்டு விருந்தாளி வந்தால் அது அவன்ர குற்றம்! இந்தக்காலத்தில் முன்னறி வித்தல் இல்லாம ஒருவரது வீட்டுக்கு சாப்பாட்டுக்குப் போகக்கூடாது!"

"அப்ப உண்மையிலேயே சாப்பாடில் லாம ஒருவன் வந்து கேட்டால் என்ன செய்யுறது!"

"அந்த நேரம் என்ர சாப்பாட்டக்குடு. நான் ஒரு நேரம் பட்டினி கிடக்கிறன் ஒண்டும் குறைஞ்சி போக மாட்டன்! இதுக்காக உபவாசம் இருக்கிறதுதான் உண்மையா பிரயோசனமான காரியம்!"

"பிள்ளைகளுக்கு ஆனமான உடுப்பு வேண்டிக் குடுத்தநீங்களா? ஒரு கால்சட்டை வேண்டுனா இரண்டு மூண்டு வருஷம் செல்லும் மற்றது வாங்க, அதுமட்டும் அது வளர்ரபிள்ளை கள் இறுக்க இறுக்க கட்டையாப் போனாலும் போட்டுக் கொண்டு கஸ்ரப்படுங்கள்! தாய்க் கெல்லே தெரியும் பிள்ளைகளின் அருமை! அதுகளின் மனதையும் தாய்க்குதான் தெரியும்! மற்றப் பிள்ளைகள் நல்ல உடுப்பு உடுத்திக் கொண்டு 'பவரா' திரியக்குள்ள, இதுகள்ர மனம் எப்பிடிப் புழுங்கும்! என்னையும் பிள்ளை களையும் கொஞ்சச் சித்திரவதையா செய்த நீ சண்டாளப் பாவி !"

"இந்த ஆடம்பரங்கள படாடோபங்கள காட்டினா பிள்ளைகளுக்கு கல்வியில ஆர்வ மில்லாம போயிடும்! அறிவு இல்லாதவங்கள் தான் ஆடம்பரங்களக்காட்டி தங்கட மோட்டுப் புத்திய மூடிமறைச்சி பெருமையடிக்கப் பாக்குறாங்கள்! ஆனா கல்விதான் உண்மையிலேயே பெருமைக் குரிய செல்வம்! அதின்ர மகிமைய உன்போல மோட்டுச் சனங்களுக்கு சொன்னாலும் புரியாது! முட்டாளாக இருக்கிறதுதான் ஒரு மனிதனுக் கிருக்கிற மிகப்பெரிய அவமானம்! ஒரு பெண் படிச்சா, முழுக்குடும்பத்துக்குமே அந்தக் கல்வி பயன்படும்! படிக்காத தாயாயிருந்தா பிள்ளைகள் படிப்பில்லாம கிடந்து அவமானப்பட்டு சீரழிய வேண்டியதுதான்!"

"ஓ! இவர் பெரிய படிச்சவர்! அதுதான் பத்திரிகைய புத்தகத்த தூக்கிப் பிடிச்சால் காகம், கோழி, நாய் வந்து குசினிக்க பூந்து உள்ளதெல்லாம் கொண்டு போனாலும் தெரியாது! வானத்தப்பாத்து யோசிச்சுக் கொண்டிருக்ககுள்ள கள்ளன் வந்து பூந்தாலும் தெரியாது! நீரும் ஒரு மனுஷன் எண்டு கதைக்கிறீரே! ஆம்பிள சிங்கம்! வெளியில சொன்னா அசிங்கம்!"

"நீ சொல்லுற குறைகள்தான் என்ர பலட' உன்ர அறிவு கெட்ட மூளைக்கு இதெல்லாம் பரிகாசமாப்படுகுது! என்ர அறிவு உனக்கு பகையாயிருக்கு!"

"ஐயே! இவர்பெரிய அறிவாளி நான் கடைசி மட்டும் ஒத்துக்கொள்ள மாட்டன்! படிப்பிக்கிறன் அறிவாளி ஆக்கிறன் எண்டு சொல்லி கொஞ்ச அடியா, ஆக்கினையா.. என்ர பிள்ளைகளுக்குச் செய்த நீர்! தூ! வெளியில் சொன்னா வெக்கம்!' அப்போது தொலைபேசி அலறியது இவர்கள் வாய்த்தர்க்கம் நின்றது! மரியம்மாதான் ஓடிப்போய் தொலை பேசியை எடுத்தாள் 'கலோ, எப்படி சுகமா இருக்கிறீங்களா?"

"கலோ ஆர் பேசுறீங்க?"

"அணேய், இவ்வளவு காலமா இருக்குறீங்க என்ர குரல்ல ஆர்பேசுறதெண்டு தெரியஇல்லையா!"

"அட என்ர மகன் இருதயநேசனா! என்ர பிள்ளையின்ர குரல எனக்குத் தெரியாதா? இந்த அப்பா மனுஷனோட சண்ட பிடிச்சு கதைச்சதில என்ர மனம் குழம்பிப் போச்சு எல்லாமே மறந்து போச்சு!"

"ஏனணை அப்போவோட சண்டயா பிடிச்சனீங்க? என்ன பிரச்சன!"

"இண்டைக்கு விபூதிப் புதனெல்லே இண்டையில இருந்து தகசுகாலம் ஆரம்பிக்குது இண்டையில இருந்து நான் உபவாசம் இருக்கப்போறன், நாற்பது நாளைக்கு ஒரு நேரச்சாப்பாடுதான் எண்டு சொன்னது தான் தாமதம், அந்த ஆள் தேவையில்லாத கதையெல்லாம் கதைச்சி என்னோட சண்டை கொளுவிப்போட்டுது! நான் விடுவனா? உங்களப் படிப்பிக்கிறன் எண்டு சொல்லி, எல்லாத்திலையும் சிக்கன மாயிருக்க வேணுமெண்டு சொல்லி, ஒரு சோற்றுப் பருக்கை கூட கீழ விழக்கூடாது, தண்ணியக் கூட வீணாச்சிந்தக் கூடா தென்று சொல்லி என்ன உங்கள எல்லாம் என்ன பாடு படுத்தின மனுஷன் எண்டு உங்களுக்கெல்லாம் தெரியும் தானே, நான் உபவாசம் இருந்து தெய்வ பத்தியா நடந்ததால எல்லே நீங்க இண்டைக்கு நல்ல இடத்தில் போய் நல்லா இருக்கிறீங்க!...

"மூடண வாய்! அப்பா இல்லாட்டி நாங்க மாடுகளாக காடுமேடெல்லாம் திரிஞ்சிருப்பம்! அவர் ஆக்கின குடுத்து அக்கறையா படிப்பிச்சபடியாலல்லே இண்டைக்கு நாலு பேரும் மதிக்கக் கூடிய மாதிரி செல்வாக்கா இருக்கிறம்! அப்பா இல்லாட்டி உன்ர மோட்டுப் புத்திதானண எங்களுக்கும் வந்திருக்கும்! நேத்தி வைச்ச கோயில் கிடாய்க்கு சாப்பாட்ட அடையுற மாதிரி, தின்னு தின்னு எண்டு நெடுகச்

சாப்பாட்டத்தான் தீத்தத் தெரியும்! ஒரு நல்ல பழக்கவழக்கத்த ஒரு நல்ல கதைய அறிவுரைய சொல்லித்தந்த நீயா? உன்ர பேச்சக் கேட்டுத்தான், அப்பாவை எதிர்த்துத்தான் சின்னண்ணா நாசமாப் போனான்! நல்லாத் திண்டு உடம்பு பெருத்ததுதான் மிச்சம்! புத்தியில்லாமல் கண்ட வனுக்குப் பின்னாலும் திரிஞ்சி எல்லாரையும் நம்பி ஏமாந்து எவ்வளவோ காச அநியாயமாக்கி, இப்ப நடுக்கடலில் நிண்டு தத்தளிக்கிறான்! நாங்க எவ்வளவு காசச் செலவழிச்சி உதவி கொடுத்தும் அவனக் காப்பாற்ற ஏலாம இருக்கு! எல்லாம் உன்னால வந்ததுதான்! நல்ல வேளை நாங்கள் அப்பா பேச்சக்கேட்டு நடந்தபடியா தப்பினம், இண்டைக்கு நல்லாயிருக்கிறம்! அடிச்சவர் தான் ஆக்கின பண்ணினவர் தான். எல்லாம் என்னத் துக்காக! எங்கள பெறுமதியுள்ள மனுஷரா ஆக்கிறதுக்காகத்தான்! அப்பர் அடிக்கடி சொல்லுவார், பெற்றோர் பிள்ளைகளுக்காக கொடுக்க வேண்டிய சொத்து கல்வி தான்! அது இருந்தா எங்க போனாலும் சிறப்பாக இருப்பாங்க எண்டு அதுதான் இப்ப நடந்து கொண்டிருக்கு! அப்பா, சின்னனில நாங்க சாப்பிடக்குள்ள சொல்லுவார், வாயை மூடி வெளியில சத்தம் கேக்காம இலட்சணமா சாப்பிட வேணுமெண்டு! ‘சக்கு சக்கு எண்டு சப்புற சத்தமும், வாய்க்க கிடக்கிறதும், வெளியில பக்கத்தில இருந்து பாக்கிறவனுக்கு அசிங்கம் எண்டு! இப்படி எத்தின நல்ல பழக்கங்கள் சொல்லித்தந்து கண்டிச்சி வளர்த்தவர்! நான் அப்பாவப் போல நல்ல நிறம் அவர்ர படிப்பு பழக்கவழக்கம் எல்லாம் சேர்ந்து, இங்க வெளிநாட்டுக்காரன் எண்டு நினைக் கிறான்! எங்கள அதில்ல இதில்ல எண்டு அடுத்த வீட்டுக்குப் போக விட்டவரா! சிக்கனமா குடும்பம் நடத்தி எங்கள நல்லா படிப்பிச்சி ஆளாக்கி விட்டவர்! எத்தின தகப்பன்மார் இலட்சக்கணக்கில் கடனையும் விட்டு, பழிபாவத்தையும் செய்து போட்டு போயிற்றாங்கள், பிள்ளைகள் கிடந்து உத்தரிக்கிறாங்கள்! இவ்வளவு செய்த அப்பா, இவ்வளவு காலத்தில காசு வேணுமெண்டு ஒருநாளாவது கேட்டிருப்பாரா? நீதானனை நெடுகக் கொண்டா கொண்டா எண்டு கேட்டுக் கொண்டிருப்பாய்! பெரிய நகையா மொத்தத்தில செய்து போட்டாத்தான் வெளிநாட்டுக்காரிக்கு மதிப்பாயிருக்கும் எண்டு வேண்டுவாய்...”

கணவனாக இருந்தால் இவ்வளவு பேச கேட்டுக் கொண்டிருக்க மாட்டாள் மரியம்மா! மகனின் திட்டு அவளுக்கு தேனாக இனிக்கும்! மகனிடம் வாங்கிக் கட்டுவதைப் பார்த்து அவர் மனதுக்குள் சிரித்துக் கொண்டார்! உண்மையை உணர்ந்து கொண்ட மகனின் நன்றிமறவாத தெளிந்த பேச்சைக் கேட்டு அவர் உள்ளம் பூரித்துப் போனார்! இதற்கு நாநூட்டிய கல்விதானே காரணம்.

தொலைபேசியில் பேசிக்கொண்டிருக்கும் போது, வெளியில் ஒரு பெண்குரல் கேட்டது...! “மரியம்மாக்கா... மரியம்மாக்கா... இருக்கிறீங்களா?” என்று கேட்டுக் கொண்டே வந்தாள் லில்லிமலர். இவள் மூன்றாவது வீட்டில்த்தான் குடியிருக்கிறாள். மரியம்மாவோடு சிநேகிதத்தில் அந்தமாதிரி! இவ பால் வெள்ளை நிறம்! வெண்ணிற ஆடைதான் அணிவா! உடுத்திக் கொண்டு வேகமாக நடந்து போவதைப் பார்த்தால் சம்மனசானவர் பறந்து போவதைப் போலிருக்கும்.

மரியம்மா லில்லியோடு மிகுந்த வாரப்பாடு. கோவில் கோவிலாகத் திரிவா லில்லி. திங்களில் குழந்தை யேசு கோவில், செவ்வாய் அந்தோனியார் கோவில், வெள்ளி இறையிரக்க ஆண்டவர் கோவில், ஞாயிறு பங்குக் கோவில் என்று திரிவா! அதைவிட கோவிலுக்கு ஊழியம் செய்யவென்று போய் பகல் முழுவதும் அங்கேதான் கிடப்பா! மரியாயின் சேனையிலே சேர்ந்து அருட்சகோதரிமாரோட சேர்ந்து இறைப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்குவா! வருத்தக்காரருக்கு பேய்பிடித்தோருக்கு சுகப்படுத்தும் திருச்சடங்கின் போது செபக்கூட்டத்தோடு சேர்ந்து யெபிப்பா! இப்படி கோவில் இறை பணிக்கே தன்னை அர்ப்பணித்த சீமாட்டி! இவ தன்வழிக்கே மெள்ள மெள்ள மரியம்மாவயையும் இசை வாக்கம் பெறவைத்துவிட்டா! இவவைப் போல எல்லாவற்றுக்கும் இல்லா விட்டாலும் ஒன்றிரண்டுக்கு எடுபடுவா. முக்கியமாக வெள்ளிக் கிழமைகளில் இறையிரக்க ஆண்டவர் கோவிலுக்கு அவவோடு சேர்ந்து போவா. இறையிரக்க ஆண்டவர் அருளால தான் தன்ர மகனுக்கு நல்ல வேல கிடைச்சது. நல்லா யிருக்கிறான் என்று சொல்லி ஆர்வமூட்டி மரியம்மாவையும் இறையிரக்க படத்தின் முன்னால் மண்டியிடச் செய்துவிட்டா! மரியம்மாவின் இரண்டாவது மகனை மலேயாவில் நல்ல வேலை பெற்றுத்தருவதாக முகவர் கூட்டிக்கொண்டு போய் மூன்று மாத விசாவில் ‘யொப்’ காட்டும் கொடுக்காமல் மாறிவிட்டான்! அவர் இப்போது மூன்று மாதம் முடிய. ஒளித்து மறைத்துச் சீவிக்கிறார்! விசா இல்லாதவன் காவல்துறைக்குப் போக மாட்டான் என்று தெரியும். அதனால் இவர் போன்ற வர்களிடம் நல்லாக வேலைவாங்கிப் போட்டு, சம்பள மில்லாமல் ஏமாற்றி விடுகிறார்கள்! அவரை அங்கிருந்து ஐரோப்பிய நாட்டுக்கு எடுக்கமாட்டார்கள்! பிடிபட்டு இலங்கைக்கு அனுப்பினால் ஆபத்து! மரியம்மாவின் முழுச்சிந்தனையும் இந்த மகன் மீதுதான்! அவனுக்காக அவள் எதுவும் செய்வாள்! அதனால்த்தான் லில்லிமலருக்குப் பின்னால் கோவில் கோவிலாகத் திரிகிறாள்!

லில்லிமலரின் ஆலோசனையின் பேரில்த்தான் ஒரு அறையை சாமி அறையாக்கி எல்லாப் புனிதர்களின் படங்களுக்கு மத்தியில் இறையிரக்க ஆண்டவரின் பெரிய படத்தை மாட்டி வைத்திருக்கிறாள். அது மனதை ஈர்க்கும் ஒளி பொருந்திய காட்சிப்படம்! இரத்தமும் தண்ணீரும் மார்பில் இருந்து பீறிட்டுப் பாய்வது போல் காட்சிப்படுத்தப்பட்ட படம்!

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் பின்னேரம் மூன்று மணிக்கு ஊது பத்திமணம் கமழ, மெழுகுவர்த்தி கொழுந்துவிட்டு எரிய லில்லியும் மரியம்மாவும் இறையிரக்க ஆண்டவருக்குரிய செப்புத்தகத்தோடு பிரார்த்திக்கத் தொடங்கி விடுவர்!

அந்தநேரம் மரியநேசன் திருக்குறள் புத்தகத்தோடு தூரத்தே போய் அமர்ந்து மனனம் செய்யும் முயற்சியில் இறங்கி விடுவார்! அந்த நீதி நூலை எல்லோரும் விளங்கிப்படிக்க வேண்டும், பாடமாக்க வேண்டும் வாழ்கையிலே கடைபிடிக்க வேண்டும் என்பது அவர் கொள்கை. பெருவிருப்பு. இயேசுநாதரின் போதனைப்படி கருத்துபடி நடப்பதில் சிறிதும்கருத்தில் எடுக்காத இந்த இரண்டு பேரும் செபப்புத்தகத்தை மட்டும் அக்கறையாக வாசித்து விட்டு போவதில் திருப்தி காண்பதையிட்டு மனதுக்குள் சிரித்துக் கொள்வார், இரசித்துக் கொள்வார்! இவைகளை எல்லாம் சுட்டிக்காட்டி கதைத்து அவர்பெற்ற அனுபவம் போதும்! தூஷண உருண்டைகள் வெடிகுண்டு களாக வந்து வெடிக்கும்! பாவம், பார்த்து இரசிப்பதோடு மௌனம்மாகிவிட்டார்!

இவள் லில்லியை பற்றிவெகுவாக அறிந்து வைத்திருக்கிறார் அவர்! கோயில் பூசைக்கும் பிரார்த்தனைக்கும் திருத்தொண்டுக் கும் என்று அன்றைய பொழுதெல்லாம் கோயிலிலே கழியும், லில்லி கோவில் பணியில் காலத்தை அர்பணித்து வீட்டுப் பணியை மறந்து முக்கியமா , கணவனை புறக்கணித்து நடந்த மையால் பெரும்பாதிப்பைத்தேடிக் கொண்டாள்! இவள் கணவன் நடுத்தரவயதைக் கடக்கும் காலம், வேறு ஒரு பெண்ணைத் திருமணம் முடித்து விட்டார்! வேறிடம் போய்விட்டார். இவள் மகனோடுதான் இருப்பாள். இருந்துமென்ன மகன் பிள்ளைகளை பேரப்பிள்ளைகளை தூக்கி கொஞ்சி குலாவுவதில் நாட்டம் காட்டுவதில்லை! இவள் இல்லிடத்தில் இருந்து நான்காவது வளவில் தகப்பனும் தங்கையும் வாழ்ந்து வருகிறார்கள். தகப்பன் தங்கைக்கே வீடுவளவை எழுதிக் கொடுத்து விட்டார்! லில்லி வீட்டுக்கடங்காத அட்டூழியக்காரியாக இருந்தது மட்டுமல்ல, தன்விருப்பத்துக்கு ஒருவனோடு கூடிக் கொண்டு ஓடிப்போய் கனகாலமாக இந்தத்தேசமும் இல்லாமல் இருந்தவள்! இப்போது அடிக்கடி தங்கை வீட்டுக்குப் போய் சண்டை போட்டு விட்டு வருவாள். வீடுவளவு தனக்குச் சேர வேண்டும் என்று கோட்டில் வழக்கும் போட்டிருக்கிறாள்! பாவம் வயதான காலத்தில் இந்த கிழவனை குற்றவாளி கூண்டில் ஏற்றி அலைக்கழிக்கிறாளே என்று ஊர் ஏசும்! அவள் ஒன்றையும் பொருட்படுத்தமாட்டாள்! கோவில்... கோவில் என்று திரிந்தால் எல்லா பாவங்களும் மன்னிக்கப்படும் மோட்சம் கிடைக்கும் என்று எண்ணிக் கொண்டாளோ என்னமோ!

இவள் மகனோடு ஒன்றாலும் குறைவில்லாமல் நன்றாகத்தான் இருக்கிறாள்! அப்படியிருக்க எப்படி மனம் வந்தது அப்பாமீது வழக்குப்போட! இது சனங்கள் கேட்கும் கேள்வி! மகன் நல்லாயிருக்கிறான், திடீர் பணக்காரன் ஆகிவிட்டான்! தனியார் நிறுவனமொன்றில்தான் வேலை பார்க்கிறான், சம்பளம் சாதாரணம்தான். ஆனால் அவன் வீட்டில் என்ன இல்லை? தங்கமென்ன தளபாடமென்ன, அணிதுணி மணிகள் என்ன, ஓடியோ வீடியோ, கணினி தொலைநகல் என்று வீடு கொள்ளாத அளவு பெறுமதியான பொருட்கள் நிரம்பியிருந்து, பார்ப்போரை பிரமிக்க வைக்கும்! திடீரென்று இவையெல்லாம் வந்து சேர்ந்த மாயம் என்ன! எல்லோர் மனதிலும் இந்தக் கேள்வி! லில்லி கோவில் கோவிலாகத் திரிந்ததால் ஆண்டவன் அள்ளிக் கொடுக்கிறான் என்று மரியம்மா எண்ணிக்கொள்கிறாள்!

இவளின் மகன் இலேசுப்பட்டவன் இல்லை! புலனாய்வுப் பிரிவினர் இவன் வீட்டுக்கு இரகசியமாக வந்து போவர்! இவனும் அவர்களோடு உந்துருளியில் நின்று சரள மாக சிரித்துப் பேசுவான்! துணைக் குழுக்களோடும் தொடர்பு பட்டவன் என்று கேள்வி! இந்தப் பகுதியில் யாராவது சூடு பட்டுச் செத்தால் இவனின் தகவல் தொடர்புதவியால்தான் என்று ஊரிலே கதை! ஏன் ஆள்கடத்தல் கொள்ளை யடித்துலுக்குக் கூட, இவனின் பங்களிப்பு இருக்கும் என்று சொல்வார்கள்!

ஒரு நாள் காலை நேரம் மரியநேசன் வெளி முற்றத்தில் நின்று பல்விளக்கிக் கொண்டு நின்றார். லில்லி முன் தெருவில் நின்று அடுத்தவளவால் குறுக்கிட்டு அடுத்த தெருவுக்குப் போனாள்!. அந்த வளவுக்கு உரியவர் இல்லாததால் அடைப்பும் இல்லாமல் பற்றைகளும் வளர்ந்து எல்லோருக்கும் குறுக்குவழியாக பயன்படத் தொடங்கிவிட்டது! லில்லி போய், போன வேகத்தில் அதேவழியாக திரும்பிவந்து தன்வீட்டுக்குப் போவதை அவர் பார்த்துக் கொண்டே நின்றார். இவள் போய் பத்துநிமிடம் சென்றிருக்காது, அடுத்ததெருவில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டன! குய்யோ முறையோ என்று கத்திக் குழறும் குரல்களும் கேட்டன! தேடிய நபர் இந்த இடத்தில் இருக்கிறான் என்று தகவல் கொடுத்தவர் யார் என்று மரிய நேசனுக்கு தெளிவாகப் புரிந்து விட்டது! ஆனால் மரியம்மாவுக்குத்தான் தெரியவில்லை! சொன்னாலும் ஒத்துக் கொள்கிறாள் இல்லை! 'தெய்வ பக்தியான அவள் இம்மாதிரி அநியாயமான காரியம் செய்யமாட்டாள் என்கிறாள்! இவள் செபம் சொல்லும் சாட்டில் வீட்டுக்கு வந்து வட்டமிட்டு, தேட்டங்களை நோட்டம்விட்டு தகவலால் காட்டிக் கொடுத்து ஆபத்தில் மாட்டிவைப்பாள்! என்று தலையில் அடித்துச் சொன்னாலும் மனைவி முன்னால் எடுபடாததுதான் உண்மையில் அவருக்கு வருத்தம்!

இவள் அன்று வந்தது தவக்காலம் தொடங்கிவிட்டது என்பதை மரியம்மாவுக்கு ஞாபகமூட்டவே! இனி நாற்பது

நாளுக்கு தவக்காலம் பூண வேணும்! உபவாசம் இருக்க வேணும்! ஒரு சந்தி எண்டாலும் பிடிக்க வேணும். பாலையூற்று கல்வாரிக் கோவிலுக்குப் போய் சிலுவைப் பாதை சுற்ற வேண்டும்! என்று எல்லாவற்றையும் ஞாபகப்படுத்தி வழிப் படுத்தவே!

மதக்கொள்கை கோட்பாடுகளை கடைப்பிடிக்காமல் சடங்குகளை மட்டும் பின்பற்றும் படுபிற்போக்கான இந்தப்பிறவி களுக்கு உண்மையை எடுத்துச் சொன்னால் வாங்கிக் கட்ட வேண்டியது தான் என்று மௌனமாகிவிட்டார்! ஆனால் பார்த்து இரசிப்பார், மனதுள் சிரிப்பார்! மரியம்மா எல்லாவற்றையும் ஒழுங்காக கடைப்பிடித்து வந்தாள். ஆனால் சிலுவைப் பாதையிலே அனுபவிக்கும் வேதனையைத்தான் தொடர்ந்து கடைப்பிடிக்க முடியவில்லை! பன்னிரெண்டு திருத்தலங் களிலும் கல்லுகளுக்குள் நடந்து முழந்தாள் படியிட்டு கிடந்து அனுபவிக்கும் வேதனை சிரமம் இருக்கிதே அதை நோயில் நொந்து போன மரியம்மாவால் தாங்கிக் கொள்ளமுடியாது! இரண்டுநாளின் பின் நிறுத்திக் கொண்டாள்! லில்லி வீட்டுக்கு வந்து ஏசினாள்! மோட்டு யென்பமே! ஆண்டவர் என்னபாடுபட்டிருப்பார்! பாரச் சிலுவைய கல்வாரி மலைக்கு தூக்கிச் சென்றார்! தூக்கேலாமல் மூன்று முறை குப்பற விழுந்தார்! கொஞ்சக் கசையடியாபட்டார்! மூன்று ஆணிகளில் சிலுவையில் தொங்கி உயிர் விட்டார்! எல்லாம் ஆருக்காக? எல்லாம் நாங்க செய்த பாவத்துக்காக அவர் தண்டிக்கப்பட்டு, இவ்வளவு தண்டனைகளையும் சித்திரவதை களையும் பட்டார்! அப்படிப்பட்டவருக்காக நாம் கொஞ்சமெண்டாலும் கஸ்ரங்களை தாங்கிக் கொள்ளப்கூடாதா?!' இப்படி மரியம்மாளோடு வாதிடுவாள்! இவள் அவள் பேச்சில் நியாயமிருப்பதை உணர்ந்து திருப்பாடுகளின் திருச்சடங்குக்கு ஒழுங்காகப் போய் வருவாள்!

இவர் 'கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் நாம் தலையிலடித்து அறிவு பூர்வமாக ஆதாரபூர்வமாக எப்பபடித்தான் எடுத்துச் சொன்னாலுமது சண்டையாகவே மாறும்!'

மரியம்மா தவக்கால திருப்பாடுகளை நினைந்து அதற்குரிய திருச்சடங்குகளை மனமொப்பி ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போதுதான் வீட்டுக்கு வேண்டிய ஒருத்திவந்து சேர்ந்தாள்! அவள் வெகுதூரமிருந்து வந்து சேர்ந்தவள்! இந்தியாவில் அகதியாகப் போன விடத்து, மகளொருத்தி அங்கேயே மணம் முடித்து அந்த ஊர்வாசி ஆகிவிட்டாள்! மகளுக்கு பிள்ளைப் பேறு நடைபெற இருக்கிறது. இவள் பிரசவம் பார்க்க போக வேண்டியிருக்கிறது. பேரப்பிள்ளைகளை கண்டுகளிக்க வேண்டியிருக்கிறது! ஆகையால் கொஞ்சம் வயதாகி உடல் தளர்ந்தாலும், ஆர்வமேலீட்டினால் யாழ்ப்பாணமிருந்து எத்தனையோ தடைதாண்டி சோதனைகளைக் கடந்து திருகோணமலை கப்பலிலே வந்து இவர்கள் வீட்டுக்கும், தன் கூடப்பிறந்த தங்கை வீட்டுக்கும் வந்து தங்கி, கொழும்புக்குப் போய் கடவுச்சீட்டு விசா எல்லாம் எடுத்து விமானத்தில் தமிழ் நாடுபோய் எட்டயபுரத்தில் இருக்கும் அகதிகளுக்கான விடுதிகளில் ஒன்றில் இருக்கும் மகளிடம் போய் சேர்ந்து தன் கடமைகளை முடித்துக்கொண்டு மூன்றுமாத காலக் கெடுமுடிவில் இலங்கை வந்து இப்போது திருமலை வருகிறாள். இனி கப்பலுக்குப் பதிந்து யாழ் போக வேண்டும். போவதற்கான நாள்வரும் வரைக்கும் இங்கே வந்திருக்கிறாள்! பக்கத்தில் கூடப்பிறந்த சகோதரி வீடு இருக்கிறது! அங்கே தான் தங்கல். மரியம்மா வீட்டுக்கு இடைக்கடை வந்து போவாள். யாழ்ப்பாணத்தில் பக்கத்து வீடுதான் ஒன்றாகப் பிறந்து ஒன்றான வளர்ந்து பள்ளிக்கூடம் போய் வாழ்ந்தவர்கள் தான்! எல்லோரையும் நாட்டுப்பிரச்சினை பிரித்து விட்டது! என்றாலும் பழகிய பாசம் போகுமா! அவள் இடைக்கிடை வந்து ஊர் புதினங்களை சொல்வாள் இந்தியா பயண அனுபவங்களையும் சொல்வாள்! அவள் நல்ல இரசனையாகக் கதைப்பாள். மரிய நேசனும் உரையாடலில் கலந்து கொள்வார். ஆனால் இவள் ஒவ்வொரு நாளும் இன்று கப்பல் வெளிக்கிடுகிறதா என்று துறைமுகப்பகுதிக்கு போய் பார்த்து வருவாள்.

இப்படியாக நடைபெற்றுக் கொண்டுவரும் போது தான், "அந்த யோகமலருக்கு நீ ஒரு நாளைக்கு கெண்டாலும் சாப்பாடு கொடுக்கவில்லையா? வாறபோதெல்லாம் வெறும் தேத்தண்ணியோடு அனுப்பி விடுக்கிறாயே! உன்ர ஊர்ல இருந்து இனசனங்கள் எண்டுயார் வந்தாலும் விருந்து படைச்சு கொண்டாடி வழியனுப்பி வைப்பியே ஏன் இவளுக்கு மட்டும் ஒரு நேரச்சாப்பாடும் குடுக்காமல் விட்டுவிட்டாய்! அவளும் எத்தனை தரம் நம்ம வீட்டுக்கு வந்து கலகலப்பாக கதைச்சுப் போட்டு போகிறாள் என்ன காரணம்? அவர் மனைவியிடம் கேட்டார்.

மரியம்மா சிரித்துக் கொண்டே சொன்னாள், 'அவள்ர இளைய மகளுக்கு போன வருஷம் கலியாணம் நடந்தது. போனிலையும் கதைச்சி அழைப்பிதழும் அனுப்பி தன்ர கூடப் பிறந்த சகோதரிக்கும் மட்டும் வரச் சொல்லி அழைச்சிருக்கிறாள்! பக்கத்தில இருக்கிற எனக்குச் சொன்னாக் குறைஞ்சா போயிடுவா! அங்க ஊரில என்ன மாதிரி ஒண்டா கட்டிப் பிடிச்சுக் கொண்டு வளர்ந்த நாங்கள்! ஏன் எனக்குச் சொல்லல்ல அதுதான்!' 'அப்ப நீ நல்லா சிரிச்சி சிரிச்சி கதைச்சுக் கொண்டே அவள நல்ல பழிவாங்கிப் போட்டாய்! இதப் பெரிய குற்றமா எடுக்கேலாது, ஏன் தெரியுமோ, கலியாணத்த கூடப் பிறந்த சகோதரங்களுக்கு மட்டும் சொல்லி சிம்பிளாக செய்ய எண்ணியிருக்கலாம்!'

அங்க ஊரில என்ர கூடப்பிறந்த சகோதரங்களுக்குச் சொல்லியிருக்கு தூரத்துச் சொந்தக்காரருக்கெல்லாம்

சொல்லியிருக்கு! அப்படியிருக்க எனக்கு மட்டும் ஏன் சொல்லல்ல? அவள் ஏதோ வொண்ட மனதில் வைச்சுத்தான் என்ன பழிவாங்கியிருக் கிறாள்! நான் பழிதீர்த்திருக்கிறன் செய்ததுக்கு செய்துதான் காட்ட வேணும்! நான் இப்ப பெரிய வீடு கட்டி நல்லாயிருக்கிறனெல்லெ, அது இவளுகளுக்கெல்லாம் சரியான ஆத்திரம். அதுதான் இப்படிச் செய்திருக்கிறாளவ!' மரியம்மா ஒருநேரச் சாப்பாட்டோடு காலம் தள்ளுபவள் இப்போது அதிகநேரம் பேசினால் மூச்சு இரைக் கிறது! களைத்து மௌனமாகிவிட்டாள்! இவளோடு வாதிட எவ்வளவோ கருத்துரைகள் இருந்தும் அவள் நிலையுணர்ந்து வாதிட மனமில்லாமல் அவரும் மௌனமாகி விட்டார்! என்றாலும் அவர் உள்ளம் மௌனமாக வில்லை மனைவிமேல் வசைபாடிக் கொண்டே இருந்தது! இப்போது தவக்காலம், உபவாசமாயிருக்கிறாள்! ஒரு நேரச்சாப்பாட்டால் துரும்பாய் இளைத்து களைத்து வருகிறாள்! இரவில் அனுங்கிக் கொண்டு கிடப்பாள் எல்லாம் எதுக்காக? மனதைப் பக்குவப்படுத்துவதற்காக! மனம் நல்லதில் பண்பட்டதா? பழைய குணக்கேடுகள் மாறினவா, மனந்திருந்தாத இக்காரியங்களை ஆண்டுதோறும் ஏன் கடைப்பிடிக்கிறார்கள்! இதனால் ஆருக்கு என்ன இலாபம்! எல்லாம் ஊருக்கு பேருக்கு செய்யும் கைங்கரியம்! அவர் நினைத்துக் கொண்டார், மனதில் இருத்திக் கொண்டார், காலம் வரும் வரை காத்திருந்தார்!

அந் நாளும் அடுத்த நாளே வந்துவிட்டது! யோகமலர் வழமை போல இவர்கள் வீட்டுக்கு வந்தாள்! அவள் சொன்னாள், "நாளைக்கு கப்பல் போகுதாம்! நான் கட்டாயம் நாளைக்குப் போயிருவன், விடியக்காலமையே வெளிக்கிட்டிருவன், ஏதும் தம்பி கிறீஸ்துராசா வருத்தம் புடிச்சு வேலையும் செய்யேலாம நல்ல சாப்பாடு உடுப்பும் இல்லாம விசரன்மாதிரித் திரியுறான். எண்டு கேள்விப்பட்டனான், ஏன் நீயும் தானே சொன்னநீ! நானொரு ஐயாயிரம் ரூபாதறான் அவனிட்ட கொண்டேய் குடு. நல்ல சாப்பாட்டா திண்டு நல்ல 'சாரம்', 'சேட்ட' வாங்கி, வைத்தியத்தைச் செய்து நல்ல மாதிரி இருக்கச் சொல்லு!" என்று சொன்ன மரியம்மா காசையும் கொடுத்து அனுப்பினாள்! அவளும் பயணம் சொல்லி போய் விட்டாள்.

இதைப் பார்த்துக் கொண்டிருந்த மரியநேசன் ஆசிரியருக்கு புண்டுபுண்டு வெடித்தது! ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு அமைதியாகவே கேட்டார், "யோகமலர் உனக்கு நெருங்கின உறவு, ஒன்று விட்ட சகோதரம், ஒன்றாகப் பள்ளிக்கூடம் போய் கட்டிப்பிடிச்சுக் கொண்டு திரிஞ்ச நாங்கள் எண்டு நீதான் சொல்லுவாய்! அவள் என்ன கஸ்டப்பட்டு ஊரில இருந்து அனுமதி எடுத்து கப்பலுக்குப் பதிஞ்சு நம்ம ஊருக்கு வந்து, கொழும்புக்குப் போய், விமான மெடுத்து இந்தியாவுக்குப் போய்,. அங்க வசதிவாய்ப்புகள் இல்லாத அகதிமுகாமில கிடந்து, தன்ர மகளுக்கு பிரசவக் கடமைய முடிச்சுக் கொண்டு, மீளவும் விமானத்தில கொழும்பு வந்து இங்கே வந்து யாழ்ப்பாணம் போக கப்பலப்பாத்து நாயா அலையுறாள், இவ்வளவுக்கும் எவ்வளவு கஸ்ரப்பட்டிருப்பாள்! எவ்வளவு காசு முடிஞ்சிருக்கும்! போறதுக்கும் கைச் செலவுக்கு காசு இருக்குதோ தெரியாது! அப்படி இருக்கக்குள்ள, நீ என்னடா எண்டா, கலியாணத்துக்குச் சொல்லல்ல எண்ட ஒரு காரணத் துக்காக ஒரு நேரச் சாப்பாடு கொடுக்க மனசுவரல்ல உனக்கு! பழிவாங்கிப் போட்டாய்! இப்படிப்பட்ட உனக்கு, அவளிட்ட உதவிய எதிர்பார்க்க என்ன தகுதி இருக்கு? தம்பி யாருக்கு காசு கொடுத்தனுப்புகிறாய் அவளிட்ட! தவக்காலமாம்! உபவாசமாம்! மண்ணாங்கட்டியாம் எல்லாம். இது என்ன கூத்து!"

ஆசிரியரின் பேச்சைக் கேட்டு அவன் திணறினாள்! பதிலுரிக்க முடியாமல் திக்குமுக்காடினாள்! என்றாலும் வாதென்று வந்துவிட்டால் விட்டுக் கொடுக்கும் மனம் அவள் பரம்பரையிலேயே இல்லை! அதிலும் மூன்றங்குல நாவால் ஆறடி மனிதனையே வீழ்த்திவிடும் பெண்குலத்தில் இருந்து வந்தவள் அல்லவா! விடுவாளா! "ஏன் இப்ப நான் உபவாசம் இருக்கிறதையும் அவளுக்குச் சாப்பாடு குடுக்கிறதையும் ஒண்டாச் சேர்க்கிறீர்! தவக்காலத்தில வேதக்காரர் எண்டு இருந்தா உபவாசம் இருக்கிறது ஒரு சந்திபிடிக்கிறது ஊர்வழக்கம்! இவள் எனக்குமட்டும் சொல்லாதத நான் செய்து தான் காட்ட வேணும்! அப்பதான் உணருவாள்! அதுவேற இதுவேற அத இதுக்குள்ள கொண்டுவராதேயும் எனக்கு கெட்ட கோபம் வரும்!" அவளுக்கு 'பிரஸர்' சாப்பாடும் இல்லாமல் கிடந்தவள், படபடப்பாகப் பேசினாள்!

"இந்த தவக்காலம் உபவாசம் எண்டு எல்லாம் ஏன் ஏற்படுத்தினாங்கள் தெரியுமா? மனதில பழிவாங்குற எண்ணங்கள் கெடுதியான சிந்தனைகள் இல்லாமல் மனதபண்படுத்துறதுக்குத்தான் புண்ணியகருமாங்களில் மனச வழிப்படுத்துறதுக்காகத்தான் மனம் திருந்தாமல் எல்லோரும் செய்யுறாங்கள் எண்டு நீயும் பெருமைக்கு வேஷம் போட்டு நடிக்கிறாய். எல்லாம் நாடகம் தான்"

"நீர் ஏன் அவளுக்கு சாப்பாடு குடுக்க இல்ல எண்டு கொதிக்கிறீர் ஓகோ இப்பதான் விளங்குது! முந்தி அவளோட இருட்டுக்க நிண்டு கதைச்சி கதைச்சி குலாவி அதுபெரிய பிரச்சனையா வந்துதானே! நான் உம்மையும் கூட்டிக் கொண்டு இங்கால வந்த நான்! அந்த இனிப்பில தான் அவளுக்காக கதைக்கிறீர் என்ன, இப்பவும் அந்த நினைப்பு இருக்கு என்ன! கேவலம் கெட்ட மனுஷா!"

இந்த நெத்தியடியோடு பாவம் அவர் கதிகலங்கிப் போனார்! வாழ்நாள் பூராவும் நேர்மையாய் வாழ்ந்தார் யார் தான் இருக்கிறார்கள்? மகாத்மா காந்தியும் இல்லையே! எப்பவோ இருபத்தைஞ்சோ முப்பதோ ஆண்டுகளுக்கு முன்னம்

தெரிந்தோ தெரியாமலோ செய்த பிழையை இப்பவும் சமயம் பார்த்து குறிதவறாமல் இலக் காகத்தாக்கியிருக்கிறாளே! கெட்டிக்காரிதான்! வாய்ச்சண்டையில் பெண்களை வென்றதாக சரித்திரம் இல்லையே! இவர்கள் எப்பவோ நடந்த குற்றங்களை இப்போ முன்வைப்பது, கண வனைத் திருத்த வேண்டும் என்ற கழிவிரக்கத் தினாலா? தாக்கி விழுத்த எடுத்த ஏவாயுதமா!

அவர் அனுங்கும் குரலில் முணு முணுப்பாக சொன்னார், "நீ ஞாபக மறதியெண்டு நெடுகப் புலம்புவாய். நீங்க நல்லதுகள விட்டுப் போட்டு கெட்டதுகளைத்தான் ஞாபகத்தில வைச்சிருப் பீங்கள். எப்பவோ நடந்துதோ, நடக்கல்லையோ ஆரறிவார் எண்டு மறந்துபோன விஷயத்த, இப்ப ஞாபகமாக கிளறி எடுத்து தாக்குதல் நடத்துறாய்! அதுக்குப் பிறகு நான் செய்த நன்மையான காரியமெல்லாம் மறந்து போனாய்! நீங்க ளெல்லாம் என்ன மனிஷரப்பா! கோயில் கோயிலாத் திரியுறீங்க நல்லாச் செபம் சொல்லுறீங்க! எல்லா நியமங்களையும் கடைப்பிடிக்கிறீங்க! நாக்குச் சுத்தமில்ல! உங்கட உபவாசத்தால ஒரு பிரயோசனமுமில்ல!" என்று வரவர ஏறிய குரலில் பேசிக் கொண்டு வந்தவர், மிக உறுதியான குரலில் சொன்னார்.

"இனி தவக்காலம் எண்டு சொல்லி ஊருக்கு வேஷம் போடுற வேலைய விட்டுப் போடு! இனிதவக் காலம் வந்தா உபவாசமெண்டு சாப்பாடு இல்லாம கிடக்காத, மௌன விரதத்தக் கடைப்பிடி! அதுதான் உன்ரமனதப் பக்குவப் படுத்தும்! வீட்டிலயும் அமைதிய கொண்டு வரும்!

என்று சொன்ன ஆசிரியர், அவசரமாகத் தன் குறிப்புப் புத்தகத்தில் இப்படி எழுதினார்.

"குடும்ப அமைதிக்காக கடுந்தவம் ஆற்ற வேண்டா சுடும் நாவை அடக்கினாலே போதும்"

...

## ஏ.இக்பாலின் இரு கவிதைகள்

### இருட்டடிப்பு

சூரியன் சுழன்றது
பூமியும் சுழன்றது
ஆளையாள் சுற்றினர்
நாளைத்தான் எண்ணினோம்!

***

நாமதை எண்ணி
தேர்ந்தொரு கோட்டினில்
பூமியைச் சுற்றிய
சூரியச் சுழற்சியில்
நாளினை வருடமாய்
நானிலம் தந்தது!

பூமியும் இளமைதான்
சூரியன் இளமைதான்
சேர்ந்த இக்கிரகங்கள்
சேர்ந்தவை இளமைதான்
உயிரினம் வயதாகி
ஊமையாய்ச் செத்தன!

### கொள்கை

சித்திரம் ஒன்று சிறப்புடன் தீட்டினேன்
அற்புதம் அசைந்து உயிர் பெற்று வந்தது!
வித்தைகள் கண்டுநான் வியப்பில் அதிர்ந்திட்டேன்!
நத்தை போல் ஊர்ந்தது நுணுகியே நோக்கினேன்!

கற்பிக்கவில்லை கவலை உனக்கல்ல
கற்பவர் தேடுவார் அதைவிட்டு நீபெரும்
அற்புதம் செய்துயர் அறிவொளி கூட்டினாய்
இச்செயல் விரும்பாதோர் உனக்கெதிராகினர்!

அறிவினை நேசித்து அறிவினை ஊட்டினாய்
அறிவுற்ற போக்கினை அமைதிப்படுத்தியோர்
பறிபோனதென்று பதறி விழுந்தனர்
குறிவைத்துத்தாக்குதல் குறைவற்று நடந்தது!

இதையும் புரியாது இன்னும் பெருவிழாப்
புதைபொருள் போல போற்றி நடத்தினாய்
கதையை முடித்தனர் கட்டியங் கூறினர்
நீதியை இருப்பதைக் கொள்கை நிமிர்த்துமா?

# கல்வியில் பால்நிலை பாகுபாடு

யுகமாயினி

காலணித்துவ காலத்திலிருந்தே பெண்களின் மேம்பாட்டிற்கு கல்வி முக்கிய பங்காற்றி வந்துள்ளது. பெண்களின் கல்வி ஒழுங்கமைப்பாக மரபிழுற் பள்ளி களிலான ஒன்று கூடல் இருந்த காலம் தொட்டுத் தான் மழுங்கடிக்கப் பட்டிருந்த பெண்ணின் சிந்தனைக் கருவூலம் சிறகடிக்க ஆரம்பித்தது. அக்கால கட்டத்தில் அனுபவசாலிகளான மூதாட்டிகளிடமிருந்து அடுத்த தலைமுறைப் பெண்கள் அறிவையும் குடும்ப நுட்பங் களையும் கற்றுக் கொண்டனர். உபகதைகள், பழமொழி கள், நாட்டாரியல்கள், தமிழ் நெடுங்கணக்கு வாய்ப்பாடு உட்பட அடிப்படைக் கணிதம் முதலியவை வாய்மொழி யாகவே கையளிக்கப்பட்டன. மணலில் எழுதிக்கற்கும் முறையும் அவ்வப்போது கடைப்பிடிக்கப்பட்டாலும், திண்ணைக் கல்வி வாய்ப்பு கூட பெண்களுக்கு நெடுங் காலமாகக் கிட்டவில்லை. வீட்டுத் தொழில் நுட்பமாக மாலை கட்டல், பன்னவேலை, பின்நாளின் தையற் கலை முதலானவற்றை செய்முறை அனுப வங்களுடன் கற்றல் முறை இடம் பெற்றது. கால ஓட்டத்தில் பெண்களின் மேம்பாட்டுக்கு கல்வியும் பாடசாலைகளும் பெரும் பங்காற்ற ஆரம்பித்தன. இதனால் வீட்டுக்குள் அடக்கி வைக்கப் பட்டிருந்த பெண் சமூகத்தளத்தில் இணைந்து பங்காற்றும் வாய்ப்பும் படிப்படியாக ஏற்பட்டது.

பின் காலணித்துவ சுழலில் ஏற்பட்ட கல்வி வாய்ப்பு அதனை அடிப்படையாகக் கொண்டு மேலும் மேலும் மேம்பாடு காணும் கலாசாரமாகவும் பரிண மித்தது. எனினும் இன்று வரை பெண்ணிய இலக்கு களை அடைவதில் கல்வி முழுமையாகப் பங்காற்ற முடியாமலிருக்கின்றது. நுணுகி ஆராயும் போது சமூக நிலையிலும், பொருளாதார நிலையிலும் பெண்கள் ஆண்கள் மீது தங்கியிருப்பதற்கான கல்வியும் விழுமியங்களும் தான் தொடர்ந்து நடைமுறையில் உள்ளவையே காரணம் என்பது புரிகின்றது. இந்த நிலையில் நடைமுறையில் உள்ள கல்வியின் பால் நிலை பாகுபாடு தொடர்பான ஆழமான ஆய்வுகளும் மாற்றங்களும் வேண்டப்படுகின்றன.

இலங்கையில் ஆசிரிய சேவையில் கணிசமான பெண்கள் இருக்கின்றனர். ஆரம்பக்கல்வி, முன்பள்ளி ஆகியவற்றில் பெண்களை ஆக்கிரமித் துள்ளனர். எனினும் இவர்கள் பாரம்பரியமாகத் தொடரும் ஆணாதிக்க மயப்பட்ட கல்வியையே போதிக் கின்றனர். இதனால் இவ் ஆசிரியைகள் தமது பால்நிலை நல நோக்கைத் தீர்மானிக்கும் பாத்திரமாற்றும் வகையில் தொழிற்பட முடியாதவர்களாகவே பணிபுரி கிறார்கள். காலாதி காலமாக செல்வாக்குச் செலுத்தும் ஆண் மேலாதிக்க வயப்பட்ட யாவும் இன்றும் நடை முறையில் உள்ளமையால், பெண்ணிய நோக்குடனான கல்வி அணுகுமுறை அசாத்தியமாகவே இருந்து வருகிறது. பெண் ஆசிரிய வாண்மையினர் நோக்கில் கல்வித்திட்டமிடல், பாடசாலை முகாமைத்துவம் முதலான எவையும் நோக்கப்படுவதில்லை. இன்றைய தேவைபால் நிலை பாகுபாடற்ற கல்வி முறை தான்.

இன்று ஆணுக்கு நிகரராக பெண்ணும் கல்வி கற்கிறாள். மலையக தொழிலாளர், முஸ்லீம் இனத்த வர்கள் மத்தியில் இன்னும் சற்று இடை விலகல் இருக்கின்ற போதும் எண்ணிக்கையில் கல்வி கற்கும் பெண்கள் சமநிலையை எட்டியுள்ளனர், எனலாம். எனினும் கற்கை நெறியில் சமத்துவத்தை எட்டாதது பின்னடைவாக உள்ளது. கல்விச் செயற்பாடுகள் பால்நிலை தொடர்பான சரியான புலக் காட்சியை ஏற்படுத்துவதில் பின்னடைந்து நிற்பது சுட்டிக் காட்டப் படுகிறது. இன்று உலகளாவிய ரீதியில் பெண்ணிலை வாதம் சார்ந்த விழிப்புணர்வும், விவாதங்களும் ஏற்பட ஏதுவாக இருந்த கல்வியில் இன்றுவரை பால் சமத்துவ நிலையான அணுகுமுறை ஏற்படவில்லை என்பது எவ்வளவு துர்ப்பாக்கியமான விடயம்! இன்று இது உணரப்பட்டு பால்நிலை சமத்துவத்தின் அடிப்படையான அம்சங்கள் கல்வித்துறையிலும் உள்வாங்கப்படும் ஆரோக்கியமான நிலை தென்படுகிறது. கல்வியிலும், ஆசிரியவாண்மையும் ஆணியமயப்பட்டிருக்கும் நிலைமாறி, பெண்ணிய நோக்குவயப்பட்ட சிந்தனை முறையாகவும் பால் அசமத்துமின்றி மேற்கொள்ளப் படவேண்டும் என்ற கருத்தை பெண்ணியத்தை ஆங்கீ கரிக்கும் கல்வியியலாளர்கள் வலியுறுத்துகின்றனர். கல்வியில் பால்நிலை சமத்துவத்தை ஏற்படுத்துவதன் மூலம் மானுடத்தின் விடுதலையையும் எட்டமுடியும்.

சமூக இருப்புடன் இணைந்து காணப்பட்ட பால்நிலை தொடர்பான கல்வி, தமிழர்களது பண்பாட்டுச் சூழலில் பன்முகம் கொண்டதாக இருந்தது. உயர்கல்வி மற்றும் பொதுக்கல்வி ஆண்களுக்கே, அதுவும் உயர்மட்ட, மத்திய தரத்தினருக்கு மட்டுமே என்ற நிலை தளர்வடைந்து பெண்களுக்கிருந்த ஒதுக்கல் நிலையில்

மாற்றம் ஏற்பட்டது. எனினும் சமூக நிலையில் பெண்கள் ஆண்கள் மீது தங்கியிருப்பதற்கான கல்வியும் விழுமியங்களுமே கையளிக்கப்பட்டது. ஆணாதிக்கத்தை தொடரும் வழிமுறைகளாகவே தொடர்ந்து கல்வி இருந்து வருகின்றமை கண்கூடு.

ஆரம்பத்தில் குடும்பத்துள் பிள்ளைகளில் உருவாக்கப்படும் பெண்கள் மற்றும் ஆண்களுக்குரிய நடத்தை ஒழுங்குகள் பின்னர் பாடசாலை மட்டத்தில் சமுகத்தால் கட்டுடமை செய்யப்படும் போது பாடசாலையும் கல்வியும் இதில் பெரும் பங்காற்றுகின்றன. ஆண் - பெண் சமத்துவ அசமத்துவ அமிசங்கள் இயல்பாகவோ இயற்கையானவோ அன்றி கட்டுடமை செய்யப்படும் ஓர் அம்சமே. புலப்படும் வெளிப்பாடுகளாகவும் புலப்படா வெளிப்பாடுகளாகவும் இரு பரிமாணங்களில் கல்வியிலும் ஆணதிக்கம் நிலை நிறுத்தப்படுகிறது. புலப்படா அறிக்கைநிலையில் அருவச் சிந்தனைகளுடன் இணைந்தும் உணர்வுப்படு நிலையில் அறநியாயித்தலுடன் சார்ந்ததாகவும் இவை வெளிப்படுத்தப்படுகின்றன. மாற்று சிந்தனைகளுக்கு இதில் இடமளிப்பதில்லை.

மரபு வழிக்கல்வி என்பது மாற்றுச்சிந்தனைகளுக்கு இடமளிக்காததாக பெண்சமத்துவத்தை மறுப்பதாக இருந்த நிலையில் மரபு வழி அறிக்கைக் கோலங்களுக்கு மாற்று வகையாக மார்க்சிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டபோது கல்வி முறையிலும் மாறுபட்ட வகையிலான மீளமைப்பை கோரி நின்றது. உழைப்புடன் இணைந்த செயற்பாடுகளாக மொழியும் சிந்தனையும் தருக்க அறிமுறைகளும் மூளையின் பன்முக ஆற்றல்களை வளர்த்து கொள்ள முடிந்தது. அந்நியமாதலின் பறிப்பு நிலை உணரப்பட்ட போது அதன் இலக்கிய பண்பாக பெண்களை சுரண்டுவதும் வெளிப்படை, ஆகியது. இவ் அம்சங்கள் யாவற்றையும் உள்ளடக்கியதான மாற்றம் ஒன்று கல்வியிலும் உணரப்படுகிறது. பெண் நிலை சார்ந்த சுரண்டலிலும் அந்நியமாதலிலும் கூரிய அணுகு முறைகளை குவியப்படுத்தலை தடுக்க கல்வி முறையில் பால் சமத்துவ முறை இன்றியமையாததாகிறது. ஆண்களின் மேலாதிக்கத்தையும் பெண்களின் இருப்பியத்தின் இன்மையையும் மாற்ற வேண்டியது கட்டாயமாகும்.

பெண்களை பொறுத்த வரை பாரம்பரியமாக தொடரும் கல்வி முறையில் உடல் முதிர்ச்சிக்கும் உளமுதிர்ச்சிக்கும் இடையே முரண்பாடான நிலைகளையே சமூகம் ஏற்படுத்திய வண்ணம் இருக்கிறது. பெண்கள் சுரண்டலுக்கு தன்னிலை யாக்கத்தை ஊறுபட்ட வகையில் உருவாக்கிக் கொள்ளும் நெருக்குவாரங்களை கல்வி முறை ஏற்படுத்தாது பார்த்துக் கௌ்ள வேண்டியது காலத்தின் தேவை. வாழ்கை கோலங்களை உருவாக்கும் கல்வித் துறையிலும் முதன்மை நிலையில் ஆண்களுக்கு நிகராக பெண்களும் செயற்பட வேண்டும்.

மனித இருப்பை மாற்றியமைக்கும் வினைத்திறன் கொண்ட உழைப்பு செயற்பாட்டில் கல்வியின் பங்கு மிகவும் முக்கியமானது. ஞானக் கண்ணே உலகை தரிசிக்க வைக்கிறது. இந்த தரிசனங்கள் ஊடாக ஒரு சமத்துவமான சமுதாயம் உருவாக வேண்டுமானால் கல்வியில் மாற்றங்கள் தேவை. மதம் பண்பாடென்று பழைய பல்லவியை பாடிக்கெண்டிருப்பதை விடுத்து அனைத்தையும் நுணுகி ஆராயும் திறனை வளர்த்துக்கொள்ள வேண்டும். தீய பார பட்சமான அம்சங்களை பொறுத்தவரை பழையன கழிதலும் நல்ல பாரபட்சமற்ற விடயங்களை பொறுத்த வரையில் புதியன புகுதலுமாக நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற வேண்டும். சமுகத்தினதும் பெண்களினதும் இருப்பை மாற்றி அமைக்கும் ஆரோக்கியமான கல்வியியல் அவசியமாகிறது. இன்று இவ் வழியில் தள மாறுகைக்கல்வி முறை முன்னெடுக்கப்படும் சூழ்நிலை உருவாகி வருகிறது.

இன்றைய ஆய்வாளர்கள், கல்வியும் பெண்கள் மீதான வன்முறையும் இடையுறவு கொண்டுள்ளமையை தெட்டத் தெளிவாக கூட்டிக் காட்டுகிறார்கள். காலம் காலமாக பெண் பற்றி உருவாக்கப்பட்ட படிமங்களை மீள் பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய கல்விமுறையின் தேவை உணர்த்தப் பட்டு வருகின்றது. கல்வி நிர்வாகத்திலே காணப்படும் ஆண் மேலாதிக்க வலிமை பெண்களிடத்தில் எதிர்விளைவுகளையே ஏற்படுத்தி வருகின்றது. இதைத் தகர்க்கும் வகையில் ஆண்மைய நூலியம் கட்டுமானக் குலைப்புக்கு உள்ளாக்கப் படுகின்ற அறிவுத்துணிவு தூண்டப்படுகிறது. இதன் உதாரணமாக பண்டைய இதிகாசங்களில் காப்பியங்களிலும், நீதி நூல்களிலும், பண்பாட்டு அம்சங்களிலும் பரந்து போயுள்ள பெண்ணியத்திற்கு எதிரான வார்ப்புக்கள் இனங்காணப்பட்டு, புலப்படுத்தப் படுகின்ற புதிய கருவூலங்கள் நவீன கல்வியில் தேவைப்படுகிறது.

விரிந்து நேர்நிலைக் கூர்ப்புடனும், மறைமுக நீட்டல்களுடனும் கல்விச் சுரண்டலுக்கு உள்ளாக்கப் படும் பெண்களுக்கு எதிரான அல்லது பால் சமத்துவத்தை நிராகரிக்கும் கல்விக் கட்டமைப்பில் மாற்றம் விரைந்து செய்யப்படாது விட்டால், அறிவின் உற்பத்தி பெண்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் அவலமான நிலையில் மாற்றம் காண்பது கடினம். சமூகத்தாற் கட்டுமை செய்யப்பட்ட பெண்கள் தொடர்பான மாய பிம்பங்களை உடைத்து உருக்குவதற்குரிய பெண்ணிய முன்னெடுப்புக்களில் பால் சமத்துவ கல்வி முதன்மையானது.

நூல் விமர்சனம்

# த.அஜந்தகுமாரின் "தனித்து தெரியும் திசை"

தேவமுகுந்தன்

பதினொராம் ஆண்டில் கல்வி கற்றபோது, அக்காலத்தில் வெளிவரத் தொடங்கிய "திசை" அறிமுகமாயிற்று. வழமையான பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றில் வெளியான இலக்கியப் படைப்புக்களை விட திசையில் வெளியான ஆக்கங்கள் வித்தியாசமான அனுபவங்களை ஊட்டின. சிறுகதை, கவிதை, விமர்சனம், பத்தி, சினிமா எனப் பல துறைகளில் ஈடுபாடுடைய மு.பொன்னம்பலம், அ.யேசுராசா என்போர் திசையின் ஆசிரியர் குழுவில் இருந்தமையே இவ்வித்தியாசத்திற்குக் காரணமென பிற்காலத்தில் உணர்ந்தேன். இச்சிறப்புமிக்க 'திசை' குறுகிய காலத்தில் தனது ஆயுளை முடித்துக் கொண்டமை இலக்கிய உலகுக்குத் துரதிர்ஷ்டமே.

சிறந்த சிறுகதைக்கு உதாரணமாக பேராசிரியர் கா.சிவத்தம்பியினால் விதந்துரைக்கப்படும் 'கோசலை' முதலில் 'அலை'யில் வெளியாகியிருந்தாலும் சிறுசஞ்சிகைச் சூழலில் பரிச்சயமற்றிருந்த சாதாரண வாசகர்கள் திசையின் மூலமே அக்கதையை வாசிக்கக் கூடியதாயிருந்தது.

ரஞ்சகுமாரின் 'கோளறுபதிகம்', மு.தளைய சிங்கத்தின் 'இரத்தம்', சாந்தனின் 'கிருஷ்ணன் தூது'. நந்தியின் 'கேள்விகள் உருவாகின்றன', போன்ற சிறந்த கதைகள் என விமர்சகர்களால் போற்றப்படும் சிறுகதைகள் புதிதாகவோ, மறுபிரசுரமாகவோ திசையில் பிரசுரமாயின.

ஏறத்தாழ இருபது வருடங்களின் பின் இக்கதைகளைப் பற்றிய மதிப்பீட்டை த.அஜந்தகுமார் எழுதிய 'தனித்துத் தெரியும் திசை' எனும் நூலின் வாயிலாக வாசிக்கும்போது, பழைய நினைவுகள் மனதில் எழுகின்றன. வடக்கு கிழக்கெங்கும் இந்திய 'அமைதிப்படை'யின் கட்டுப்பாட்டில் இருந்த காலகட்டம், தமிழ் தேசிய இராணுவத்திற்கு ஆட்களைத் திரட்ட வென இளைஞர்களை வலுக்கட்டாயமாக வான்களில் ஏற்றிய கால கட்டம், பாடசாலைகள் மூடப்பட்டு மாணவர் கள் வீடுகளில் முடங்கிக்கிடந்த காலம். இக்கால கட்டத் திலேயே யாழ்ப்பாணத்திலிருந்து திசை வெளியானது.

தனது பல்கலைக்கழக கலைமாணி ஆய்வுக்காக சமர்ப்பித்த ஆய்வுக்கட்டுரையை த.அஜந்தகுமார் நூலாக்கியுள்ளார். இந்நூலினைப் படிக்கும் போது, இவர் இந்நூலிற்காக பட்ட பிரயத்தனத்தை உணரமுடிகின்றது. இந்நூலினுள்

1. ஈழத்து சிறுகதை வளர்ச்சியில் பத்திரிகைகள்
2. திசை இதழின் கலை இலக்கியப் பங்களிப்பு
3. திசை சிறுகதைகளின் உள்ளடக்கமும் வெளிப்பாடும்
4. மதிப்பீடு

என நான்கு அத்தியாயங்கள் காணப்படுகின்றன.

முதலாம் அத்தியாயத்தில் ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் பத்திரிகைகள் எவ்வாறு பங்களிப்புச் செய்துள்ளனவென பொருத்தமான ஆதாரங்களுடன் நிறுவப்பட்டுள்ளது.




நூல் - தனித்து தெரியும் திசை

ஆசிரியர் - த.அஜந்தகுமார்

வெளியீடு - புதிய தரிசனம்

விலை - 200/=

ஈழத்து சிறுகதை வளர்ச்சியில் பத்திரிகை எனும் உபதலைப்பில் உதயதாரகை, ஈழகேசரி, மறுமலர்ச்சி, சுதந்திரன், ஈழநாடு, வீரகேசரி, தினகரன், சஞ்சீவி, முரசொலி, திசை, சரிநிகர், தினக்குரல் ஆகிய பத்திரிகைகள் ஈழத்து சிறுகதை வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்துள்ளவென விளக்கப்பட்டுள்ளது. 1998இல் இருந்து வெளியாகும் தினக்குரல் என அஜந்தகுமார் குறிப்பிடுவது தவறாகும். உண்மையில் தினக்குரல் 1997 இல் இருந்து வெளியாகிறது. இந்நூலுக்கு அடுத்த பதிப்பு வெளியாகுமெனின் இச்சிறுதவறு சீர்செய்யப்படுதல் வேண்டும்.

ஈழத்தில் பிரதேச பத்திரிகைகளின் தோற்றம், திசை வெளியான சூழல், திசையின் நோக்கம், திசையின் உள்ளடக்கம் என்பவற்றை திசை இதழின் கலை இலக்கியப் பங்களிப்பு என்ற அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளன.

கலைச்சாரல், தூவானம், இளவட்டம், கவிதைகள், மொழிபெயர்ப்புக் கவிதைகள், மொழி பெயர்ப்பு நாடகங்கள், குறுநாவல்கள், சிறுகதைகள், போன்ற அம்சங்கள் திசையின் கலை இலக்கியப் பங்களிப்பாக அமைந்தன. இவற்றை அஜந்தகுமார் உதாரணங்களின் மூலம் விளக்குகிறார்.

'திசை' சிறுகதைகளின் உள்ளடக்கமும் வெளிப்பாடும் என்ற அத்தியாயத்தில் 'திசை'யில் வெளியான சிறுகதைகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு உள்ளன. இனப்பிரச்சினை தொடர்பாக திசையில் வெளியான சிறுகதைகளை இராணுவச் சூழல், போர்க்காலச் சூழலும் பெண்ணும், போர்ச்சூழலும் சிறுவர்களும், இயக்க உருவாக்கமும் முரண்பாடுகளும், இனப்பிரச்சினையும் மனிதநேயமும், போரும் இசைவாக்கமும், புலம்பெயர்வு சாதகம் - பாதகம் எனப்பகுத்து அவற்றை விளக்குகிறார்.

'சமுதாயப்பிரச்சினை' எனும் தலைப்பின் கீழ் 'திசை'யில் வெளியான சிறுகதைகளை ஆண் - பெண் உறவுச் சிக்கல்கள், சமூகமும் பெண்ணும், சமய விமர்சனம், சாதி, வேலைத்தளப் பிரச்சினைகள், நகர வாழ்வு அந்நியம், நெருக்கீடுகள் ஆகிய தலைப்புக்களில் பகுக்கப்பட்டு இவ் அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

'திசை' வெளியான காலகட்டத்தில் ஈழத்தில் வெளியான ஏனைய பத்திரிகைகள் பிரசுரித்த சில சிறுகதைகளை உதாரணமாய் காட்டி அவற்றிலிருந்து திசையின் கதைகள் எவ்வாறு உயர்ந்து நிற்கின்றன வென விளக்கப்படுகின்றது.


இறுதி அத்தியாயத்தில் 'திசை' சிறுகதைகள் பற்றிய மதிப்பீடு முன்வைக்கப்படுகின்றது. ஒன்றரை வருடகாலம் வெளிவந்து தனது 69 இதழ்களில் 46 சிறுகதைகளை பிரசுரித்த திசையானது 20 இற்கும் மேறபட்ட மிகத்தரமான கலாபூர்வமான சிறுகதை களைப் பிரசுரித்ததன் மூலம் தனது காத்திரமான தன்மையினால் உயர்ந்தும் தனித்தும் நிற்பதாக 'திசை' பற்றிய தனது மதிப்பீட்டை அஜந்தகுமார் முன் வைக்கிறார்.

இந்நூலின் பின்னிணைப்பாக திசையில் வெளியான சிறுகதைகளின் பட்டியல் வெளியிடப்பட்டு உள்ளது. மறுமலர்ச்சி சிறுகதைகள், சுதந்திரன் சிறுகதைகள், ஈழநாடு சிறுகதைகள், மல்லிகை சிறுகதைகள்... போல் திசை சிறுகதைகளும் தொகுக்கப் படல் வேண்டும். அவ்வாறு தொகுக்கும் போது திசையில் வெளியான சிறுகதைகளில் எவற்றை தவிர்ப்பது எவற்றைச் சேர்ப்பது என்ற குழப்பம் தொகுப்பாளருக்கு ஏற்படாது ஏனெனில் இக்கதைகள் யாவுமே தரத்தில் ஒன்றையொன்று விஞ்சி நிற்கின்றன.

'திசை'யின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியவரும் சஞ்சிகையாளர், சிறுகதை, கவிதை, விமர்சனம், பத்தி, சினிமா எனப் பல்பரிமாணங் கொண்டவருமான அ.யேசுராசா குறிப்பிடுவதைப் போல் அஜந்தகுமாரின் இந்நூல் புதியவர்களிடைளே 'திசை'யின் முக்கியத்துவத்தை கொண்டு செல்வதுடன் பழையவர்களின் நினைவுகளைச் கிளரச் செய்கின்றது.

வெறுமனே பல்கலைக்கழக ஆய்வுக்காக எழுதாமல் 'சீரியசாக' இந்நூலை எழுதி வெளியிட்ட த.அஜந்தகுமாரை பாராட்டாமல் இருக்கமுடியவில்லை.

## நூல் அறிமுகம்




நூல் -

மெய்ப்பாடு (அரங்கச் சஞ்சிகை)

காப்பாளர் -

கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி

வெளியீடு -

வெறுவெளி அரங்கக்குழு

நாடகமும் அரங்கக் கலைகளும்

நுண்கலைத்துறை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

விலை - 350/=

# எண்ணிலாக் குணமுடையோர் - 09

## யோகேஸ்வரி சிவப்பிரகாசம்

"என்ன கந்தராசா அண்ணை, சந்தைக்குப் போறியளோ? நான், கிராம அபிவிருத்திச்சங்க விசயமாய் உதிலை சிவகுமார் ஐயா வீட்டுக்குப் போறன். வாற கிழமை சங்கத்தின்ரை ஆண்டுப் பொதுக் கூட்ட மெல்லே? நீங்களும் அறிஞ்சிருப்பியள்தானே. சகல ஆயத்தங்களும் என்ரை பொறுப்புத்தானெண்டு ஐயா விட்டிட்டார். சங்க அங்கத்தவர்களுக்கு நன்மை தரக்கூடிய மூன்று திட்டங்களை அன்றைக்குச் செயற படுத்தப்போறம். சில விசேஷ நிகழ்ச்சிகளும் கூட்டம் நடக்கிற அன்று நடத்தவெண்டு ஒழுங்கு படுத்திறம்.

உங்களுக்குச் சொன்னாலென்ன இன்ன இன்ன விசயங்களை இப்பிடி இப்பிடிச் செய்யலாமெண்டு ஆலோசனை சொன்னது நான்தான். ஐயா, உடனை பொறுப்பெல்லாத்தையும் என்ரை தலையிலை போட்டிட்டார். என்ன செய்யிறது? எங்களின்ரை ஊர் நன்மைக்காகச் செய்யத்தானேவேணும். இந்த விசயமாய் ஓடித்திரியிறதிலை பாருங்கோ தாடியையும் வளரவிட்டிட்டன். எங்கை இதுக்கெல்லாம் நேரம்?'

ஈருருளியில் வந்துகொண்டிருந்த சண்முக நாதனை, தன் ஈருருளியில் இருந்தவாறே ஸ்கந்தராசா திரும்பிப் பார்க்கிறார்.

தாடியை வளரவிட்டிருந்தாலும் சண்முக நாதன் அணிந்திருந்த வேட்டி, மேற்சட்டை, சால்வை எல்லாமே கச்சிதமாக விருந்தன. ஆள் அதிக உயர மென்று கூற முடியாது. மாநிறம். முகத்திலும் தோற்றத்திலும் ஒரு பெரிய மனிதத்தோரனை.

'ஐயா இப்ப நாலு தரம் கோல் போட்டிட்டார். 'சண்முகநாதன் ஏனின்னும் வந்துசேரேல்லை?' எண்டு அரைமணித்தியாலத்துக்கொருக்கால் எடுத்துக் கேட்கிறார். சிவகுமார் ஐயாவுக்கு எந்தநேரமும் நான் பக்கத்திலை இருக்கவேணும். நீ என்ரை வலதுகை மாதிரி எண்டு சொல்லுவர்.

இந்தச் சிவராத்திரி அண்டு பாடசாலைப் பிள்ளைகளுக்குப் போட்டிகள் எல்லாம் வைச்சு பரிசு களும் கொடுத்தனாங்களல்லோ? அந்தப் போட்டி களெல்லாம் நான்தான் நடத்தி முடிச்சது. விழா அந்த மாதிரி நடத்தினனான். அதோடை அவருக்கு என்னை நல்லாய்ப் பிடிச்சுப்போச்சு.

அண்ணை, கந்தராசா அண்ணை, ஒரு விசயம் சொல்லுறன். உங்களுக்குள்ளை இருக்கட்டும். வேறை ஒருதருக்கும் சொல்லாதேங்கோ. இப்ப கிராம அபிவிருத்திச் சங்கத்தின்ரை ஆண்டுப் பொதுக்கூட்டம் வருகுதெல்லோ? அதிலை புதிய நிர்வாகசபைத் தெரிவு நடக்கும். அடுத்த தலைவராய் என்னைப் போடுற உத்தேசம் அவருக்கிருக்கு அதைச் சிலபேருக்குச் சொல்லியிருக்கிறாராம்.

சுந்தர மூர்த்தியிலை, அதுதான் இப்ப இருக்கிற தலைவரிலை அவருக்கு அவ்வளவு பிடிப்பில்லை. அங்கத்தவர்கள் அவரைப்பற்றிச் சரியான குறையாம். ஊரவைக்கும் அவரின்ரை நடவடிக்கைகள் திருப்தி யில்லை. இப்ப அங்கத்தவர்களெல்லாம் சேர்ந்து என்னைத் தலைவராய்ப் போட்டால் நல்லதெண்டு சொல்லுகினமாம்.

என்ன கந்தராசாண்ணை சிரிக்கிறியள்? நீங்கள் வேணு மெண்டால் ஊருக்குள்ளை கேட்டுப் பாருங்கோ. ஊராக்கள் கனபேருக்கு என்னைப் போடுறது தான் விருப்பம். நான் சொன்னான் எனக் கிந்தப் பதவி வேண்டாமெண்டு. எனக்கு உந்தத் தலைப் பாகை கட்டுறதிலை ஆசையில்லை. சனத்துக்குச் சேவை செய்யவேணும். ஊருக்கு உதவி செய்யிறத்துக் காகத்தான் நான் இதுகளிலை ஈடுபட்டுழைக்கிறது. உந்தப் பதவியாலை என்ன பிரயோசனம் சொல்லுங்கோ. இண்டைக்கு எங்கடை சனம் கஷ்டப் படுகுது. அவைக்கு உதவி செய்யவேணும். அப்பிடிச் செய்யேக்கை மனதுக்க ஒரு திருப்தி அதுக்காகத்தான் நான் கஷ்டப்பட்டு இதுகளைச் செய்யிறது. நீங்கள் என்ன சொல்லுறியள்?

சந்தை வந்திட்டு. நீங்கள் சந்தைப்பக்கந் தானே போறியள்? அப்ப நான் போய்ட்டு வரட்டே.

சண்முகநாதன் தனது பயணத்தைத் தொடர்ந்து சிவகுமார் வீட்டிற்குப் போய்ச் சேர்கிறார்.

"ஐயா, ஐயா"

சிவகுமாரின் மனைவிதான் கதவைத திறக்கிறார்.

"அவர் வெளியிலை போட்டார்"

அம்மாவே? ஐயா, காலையிலேயே வெளியிலை போட்டாரோ? நான் சங்கத்தைப் பற்றி அதுதான் எங்கடை கிராமமுன்னேற்றச் சங்கத்தைப் பற்றிக் கதைக்கவேணுமெண்டு காலமை தொடங்கி மூண்டு நாலுதரம் கோல் எடுத்தனான்.

"நீங்களே கோல் எடுத்தது? அவரில்லை யெண்டு சொன்னனான் தானே?"

"வந்திருப்பரெண்டு நினைச்சனம்மா, சங்கத்தின்ரை ஆண்டுப் பொதுக்கூட்டம் நடக்கப்போகுது."

"உதுகளை அவரோடை கதையுங்கோ. அவரிருக்கேக்கை வாருங்கோ. எனக்கு வேலையிருக்கு."

"இல்லையம்மா. நான் சொல்லுற இந்த ஒரு விசயத்தை மட்டும் கேளுங்கோ. சங்கத்துக்கு இந்தமுறை என்னைத் தலைவராய்ப் போடச் சொல்லி ஐயாவிட்டைச் சொல்லுங்களன். நான் சங்கத்துக்காக நல்லாய் வேலை செய்யிறனான். தெரியுந்தானே. நீங்கள் சொன்னால் ஐயா செய்வர்."

"நான் உந்த விசயங்களிலை ஈடுபடுகிறே இல்லை. அந்தா ஐயா வாறார். அவரோடையே கதையுங்கோ?"

சிவகுமார் உந்துருளியில் வந்திறங்குகிறார்.

"சண்முகநாதனே? என்ன இந்தப் பக்கம்?"

சண்முகநாதன் பணிவே உருவானார்.

"மகளின்ரை பிறந்தநாள். அதுதான் பலகாரம் செய்தனாங்கள். ஐஞ்சாறு மாம்பழமும்"

"இதுகளெல்லாம் என்னத்துக்குக் கஷ்டப் பட்டுக் கொண்டுவாறீர்?"

"இதிலையென்ன கஷ்டமையா?"

"இப்பிடி இரும்"

"பறுவாயில்லை ஐயா"

சண்முகநாதன் நின்றுகொண்டேயிருக்கிறார்.

"என்ன நிற்கிறீர். இருமன். எதாவது அலுவலோ?"

"இந்தச் சங்கத்தின்ரை ஆண்டுக்கூட்டத்தைப் பற்றிக் கதைக்கத்தான் வந்தனானையா"

"எந்தச் சங்கம்?"

"எங்களின்ரை கிராம அபிவிருத்திச் சங்கந் தானையா. இரண்டு மூண்டு திட்டங்கள் சொன்னனான். பிறகு பார்ப்பமெண்டு சொன்னனீங்கள்..."

"அதுகளைப் பிரேரணைகளாய் எழுதித் தாரும் சுந்தரலிங்கமும் கொழும்புக்குப் போனதாலை அதுகளைப் பற்றி அவரோடை கதைக்க முடியேல்லை."

"அதுகள் நல்ல திட்டங்களையா. இவர் சங்கத்திலை அக்கறையில்லாமல் இப்பிடித் திரியிற தாலை அங்கத்தவர்கள் குறை சொல்லுகினம்."

"ஆரப்பிடிச் சொன்னவை? என்னோடை ஒருதரும் கதைக்கேல்லை."

"கனபேர் கதைச்சவை நான் சொன்ன திட்டங்களை நடைமுறைப்படுத்தினால் தங்களுக்கு நல்லதெண்டு ஊர்ச்சனம் சொல்லுகினம்."

"உம்முடைய திட்டங்களை நடைமுறைப் படுத்த நிதிவளம் வேணுமே."

சிவகுமாரின் குரலிலே படிப்படியாக உஷ்ணம் ஏறுகிறது.

"நீங்கள் என்னைத் தலைவராய் விட்டுப் பாருங்கோ. நான் அதுகளை நடைமுறைப்படுத்திக் காட்டுறன்"

"எப்பிடிச் செய்வீருரெண்டு சொல்லுமன்!"

"என்னை விடுங்கோ. நான் செய்வன் ஐயா, நான் சுந்தரலிங்கம் போலையில்லை"

"உமக்கு ஒரு விஷயம் தெரியுமோ? சுந்தரலிங்கம் ஒரு பெரிய திட்டத்துக்கு நிதி ஒழுங்கு செய்யத்தான் கொழும்புக்குப் போனவர். போன காரியம் வெற்றியெண்டு அறிவிச்சிருக்கிறார். இதாலை ஊராக்கள் நூற்றைம்பது இருநூறு பேருக்கு உடனடியாக வேலை வாய்ப்பிருக்கு. பிறகு இன்னும் கூடலாம். அவர் வந்த உடனையே ஆண்டுவிழாவுக்கு முந்தியே, மளமள வெண்டு ஆகவேண்டியதைச் செய்யத் தொடங்கிற தெண்டு உத்தேசித்திருக்கிறார்."

சுந்தரலிங்கம் வந்த உடனை ஒரு வரவேற்புக் கொடுக்க எங்கடை ஊர்க்காரர் ஆயத்தப் படுத்துகினம். நீர் விஷயம் தெரியாமல் வேறை யென்னவோ சொல்லுறீர்."

"எதுக்கும் நான் சொன்னதை ஒருக்கால் யோசியுங்கோ நான் வரட்டே?"

சண்முகநாதன் போவதற்கு ஆயத்தமாகத் தன் ஈருருளியை எடுக்கிறார்.


## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 60/= ஆண்டுச்சந்தா - 1000/= வெளிநாடு - $ 35U.S

மணியோடரை அல்வாய் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய

பெயர்/முகவரி

**K.Bharaneetharan**
**Kalaiaham**
**Alvai North west, Alvai.**

வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்

K.Bharaneetharan
Hatton National Bank - Nelliady Branch
A/CNo.118-00-02-0945701-1

# பேசும் இதயங்கள்

(01) 21.2.2010ல் திருவிதாங்கூர் அரண்மனையில் உலகத்தமிழ் சிற்றிதழ்கள் சங்கத்தின் 5 வது மாநாட்டில் எனது மண்ணின் 'ஜீவநதி', 'இனிய மணா இலக்கிய விருதி'னை பெற்றுள்ளது. கலாமணி பரணீதரன் பணிகள் தொடர பாராட்டுக்கள். நான் புகுந்த வதிரி கிராமத்தில் ஆழக்கிணறுகள் - ஒலக்கப்பிகளாய் வாழ்வை கரைத்த நேரத்தில் பரணீதரன் ஜீவநதி இலக்கிய கேணியாகி நதியாக பாய்வது மகிழ்ச்சி. வதிரி, அல்வாய், திக்கம், புலோலியை சார்ந்த படைப்பாளிகள் இலங்கையின் சிற்றிதழ்களில் சூரியனாகி மிளிர்வது விஞ்ஞானத்தின் வெற்றியாகும். தங்களைப் பாராட்ட வடமராட்சி அல்ல யாழ் படைப்பாளிகள் முகமூடிகளை கழற்றி ஆவன செய்தல் வேண்டும்.

பூபதி புலேந்திரராஜா

(2) ஈழத்தின் கலை இலக்கிய செய்திகளை தாங்கிவருகின்ற சஞ்சிகைகள் பற்பல. அவைகளில் அவைகளின் ஆரம்பநிலைகள் பல தசாப்த்தங்களை அகவையாக கொண்டிருப்பதும் அறிந்ததொன்று. ஆனால் வடமராட்சி அல்வாயிலிருந்து வெளிவருகின்ற 'ஜீவநதி' எனும் இருமாத ஏடு இவ்வாண்டினில் மாதாந்த ஏடாக வெளிவருவது ஓரிரண்டு வயதினில் கண்டுள்ள இலக்கிய முதிர்ச்சியாக கொள்ள முடிகின்றது.

அவ்வகையிலான இலக்கிய பார்வையினால் ஈழத்தின் பலபாகங்களை சார்ந்த படைப்பாளிகளை உள்வாங்கிய ஓர் ஏடாக கணிக்கப்பட்டு தமிழ் நாட்டில் 21.02.2010 அன்று நடைபெறுகின்ற உலகத்தமிழ்ச் சிற்றிதழ்கள் மாநாட்டில் நான்கு இலங்கை சிற்றிதழ்களுக்கு விருது வழங்கும் வைபவத்தில் 'இனிய மணா இலக்கிய விருது' ஜீவநதி ஆசிரியர் கலாமணி பரணீதரன் அவர்களுக்கு டாக்டர் பாலசுப்பிரமணியன் அவர்களளால் வழங்கி கௌரவிக்கப்படுவது இலக்கிய உலகத்திற்கு மட்டுமல்ல, அல்வாய் மண்ணும் பெருமைப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அன்பான பரணீதரன் அவர்களை வாழ்த்துவதும் பாராட்டுவதும் இலக்கிய கடமையாகும். நீரில் வாழ்வனவற்றை நதி தாங்கி செல்வது போன்று ஜீவநதியும் காலத்தின் பதிவுகளாக வழங்கப்படுகின்ற இலக்கியங்களை சுமந்து ஓடுகின்ற இச் சஞ்சிகை இந்த பூமியில் இலக்கிய செழுமைக்கு தன்பங்காற்றும் என்பதில் ஐயமில்லை.

அல்வையூர் கே.ஆர்.திருத்துவராசா

3) எங்கள் ஜீவ ஊற்றுக்கு 'இனிய மணா' இலக்கிய விருதாம்
இனித்தது இதயம் உண்மை வென்றது
நிஜம் நிஜமானது சிறு பிள்ளை வேளான்மைக்கு
தாய் வீட்டின் அங்கீகாரம் தூற்றியோன் விழி பிதுங்க
முளையிலேயே பொசுக்கிவிட எண்ணியோர், முகம் கோண,
முத்திரை பதித்தது - ஜீவநதி தொடரட்டும் உன்பணி...

செ.க.தர்மதேவன் (அல்வாய்)

4) மிகக் குறுகிய காலத்தில் ஜீவநதிக்கு உலகத் தமிழ் சிற்றிதழ் சங்க விருது கிடைத்தமை பற்றி அறிந்த போது மகிழ்ச்சியே. இதை விட தங்களுக்கு புகழும் புளகாங்கிதமும் வேறுளதோ...? பாராட்டுக்கள். வர வர விடயங்களின் கனதி மாத்திரம் அல்ல, "லே அவுட்" கூட சிறப்பாக வடிவமைக்கப்படுகிறது.


கண.மகேஸ்வரன் (கரவெட்டி)

ஜீவநதி இதழ் 15இல் பக்கம் 13இல் வெளியாகிய "இலுப்பைப் பூவும் சக்கரையும்" என்ற கவிதையில் கடைசி ஒன்பது வரிகளும் பிழையாக அச்சுக் கோர்க்கப்பட்டுள்ளன. அதற்குப் படைப்பாளியிடமும் வாசகர்களிடமும் மன்னிப்புக் கோருகின்றோம்.

கட்டிடப்பொருட்கள், மிற்சுஜி சீமேந்து, Dulux (AkzoNobel)
பெயின்ற் வகைகள், என்பவற்றை மொத்தமாகவும்,
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஒரேஇடம்

# கஜமுகன்

# காட்வெயர்



147, 149, ஸ்ரான்லிவீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 2833

இச் சஞ்சிகை கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த.கலாமணி அவர்களால் சதாபொன்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது